


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுக சந்தி

## மணிவாணன்

TEA CONTROL DEPARTMENT
RECREATION CLUB
LIBRARY
BOOK No. 2743

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

S. B. SUNDA
CROSSETTE
CHUNDIKU
JAFF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YUGA SANTHI

by

V. K. RATNASABAPATHY
(Manivaanan)

*FIRST EDITION*

SEPTEMBER 1972.

*COPY RIGHTS*

FIRST EDITION RESERVED
WITH THE PUBLISHERS

PRICE Rs. 2/25

Published by:

VIRAKESARI
P. O. Box 160, COLOMBO.

Sole Distributors:

EXPRESS NEWSPAPERS (CEYLON) LTD.
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

இது மண்ணின் கதை. மண்ணைவிட்டுப் பிரிந்து அனுதைகளான மக்களின் கதை.

இந்நாட்டின் வரலாற்றிலே, கோரமான இனவெறி இரத்தக் கறை படிந்த ஒரு சகாப்தத்தின் பின்னணியில, வாழத்துடிக்கும் மக்களின் உணர்ச்சிப் போராட்டங்களை மையமாகக் கொண்டு மலர்ந்தது இச்சமூக நவீனம்.

இதில் வரும் பாத்திரங்கள், வாழ்க்கையிலே சாதாரணமாக நாம் சந்திக்கும் மிகவும் சாதாரணமான மனிதர்கள் தாம். இவர்களின் உணர்ச்சிகளும் அபிலாஷைகளும் சாதாரணமானவையே. இருந்தும் ஏழைக் குடும்பங்களில் பிறந்த இம் மக்களது, வாழ்க்கைப் பிரச்சினைகளையும், பலவீனங்களையும், உணர்ச்சிகளையும். இதயத் தூய்மையுடன் அணுகி, புரிந்துகொள்ளும் கண்ணேட்டம் எல்லோருக்கும் இலகுவானதல்ல.

இந்நூலின் ஆசிரியர், சமூகத்தின் கீழ்த்தளத்திலுள்ள மக்களுடன் வாழ்ந்து, பழகி, அவர்களின் மனவெழுச்சிகளையும், பலவீனங்களையும் நன்கு புரிந்துகொண்டுள்ளார். ஆதலினுல் அவரின் கதையோட்டத்திலும், கருத்திலும் ஒரு புனிதத்தன்மை இழையோடியிருக்கின்றது.

பலவித வண்ணங்களிலே அழகு காட்டும் மலர்களிடையே, முல்லையும் மொட்டவிழ்த்துப் பூத்துச் சிரிக்கின்றது.

வெண்மையில் கவர்ச்சியில்லாதிருக்கலாம். ஆனுல் வெண்மை தூய்மையானது, புனிதமானது என்பதை மறுப்பாரில்லை.

புனிதமான முல்லை மலரின் இனிய சுகந்தம் ஈழத்தின் இலக்கியப் பரப்பிலே தென்றலெனத் தவழ்ந்து வருகின்றது.

வரவேற்போம்!

15—9—72

வெளியீட்டாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் முன்னுரை

சாதாரண மனிதரது அன்ருட வாழ்க்கையோடும், அவர்களது இன்ப துன்பங்களோடும் பின்னிப் பிணைந்து, ஒரு சமூக அல்லது சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இலக்கியம் அமைவதோடு, சில உழுத்துப் போன பாரம்பரியங்களை மாற்றி அமைக்கின்ற கருவியாகவும், இலக்கியமும் எழுத்தாளனும் திகழவேண்டுமென்பதில் நான் திட நம்பிக்கை உளளவன்.

கனகம், பூரணம், சிவபாதம், பரமேஸ் ஆகிய பாத்திரங்கள் யாவும் சாதாரண குடும்பங்களில் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இத்தகைய ஒரு சமுதாய அமைப்பில் மாற்றம் ஏற்பட்டாலொழிய, அவர்கள் என்றைக்குமே இப்படியான ஒரு வாழ்க்கையில் அவலப்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்!

இந்நவீனத்தை தினகரன் வார மஞ்சரியில் தொடராக வெளியிட்ட அதன் ஆசிரியர் திரு. சிவகுருநாதன் அவர்களுக்கும், இப்போது புத்தக வடிவில் கொண்டுவந்துள்ள வீரகேசரி ஸ்தாபனத்தாருக்கும்— குறிப்பாக அதன் புத்தக வெளியீட்டுத்துறை நிருவாகி, திரு. பாலச்சந்திரன் அவர்களுக்கும் என் நன்றி!

முல்லைத்தீவு,

13-9-72.

மணிவாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

"கனகம்!"

"வாருங்க அக்கா!"

"அம்மா எப்படியம்மா இருக்கின்ருர்?"

"இன்னும் அதே நிலேதான் அக்கா. சாப்பாடு கூடச் சரியாயில்லே. இருந்திருந்துவிட்டுத் தன்பாட்டுக்கு ஒப்பாரி வைத்து அழுகிருர். அம்மா அழுவதைப் பார்த்துப் பரமேசும் கண்ணீர்விடுகின்ருள்."

"பரமேஸ் குழந்தைதானே அம்மா, அவளுக்கு என்ன தெரியும்? நாட்களாக எல்லாம் சரியாய்விடும்."

"ம்.. போன விஷயமெல்லாம் எப்படி அக்கா?"

"பார்க்கலாம் என்று சொன்ஞரம்மா. ஒரு பள்ளிக்கூடத்திலும் இப்போது இடமில்லேயாம். உன் அப்பா இறந்தது, குடும்பக் கஷ்டம் எல்லாவற்றையும் விளக்கமாகச் சொன்னேன். நான் சொன்னதைக் கேட்டு அவரும் இரக்கப்பட்டார். எங்காவது இடம் வருகின்றபோது பார்க்கிறேன் என்று சொன்ஞர்."

"சரி அக்கா, எப்படியாவது வேலே கிடைத்தால்தான் நல்லது. நாளாந்தப் பாட்டைப் போக்குவதே இப்போது பெரிய கஷ்டமாக இருக்கின்றது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்குத் தெரியும் அம்மா. கூடியவரை முயன்று பார்க்கலாம். அதற்கப்பால் நாம் என்னசெய்ய முடியும்?... எல்லாம் ஆண்டவன்விட்ட வழி. பரமேசை என்னம்மா செய்யப் போகின்ருய்?''

''அதுதான் அக்கா எனக்கும் கவலையாக இருக்கின் றது. இரண்டு தடவையாக எஸ்.எஸ்.ஸி. எடுத்தும் பாஸ் பண்ண முடியவில்லை. இனியும் அவள் பாஸ் பண்ணுவாள் என்று எனக்குத் தோன்றவில்லை. கணக்குப் பாடம் அவ ளுக்கு சுத்த சூனியமாக இருக்கின்றது.''

''சரியம்மா, வீட்டில் படிக்க வருகின்ற பிள்ளைகள் காத்துக் கொண்டிருப்பார்கள். இதனைச் சொல்லிவிட்டுப் போகலாம் என்றுதான் இப்போது அவசரமா வந்தேன்.''

''சரியக்கா.''

★

''பூரணம் அக்கா வந்துபோனதுகூட அம்மாளின் கவ னத்திற்குப் படவில்லை. சிலர் ''அம்மாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது'' என்று கூடக் கதைத்துக் கொள்கின்ருர் கள். எனக்கும் பயமாக இருக்கின்றது. அப்பா இறந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் இன்னும் அதே நிலை என் ருல்...? ஆண்டவனே, அப்படி ஏதாவதொன்று ஆகா மல் எங்களைக் காப்பாற்று. அருமை பெருமையாக இருந்த ஒரே ஒரு அண்ணனையும் வாலிபப் பருவத்தில் விட்டுப் பறித் துக் கொண்டாய். அந்த மட்டில் விட்டாயா...? எவரது உதவியுமற்று ஒரே ஒரு பற்றுக் கோடாயிருந்த அப்பாவின் மேலும் உன் கைவரிசையைக் காட்டிவிட்டாயே...! உனக்கு ஏன் இந்த அரக்கத்தனம்? பலமிழந்த எங்களை மாத்திரம் உயிரோடு வைத்து சித்திரவதை செய்யப் போகின்ருயா? உன்னைக் கெஞ்சிக் கேட்கின்றேன். உன் அசுரத்தனத்தை எங்கள் மீது உபயோகிப்பதை இனியாவது நிறுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள். எங்களால் தாங்க முடியாது. அடித்தாலும் அணைத்தாலும் எங்களுக்கு ஆதாரம் நீ தான். நாங்கள் கதியற்றவர்கள்.''

ஒரு காலத்தில் கஷ்டப்படுபவர்கள் இன்னொரு காலத்தில் நன்ருக வாழமுடியும் என்கிருர்கள். எனக்கும் இதற்கும் எந்தவித அர்த்தமுமேயில்லை. இப்போது வயது இருபத்தைந்தை எட்டிக் கொண்டு நிற்கின்றது. அன்றும் கஷ்டம்தான். இன்றும் அதே நிலைதான். அரை வயிற்றுக்குக் கூடச் சாப்பாடு சீராகக் கிடைப்பதில்லை. இந்த நிலையில் தான் என் சிறு வயது கழிந்தது. சாப்பாட்டிற்கே கஷ்டமென்ருல், மற்றவை எப்படி இருந்திருக்கும்? மற்றைய சிறுமிகளைப் போல் அழகாகப் பாவாடையும், சட்டையும் போட்டுக் கொண்டு பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. எனது அடுத்த வீட்டுச் சிறுமி ரேணுகாவைப் பார்க்கும் போதெல்லாம், ஆற்ருமையால் பெருமூச்சுவிடுவேன். ரேணுகாவின் தகப்பனும் அப்பாவைப் போல் கூலிவேலை தான். அப்படியிருந்தும் அவளுக்குக் கிடைப்பது போன்று எனக்கு ஏன் கிடைப்பதில்லை? எனக்குத் திருப்தி ஏற்படாத போதெல்லாம் என்னுள்ளேயே யோசித்துப் பார்ப்பேன். அப்போது எனக்கு ஒன்றுமே புரிவதில்லை. வயது ஏற ஏறத்தான் அதன் காரணம் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியது. அம்மாவும் அப்பாவும் எப்போது பார்த்தாலும் நாய்க்கடி பூனைக்கடிதான். குடும்பத்தில் ஏற்பட்ட இந்த அதிருப்தியை உணர்ந்து கொண்ட போது தான், எல்லாவற்றிற்கும் காரணம் அப்பாவின் குடிப்பழக்கமே என்று தெரிந்தது.

அப்பா குடிக்கின்ற நாட்கள் எல்லாம் வீட்டில் சண்டை நாட்கள்தான். கையில் அந்த நேரத்திற்கு என்ன அகப்படுகின்றதோ அதை எடுத்து அம்மாவை அடிப்பார். அது துருவுபலகையாக இருந்தாலும்சரி, விறகுக் கட்டையாக இருந்தாலும் சரி, அந்த நேரத்தில் அவருக்கெல்லாம் ஒன்றுதான். எனக்கோ ஒரே பயமும் நடுக்கமும்! அத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி உதைகளையும் பொறுமையோடு வாங்கிக் கொண்டு ஓர் எதிர்வார்த்தையும் பேசாது, தன்பாட்டிலேயே இருந்து கண்ணீர் உகுப்பதைத் தவிர, அந்த நேரத்தில் அம்மாவால் வேறொன்றும் செய்ய முடிவதில்லை.

அண்ணன் என்னிலும் பார்க்க ஒன்றரை வயது மூத்தவனாக இருந்தான். அவனுக்கும்கூட அந்த வயதில் என்நிலைதான். பயத்தினால் மூலைக்குமூலை இருவரும் இருந்து பதுங்கிக் கொள்வோம். அவனுக்கும் நடுக்கம்தான். ''அப்பாவின் கண்ணில் படாமல் எங்காவது போய் ஒளிந்திருப்போமா...?'' என்பான். என்னிலும் பார்க்க அவனுக்கு அப்பாவிடம் கூடுதலான பயம். சிலவேளைகளில் அப்பாவின் கோபம் அவன் பக்கமும் திரும்பிவிடும். அவனுக்கும் அடிதான். ஏதாவது ஒரு சின்ன காரணத்தை வைத்துக் கொண்டு அவனையும் அடிப்பார். அதை உடைத்தாய் இதை உடைத்தாய் என்பனதான் காரணங்களாக இருக்கும்.

பரமேஸ் எனக்கு எட்டுவருடம் பிந்திப் பிறந்தமையால், ஓரளவுக்கு நான் அப்பாவின் செல்லப்பிள்ளையாக இருந்து வந்தேன். அதுவும் எனக்கு அடிவிழாத மட்டில்தான். குடிமயக்கம் கூடிவிட்டால் சில வேளைகளில் என்னைத் தூக்கி மேலே உயர்த்துவதும், கையில் வைத்துக் கொண்டு கீச்சிமாச்சிச்செம்பளம் சொல்லி,விளையாகச் சுற்றுவதுமாயிருப்பார். அவர் அப்படிச் செய்கின்ற ஒவ்வொரு வேளையும் நான் பயத்தால் துடித்துக் கொண்டிருப்பேன். அழுகை வந்தாலும் கூடத் தெண்டித்து அடக்கிக் கொள்ளத்தான் முயல்வேன். அழுதால் அடிவேண்டவேண்டி வந்துவிடுமோ என்ற பயம்.

பத்தாவது வயதுக்கு அப்புறம் அண்ணன் பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகச் செல்ல முடியவில்லை. அவனும் எங்காவது கூலி வேலைக்குப் போக வேண்டியதாய் இருந்தது. பன்னிரண்டாவது வயதுவரை வேலைக்குப் போகின்ற நாட்களைத் தவிர, ஒழிந்த வேளைகளில் பள்ளிக்குப் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான். அதற்கப்புறம் அப்பா அவனை அடியோடு பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் தடுத்துவிட்டார். என்னையும் போக வேண்டாம் என்று சொல்லிவிடுவாரோ என்ற பயம் எனக்கு. அப்பாவின் கவனத்திற்கு நான் படாதிருந்தால், அப்படிச் சொல்லமாட்டார் என்று நம்பிக்கொண்டு கூடியவரை அவர் கண்ணுக்குப் படாமல் ஒளிந்திருக்கவே நினைப்பேன். அவர் ஏதாவது காரணத்திற்காக என்னைக் கூப்பிட்டாலுங்கூட, என் இதயம் திக்...திக்... என்று அடித்துக் கொள்ளும். பள்ளிக்குப் போகவேண்டாம் என்று சொல்வதற்காகவே என்னைக் கூப்பிடுகிறார் என்று எண்ணிக் கொண்டே அவரிடம் போவேன்.

ஐந்தாவது வகுப்பில் படிக்கும் போதுதான், நான் அதிகமாகப் பயப்படவேண்டியிருந்தது. ஐந்தாம் வகுப்புக்கு மேல் பெண்கள் படிக்கக் கூடாது என்ற கொள்கையே பெரும்பாலானவர்களிடம் இருந்து வந்தது. ஒரு சிலரது பிள்ளைகள் மட்டும் அதற்கு விதிவிலக்காகப் படித்துக் கொண்டிருந்தார்கள். படிப்பை நிறுத்துவதென்றால் என்னைச் சொர்க்கத்திலிருந்து நரகத்திற்கு இழுப்பதாகவே எனக்குத் தோன்றியது. நல்ல வேளையாக அப்படி ஒன்றும் நடக்கவில்லை. அப்பா குடிகாரராக இருந்த போதிலும் என்னைப் படிக்க வைக்கவேண்டுமென்று விரும்பினார்.

அண்ணன் வெயிலிலும் மழையிலும் மாடாகக் கஷ்டப்பட, நான் மட்டும் சுகமாகப் பள்ளிக்குப் போவது எனக்கு வேதனையாக இருந்தது. அதற்காக நானும் பள்ளியைவிடவேண்டும் என்று எண்ணவில்லை. அவனும் படிக்க முடியவில்லையே என்றுதான் வருந்தினேன்.

அப்பாவின் குடியில் மட்டும் எந்தவித மாற்றமும் இருக்கவில்லை. இப்போது நினைத்துப் பார்த்தால், அது அவருக்கு ஒரு கலையாக இருந்தது என்றே எண்ணத் தோன்றுகின்றது. அண்ணன் நன்றாக ஓர் வேலை செய்து உழைக்க ஆரம்பித்ததும், அப்பாவின் குடியும், வேலைக்குப் போகத் தேவையற்ற சுதந்திரமும் கூடிக் கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. நாங்கள் சாப்பாட்டுக்கு எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும், அவருக்குக் குடிப்பதற்குப் பணம் கொடுத்தேயாகவேண்டும். அதற்கு மறுப்பாக அம்மா ஏதாவது கதைத்தால், அன்று முழுவதும் அடியும் உதையும் வாங்கித் தீரவேண்டியதுதான். அதற்குப் பயந்து எப்படியாவது என்ன கஷ்டப்பட்டாவது அவருக்கு அன்றுடம் குடிப்பதற்குப் பணம் கொடுத்துவிடுவாள். எங்கிருந்துதான் அம்மாவுக்குப் பணம் கிடைக்கின்றது என்பது ஆச்சரியமாக இருக்கும். எப்படியோ கொடுத்துவிடுவாள். அது அவளது கடமை.

அவரது எல்லாக் கூத்துகளும், அண்ணனைப் பாம்பு கடித்து அவன் செத்ததுடன் சரியாய்ப் போயிற்று.

காலையில் யாரோ ஒருவரது வயலுக்கு அருவி வெட்டப் போனவன் போய்ச் சிறிது நேரத்திற்கெல்லாம் மாட்டு வண்டியில் கொண்டுவரப்பட்டான். மூன்று நான்கு மைல்களுக்கு அப்பாலிருந்து கொண்டு வருவதற்கிடையிலேயே விஷம் நன்றாக ஏறிவிட்டது. பின் முல்லைத்தீவிலிருந்து பத்து மைல்களுக்கு அப்பால் ஒதியமலையிலிருக்கும் விஷக்கடி வைத்தியரிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது.

உயிரற்ற வெறுஞ் சடலத்தின் மேல் விழுந்து விழுந்து கதறி அழுதேன். பரமேசுக்கு அப்போது எட்டு வயதுதான். அப்போது அவளுக்கு அந்தச் சம்பவம் அவ்வளவு தூரத்திற்கு உள்ளத்தைத் தாக்கக் கூடியதாக இருக்கவில்லை.

எனக்கு உலகமே சூனியமாகத் தோன்றியது. அண்ணன் போனபின், எனக்கு மட்டும் ஏன் இந்த வாழ்வு என்று எண்ணிஎண்ணிஅழுதேன். அப்பாவின் அடிஉதைகளுக்குப்பயந்து போய், மூலைக்கு மூலை இருவரும்நடுங்கிக் கொண்டிருப்பதும் ''தங்கச்சி.. எங்காவது அப்பாவுக்குத் தெரியாத இடமாய்ப் பார்த்து அவர் போகும் வரைக்கும் ஒளித்திருப்போம் வருகிறாயா...?'' என்று கேட்கும் அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஞ்சுமுகமும் பயத்தோடு கூடிய ஏக்கம் படிந்த அந்தக் கண்களும் என்னைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தன.

நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று இடித்துக் கொண்டு இரண்டாகப் பிளந்து வெடித்துவிடப் போகின்ற உணர்வு.

குழந்தையாக இருக்கும் வரைக்கும் அடியும் உதையும் வாங்கினுன். பதைபதைக்கும் பசியில் அழுது துவண்டான். மண்ணிலும் வெறும் சாக்குத் துண்டிலும் உருண்டு நித்திரைக்கென்று படுத்தான். வெயிலென்றும், மழையென்றும் காற்றென்றும் பாராது, பள்ளியில் படிக்க வேண்டிய பருவத்தில் மாடு மாதிரி உழைத்துக் கஷ்டப்பட்டான். கட்டிளங் காளையாக எந்தவித இன்பத்தையும் எந்தவித சுகத்தையும் கண்டறியாமலே பதினெட்டாவது வயதினில் செத்தான்.

அவன் சரித்திரம் இவ்வளவுதான். என்னுள் மட்டும் சரித்திரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு மனிதப் பிறப்பாக அவன் என்றென்றைக்கும் தோன்றிக் கொண்டே இருப்பான்.

எட்டு வருடங்களுக்கு மேலாகியும்கூட, தலையில் ஓலைத் தலைப் பெட்டியும், கழுத்தில் சுற்றிக்கட்டிய கச்சைத் துண்டுமாக, நன்ருக இருட்டியபின் அவன் வேலை முடிந்துவரும் காட்சியை மறக்கவே முடியவில்லை.

இந்த அதிர்ச்சியுடன் அப்பாவும் குடிப்பதை நிறுத்தி நல்லபடியாக வாழ முற்பட்டார். ஆனுல்... அவர் குடிப்பதை நிறுத்திக் கொண்டதும் அடிக்கடி நோய்வாய்ப் பட்டு வருந்தினுர். குடிப்பதை நிறுத்தியதால்தான் நோய் வருகிறதென்றும், திரும்பவும் குடித்தால்தான் நோய்வாய்ப் படாமலிருக்க முடியுமென்றும் அப்பாவுக்குப் பலர் புத்தி கூறினர். எத்தனை பேர் எவ்வளவுதான் சொல்லிய போதிலும், அவர் அவற்றிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெல்லாம் அசைந்து கொடுக்காது ஒரே பிடிவாதமாயிருந் தார். அண்ணன் செத்தபின் அவர் மதுவைத் தொட்டதே இல்லை.

காலம் கடந்து தோன்றிய இந்த நற்குணத்தால் பயன் எதுவும் உண்டாகவில்லை. அவரது ஈரல் எப்போதோ கரு கத் தொடங்கிவிட்டது.

பின் என்ன?...

நடக்கின்ற வலுவைக்கூட இழந்து, படுத்த படுக்கை. அதற்குப் பிறகு ஒருநாள் அந்தப் படுக்கையும் சுருட்டி வைக்க வேண்டியதாயிற்று.

★

கடந்து போனவைகளைத் திரும்பத்திரும்ப நினைத்துப் பார்ப்பதில் ஏதோ ஓர் அமைதி. அந்தக் கஷ்டமான நினைவு களிலும் சுகம் இருப்பதாகவே தோன்றுகின்றது. இருந்து இருந்துவிட்டு அந்த நினைவுகளிலே மூழ்கிப் போய், என் நிலை இழந்து மணிக்கணக்கில் இருந்துவிடுகிறேன்.

அப்பாவின் நினைவு அண்ணன் நினைவு போல் மனதை அதிகமாகப் பாதிப்பதில்லை. கண்களில் ஏக்கம் நிறைந்த அந்த குழந்தைமுகம்— இருட்டிய பின் வீடு திரும்பும் அந்த வாலிபத் தோற்றம்— கழுத்தில் முடிந்து கட்டிய அந்த கச்சைத் துண்டு...? எங்காவது நெடுந்தூரம் அமைதி கிடைக்கிற வரைக்கும் கால் தரிக்காமல் ஓடிக் கொண் டிருக்க வேண்டும், மலை, காடு, மேடு, பள்ளம் எல்லாம் தாண்டி, அவற்றில் ஏறி இறங்கி விழுந்தடித்துக் கொண்டு ஓட வேண்டும் போல் தோன்றும்.

அந்த ஓட்டத்திற்காவது ஓடும் பிரதேசத்திற்காவது முடிவே இருக்கக் கூடாது.

நினைவு கலைகின்றது.

பரமேஸ் கூப்பிடுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அக்கா!''

''என்னம்மா?''

''காசு இருக்காக்கா?''

''ஏனம்மா?''

''கறிக்கு ஒன்றுமே இல்லையே அக்கா.''

''கிழங்கு இருக்கவேணுமே?''

''இல்லை அக்கா. இருக்கு என்றுதான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது கறி வைக்கிறதுக்குப் பார்த்தால் அதுவுமில்லை.''

''இப்போ என்னம்மா செய்கிறது?''

''ஏன் அக்கா?''

''காசு இல்லையே அம்மா!''

பரமேஸ் எதுவும் பேசாமல் போய்விட்டாள். இன்று கறி வைப்பதற்கு பருப்போ உருளைக் கிழங்கோ வாங்குவதற்கு வழியில்லை. நாளை அரிசியும் தீர்ந்து போய்விடும். அதற்குப் பின்?...

அம்மா படுத்திருந்த திண்ணையை விட்டு எழுந்து 'ஏவறை' விட்டுக் கொண்டு எங்கோ போனாள். அது என்ன 'ஏவறை'யோ?... இப்போது சில நாட்களாக உரத்த சத்தமாக ஏவறை விட்டுக் கொண்டே இருக்கிறாள். அதுவும் ஒரு வருத்தமாக அவளைப் பீடித்திருக்கிறது.

''பரமேஸ் என்னம்மா செய்கின்றாய்?...'' என்று கேட்டுக் கொண்டே குசினிக்குள் சென்றேன். அவள் ஒன்றும் செய்யாமல் சுவரோடு சாய்ந்து கொண்டிருந்தாள்.

''அம்மா எங்கே அக்கா போகின்றா?''

''அவ எங்கே போகின்றா என்று யாருக்குத் தெரியும்?''

''எனக்கென்னவோ பயமாக இருக்கின்றது அக்கா.''

''ஏனம்மா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா ஒரு மாதிரியாக இருக்கின்ரு. மூ ளை க் கு ஏதும்?...''

நான் கதையை மாற்றுகிறேன்..

''கறி என்னம்மா வைக்கப் போகின்ருய்?''

''என்னத்தை அக்கா வைக்கிறது?... ஒ ன் று மில்லையே...!''

''இப்போதைக்கு வெறும் சொதியாவது வைய னம்மா. நான் யாரிடமாவது கடன் கேட்டுப் பார்க் கிறேன்.''

''பூரணம் அக்காவிடம் இருக்காதா அக்கா?''

''இருந்தாலும் எப்படியம்மா கேட்பது?''

''ஊம்''

''பார்க்கலாம். எப்படியும் யாரிடமாவது கேட்டுத் தானே ஆகவேண்டும்.''

''என்னவாம் அக்கா டீச்சர் வேலை?''

''எனக்கென்னமோ, கிடைக்கும் போல் தோன்ற வில்லையம்மா. கிடைத்ததற்கப்புறம்தான் நிச்சயம். நான் யாரிடமாவது காசு கேட்டுப் பார்த்துக் கொண்டு வருகி றேன். நீ சொதியை வைத்துவிட்டு அம்மாவைப் பார்!''

''சரியக்கா''

எப்படியோ தெருவுக்கு வந்துவிட்டேன். தெருவுக்கு வரும்வரை ஒருவித நினைவுமில்லை.வந்ததற்குஅப்புறம் எங்கே போவது? யாரிடம் போவது? என்ற பிரச்சினை.

பூரணம் அக்காவின் வாசல்தான் மனத்துள் தெளி வாகத் தெரிந்தது. அவருக்குச் செலவு என்று அதிகமாக ஒன்றுமில்லை. எடுக்கின்ற சம்பளத்தை என்ன செய்கின்ருர் என்றே தெரியாது. தனிக்கட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக எப்படிப் போய்க் கேட்பது? பழகிய தோஷத்திற்காக எனக்கும் ஆசிரியை வேலை எடுத்துத்தர முயன்று கொண்டிருக்கிறார். அதற்கே எவ்வளவு கஷ்டம்? எவ்வளவு செலவு? போதாததற்கு இந்த நிலையில் நானும் போய்க் கடன் கேட்டால்?...

யோசித்தபடியே நடந்து கொண்டிருந்தேன். எப்படியோ டச்சு றோட்டுக்கு வந்து விட்டேன். டச்சு றோட்டில் தான் அவர் வீடு. கால்கள் போவதா, விடுவதா? என்ற கேள்வியுடன் நடப்பதை நிறுத்திக் கொண்டன.

பூரணம் அக்காவிடம் போய்க் கேட்பதா? அல்லது?

என்னுடன் ஒன்றாகப் படித்த பெண்கள் சிலர் கல்யாணமாகிக் குடியும் குடித்தனமுமாக நல்ல நிலையில் இருக்கின்றார்கள். அவர்களிடம் போய்க் கேட்டால்?

பொழுது இருட்டிக்கொண்டு வந்தது. நான் நின்றிருந்த இடத்துக்கும், பூரணம் அக்காவின் வீட்டுக்கும் அதிக தூரமில்லை. இயல்பாகவே கால்கள் நடந்தன. மனம் மட்டும் இன்னும் பிரச்சினையிலேயே ஆழ்ந்திருந்தது.

எப்படிக் கேட்பது?—

முதல் அனுபவம்தான். இப்படியான ஒரு சந்தர்ப்பம் இதுவரை எனக்கு ஏற்பட்டதேயில்லை.

பூரணம் அக்கா தோட்டத்தில் நின்று ஏதோ செய்து கொண்டிருந்தார். இந்த வயதிலும் எவ்வளவு ஊக்கமும், முயற்சியும் உடையவர். காலை எட்டுமணி தொடக்கம் மாலை நாலுமணி வரைக்கும் பள்ளிக்கூடம் என்றால் அவரைப் பொறுத்தவரை சோம்பல் வளர்க்கும் இடமல்ல. பிள்ளைகள், பெற்றோர் எல்லோரிடமும் அவரைப்பற்றிய நல்லெண்ணத்தை அவர் வளர்த்திருந்தார். பள்ளிக்கூடம் முடிந்ததும் மாலையில் வீட்டுக்குவரும் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார். அது முடிந்ததும் தோட்டவேலை, சமையல்வேலை என்று ஏதாவது இருந்து கொண்டேயிருக்கும். சலிப்படையாமல் எல்லாவற்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னந்தனியனாகவே செய்துகொள்ளுகின்றார். அவரை பற்றியே எதுவும் தெரியாது. அவரும் யாருக்கும் சொல்வதில்லை. அப்படியில்லையென்று வலிந்து கேட்கப்போனால் பொருத்தமில்லாத ஏதாவது ஒன்றைச் சொல்லி சமாளித்துக் கொள்வார்.

''ஏனம்மா, இருட்டியபின் புறப்பட்டாய்?''

''ஒன்றுமில்லை அக்கா. ஏதோ நினைத்தாற்போல் புறப்பட்டுவிட்டேன். பொழுதுபடுகிறதைக்கூடக் கவனிக்கவில்லை.''

''சரியம்மா, உள்ளே போகலாம் வா.''

கிடுகால் வேய்ந்த சிறிய மண்வீடு. அவர் இந்த ஊருக்கு வந்து நாலு வருடங்களாகியும் இந்த வீட்டிலேயே வசித்து வருகின்றார்.

''கனகம், மேசையில் பேப்பர் இருக்கு, பார்த்துக் கொண்டிரு. நான் தேநீர் போட்டுக்கொண்டு வருகிறேன்.''

பத்திரிகையைப் பார்ப்பதில் ஆர்வமோ விருப்பமோ எனக்கில்லை. காரணம் தொடர்ந்து பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைக்காததுதான்.

விளம்பரப் பகுதியைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதிலும் ஒன்றும் பிடிபடவில்லை. ஏதோ கலவரம் பற்றிய செய்திகளே ஆங்காங்கே பற்பல கோணங்களில் வெளியாகியிருந்தன.

பூரணம் அக்கா தேநீரைக் கொண்டுவந்து வைத்தார். இதற்குமேல் பத்திரிகையைப் பார்ப்பதில் எனக்கு ஆர்வம் ஏற்படவில்லை. தேநீர் சுவையாக இருந்தது. பூரணம் அக்காவுக்கு தேநீர்தான் உயிர். அதுவும் அவர்தான் போட்டுக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் போடுவது அவருக்குச் சரிப்பட்டு வராது. அரைக்கொத்து கொள்ளக் கூடிய ஒரு பெரிய கிண்ணத்தில் நிரம்ப ஊற்றி, அவர் பருகிக்கொண்டிருந்தார். அதில் அவருக்கு ஏற்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையும் இன்பமும் எனக்கும் ஏற்பட்டாற்போலிருந்தது. விரைவாகக் குடித்து முடித்துவிட்டால் அதன் சுவையை இழந்துவிடுவேனே என்ற மனப் பிராந்தியில், வைத்து வைத்து மெதுவாகக் கொஞ்சம் கொஞ்சமாகப் பருகிக் கொண்டிருந்தேன்.

பூரணம் அக்கா காலிக் கிண்ணங்களை எடுத்துக் கொண்டு உள்ளே போனார். நான் படித்த பத்திரிகை மேசையிலேயே இருந்தது. எனக்கு அதனைத் தொடவே மனமில்லை. தேநீர் குடித்தமையால் உடம்பு வியர்த்தது.

காசு கடன் கேட்பதைப்பற்றி யோசித்தேன். எப்போது திருப்பித் தருவதாகச் சொல்லிக் கேட்பது?—பின் எப்போது திருப்பிக் கொடுப்பது?— சே— இதென்ன மானக்கேடு—, இதிலும் பார்க்க பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லைப்போல் தோன்றியது.

கடன் கேட்பதும், பின் அதனைச் சொல்லிய தவணையில் கொடுப்பதும் எவ்வளவு கஷ்டமான வேலை. கடன் தா என்று கேட்பதற்கே நாக்கு நீளவேண்டும். இந்தக் கஷ்டத்தைத்தானே இதுவரையும் அம்மா அனுபவித்து வந்தாள். கடன் கேட்பதில் உள்ள சிரமத்தை இதுவரை காலமும் என்னால் புரிந்துகொள்ளக்கூட முடியவில்லை. இன்று தலைமீது சுமை ஏறிய பிற்பாடுதான் அதைப்பற்றி யோசிக்க முடிகின்றது.

''அக்கா, நான் வரப்போகிறேன். இருட்டிவிட்டது. பரமேஸ் காணவில்லையென்று நினைப்பாள்.''

''கொஞ்சம் இருந்துகொள். நானும் உன்கூட வீடு வரைக்கும் வருகின்றேன்.''

பூரணம் அக்கா எதுவும் பேசாது நடந்துகொண்டிருந்தார்.

அம்மாவிலும் பார்க்க பூரணம் அக்காவுக்கு இரண்டொரு வயதுதான் குறைவாக இருக்கலாம். அம்மாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பத்தெட்டுக்குக் கிட்டவாக இருக்கலாம். பூரணம் அக்காவின் முகத்தில் பொலிவும் பிரகாசமும் இருந்தன. அம்மாவின் முகத்திலோ அதற்கு நேர்மாறாக துன்பத்தின் ரேகைகளும், சவக் களையுமே தட்டின.

பூரணம் அக்காவின் வாழ்க்கையே விசித்திரமாக இருந்தது. பார்த்தால் கவலை ஒன்றும் இல்லாதவர் போல் வெளிக்குத் தோற்றுகிறார். உண்மையில் அப்படிக் கவலை இல்லாதவர் தானா?— அவரது இந்த மர்ம வாழ்க்கைக்குப் பின்னால் ஏதோ ஒன்று மறைந்திருக்க வேண்டும் போல் எனக்குத் தோன்றியது.

வீட்டுக்கு வரும்வரை இருவருமே எதுவுமே பேசிக் கொள்ளவில்லை. வீட்டுக்கு வந்ததும் அதனை நினைத்துச் சிரித்துவிட்டேன். பூரணம் அக்கா தவறாக எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்காக அவருக்கும் சொன்னேன். அதற்கும் அவர் எதுவும் பேசவில்லை.

அம்மா திண்ணையில் படுத்திருந்தாள். இரண்டு திண்ணைக்கும் இடைப்பட்ட வாசலில் குப்பி விளக்கு அவிந்து அவிந்து எரிந்துகொண்டிருந்தது.

''சரி அக்கா, நீங்கள் இனிப் போங்கள்''என்றேன்.

''போகலாமம்மா.''

பரமேஸ் எங்களை நோக்கி வந்தாள். அவளைப் பார்ப்பதற்கே எனக்குத் தைரியம் ஏற்படவில்லை.

பூரணம் அக்கா போனபிற்பாடு பரமேசைப் பார்த்தேன்.

''காசு கேட்டியா அக்கா?''

'' . ... ... ... ...''

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

குருடாகவோ, செவிடாகவோ இருந்தாலாவது வாழ்க்கையைக் கழிக்கலாம்; ஆனால் வறுமை மாத்திரம் இருக்கக் கூடாது. மிகவும் கொடூரமான துன்பம் அதை விட வேறில்லை.

கடன் கேட்க மனமின்றி, பூரணம் அக்காவிடம் வாய் விட்டுக் கேட்காமல் வந்தேன். கடனென்று வாய்விட்டுக் கேட்பதிலும் பார்க்க, பட்டினி கிடந்து சாவது மேல் என்று எண்ணினேன். அப்படிச் சாவதாயினும் அதுவும் சுகமான ஒன்றானதாக இருக்கவேண்டுமே. பசி இல்லாத சமயத்தில் தன்மானத்தைப் பெரிதாக நினைத்து வறுமையை இகழலாம். அதன் கொடுமையை நிதர்சனமாக அனுபவிக்கின்றபோதுதான் அதன் கஷ்டத்தை உள்ளபடி உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இரண்டு நாட்கள் எப்படிக் கழிந்தன என்பதிலும் பார்க்க, அந்த இரண்டு நாட்களையும் வலிந்து எப்படிக் கழித்தோம் என்பதுதான் பொருந்தும்.

பரமேசைப் பார்க்கின்றபோதெல்லாம் என்னால் பொறுக்க முடியாதிருந்தது. கடைசியில் அவளே என்னிடம் கேட்டாள், "என்னக்கா, நாங்களும் இப்படியே கிடந்து சாகவேண்டியதுதானா...?" இந்த ஒரு கேள்வியில் உலகத்துப் பசிக்கொடுமை எல்லாம் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து திரண்டாற்போலிருந்தது. வெறுமனே கண்ணீர் விடுவதைத் தவிர, அவளைச் சாகடிக்கத் துணிந்த என்னால் வேறு என்னதான் செய்யமுடியும்?

இந்த நிலை இப்படி எத்தனை நாட்களுக்கு இருக்கப் போகின்றது. இந்த இலட்சணத்தில் மானம் மரியாதை என்று என்ன வேண்டிக் கிடக்கின்றது? பசி வந்தால் பத்தும் பறந்துவிடும். அந்தப் பத்து என்ன? ஒன்றுமே இல்லை. ஏதாவது ஒன்று இருந்தால்தானே பறப்பதற்கு?

பூரணம் அக்கா படிப்பிக்கும் பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்தேன். பள்ளிக்கூடம் இன்னும் முடியவில்லை. ஏதோ ஓர் உணர்ச்சி வேகத்தில் எப்படியோ வந்துவிட்டேன். பூரணம் அக்கா என்னைக் கண்டதும் விரைந்து வந்தார்.

''என்ன கனகம் ஏன் அழுதிருக்கின்றாய்?''

''அழுதிருக்கிறேனா?''

''ம்... அழுததுகூட உனக்குத் தெரியவில்லை.''

''பள்ளிக்கூடம் முடிய நேரம் செல்லுமா அக்கா?''

''இல்லேம்மா. முடிகின்ற நேரம்தான். தலைமை ஆசிரியரிடம் காசு கொஞ்சம் கேட்டேன். வாங்கிக்கொண்டு வருகிறேன்.''

''எனக்கும் வேணும் அக்கா.''

''உனக்காகத்தானம்மா கேட்டேன்.''

''நான் சொல்லவில்லையே!''

''நீ சொல்லாவிட்டாலென்ன, எனக்குத் தெரியாதா?''

என் முகத்தில் சிறிது மலர்ச்சி உண்டாயிற்றென்றால் அது பொய் அல்ல. ஏதோ ஒரு கோட்டையைப் பிடித்து விட்டமாதிரித்தான்.

''இந்தாம்மா...'' என்று நூறு ரூபாய் நோட்டொன்றை நீட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் அக்கா நூறு ரூபாய்?''

''இருக்கட்டும். தேவை வரும் வைத்துக்கொள்.''

''பிறகு திருப்பித்தர வேண்டாமா அக்கா?''

''உன்னிடம் இருக்கின்றபோது ஆறுதலாகத் தந்தால் போதும். இன்னொன்று கனகம். மனேஜர் உன்னையும் அழைத்துக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறார்.''

''உண்மையாகவா அக்கா?''

''ஆமாம்மா. பள்ளிக்கூடம் விட்டதும் நேராக வீட்டுக்குவர இருந்தேன். அதற்கிடையில் நீயேவந்துவிட்டாய்.''

இருவரும் நடந்துகொண்டிருந்தோம். என்றால் ஒன்றையுமே நம்பமுடியவில்லை. இந்த நூறு ரூபாய், மனேஜர் என்னையும் கூட்டிக்கொண்டு வரச்சொன்னது, இரண்டுமே உண்மைதான். ஏதோ ஒரு கற்பனை உலகத்தில் நடப்பது போல் நடந்துகொண்டிருந்தேன். பசிகூடப் பறந்துபோய் விட்டது.

''வேறு என்ன கனகம்? நீ வீட்டுக்குப் போய் ஆயத்தமாய் இரு. நானும் புறப்பட்டு விரைவில் அங்கே வருகின்றேன்.''

''இன்றைக்கே போகவா அக்கா?''

''ஏன் கனகம்?''

''இல்லேக்கா கேட்டேன்.''

''இன்றைக்கே போவதுதான் நல்லது. நீ அம்மாவுக்கும் பரமேசுக்கும் தவிர வேறு யாருக்கும் சொல்ல வேண்டாம். வரச்சொல்லிமட்டும்தான் சொல்லியிருக்கின்றார். எதற்கென்று தெரியாது. எல்லாம் அங்கே போனால்தான் தெரியும்.''

''சரி அக்கா.''

வாழ்க்கை என்பது வெறுமனே அழுகைக்குரல் அல்ல. அதில் சிரிப்பதற்கும்கூட இடமிருக்கின்றது என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முதலாக உணர்ந்துகொண்டேன். என் வாழ்நாளில் எப்போதாவது நூறு ரூபாவை இப்படி ஒரேசமயத்தில் கண்டிருக்க மாட்டேன். அதிலும் மேலாக, மனேஜர் வந்து சந்திக்கும்படி கடிதம் எழுதியது..., ஏனென்று தெரியாதுதான். ஆனாலும் நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களை வைத்து நடத்தும் ஒரு ஸ்தாபனத்தின் மனேஜர் எதற்காக வரச் சொல்லுவார்?

நான் விஷயத்தைச் சொன்னதும் அம்மா சந்தோஷத்தில் திளைத்துப்போனாள். சிறிது மிகைப்படுத்தியே சொன்னேன். சிறிது நேரம்தான் அவளது அந்தச் சந்தோஷமும். பின் என்ன யோசித்தாளோ?... யாரை நினைத்துக்கொண்டாளோ? அவளது முகம் கறுத்து இருண்டுவிட்டது. அப்பாவை நினைத்துக்கொண்டாளா?... அல்லது அண்ணனை? அண்ணன்.. முள் ஒன்று குத்தியதால் நெஞ்சு வலித்தது.

''பரமேஸ்..., நீ இனிச் சாகவேண்டியதில்லையடி நான் நிறையச் சோறு போடுவேன். நான் போடப்போட நீ முடிவில்லாமல் சாப்பிட்டுக்கொண்டிரு.''

''போ அக்கா, உன்னைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. இன்னும் வேலை கிடைக்கவில்லை. அதற்குள் வேலை கிடைத்துச் சம்பளமும் பெற்றுவிட்டவளைப்போல் பேசுகிறாயே.''

யாழ்ப்பாணப் பிரயாணம் எனக்குப் புது அனுபவம். பூரணம் அக்கா ஒவ்வோர் இடத்தையும் எனக்குக் காட்டிக்காட்டி, அவற்றின் விசேஷங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார்.

பஸ் யாழ்ப்பாணத்தில் நின்றதும் நேராக பள்ளிக்கூட மனேஜரிடம் அவர் காரியாலயத்துக்குப் போனோம். நாங்கள் காரியாலயத்துக்குப் போய்ச் சேர்ந்தபோது, மனேஜருடன் யாரோ ஒருவர் இருந்து கதைத்துக்கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும், அவருடன் கதைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தவருக்கு ''இதோ, தருமபுரத்துக்குப் போகின்ற இரண்டு ஆசிரியர்கள்'' என்று எங்களை அறிமுகம் செய்தார். அதனைக் கேட்டதும் ஒரு புது மணப்பெண்ணின் உணர்வே எனக்கு ஏற்பட்டது.

''என்ன, தருமபுரத்துக்குப் போகச் சம்மதம்தானே'' என்று பூரணம் அக்காவைக் கேட்டார் மனேஜர்.

''அது எங்கே இருக்கிறது?'' என்ருர் பூரணம் அக்கா.

''அது ஒன்றும் பெரிய நகரமில்லை, வெறுமனே காடு தான். அந்தக் காட்டில் ஓர் ஏக்கர், இரண்டு ஏக்கர் வரை விஸ்தீரணமுள்ள வெட்டவெளியில் அடுக்கடுக்காகப் பல கொட்டில்கள் போட்டிருக்கிருர்கள். கடந்த இனக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்டவர்களை அங்கு குடியேற்றி இருக்கிருர்கள். பரந்தனுக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் இருக்கின்றது.''

''அங்கே மிக மிகக் கஷ்டப்பட்டவர்கள்தான் வீடு இழந்து, பணமிழந்து, தாயைப் பறிகொடுத்து, அல்லது மகனைப் பறிகொடுத்து . . இப்படித்தான் ஒவ்வொருவர் சரித்திரமும். வெறுமனே புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதல்ல உங்கள் தொழில். அவர்கள் ஒவ்வொருவரதும் துன்பங்களிலும், துயரங்களிலும் பங்குகொண்டு, அவர்களுக்கு வாழ்க்கையில் தன்நம்பிக்கையை ஊட்டவேண்டும். அதுதான் இப்போதைய நிலையில் அவர்களுக்கு மிகமிக அவசியமானது. அதிகமானேர் மிகவும் சோர்வடைந்துபோய், இனி என்ன வாழ்க்கை என்ற நிலையில் இருக்கிருர்கள்.''

'எப்போது தொடங்குகிறீர்கள்.''

''இன்னும் இரண்டு நாட்களில் நாங்கள் தொடங்கப் போகின்ருேம். இப்போதைக்கு அந்தக் கொட்டில்களில் இரண்டைப் பள்ளிக்கூடத்துக்கென அரசாங்க அதிபர் எங்களுக்குத் தந்திருக்கிருர். நீங்கள் போய் ஆயத்தமா

யிருங்கள். நான் முல்லைத்தீவுக்கு வான் அனுப்புவேன். உங்களுடன் இன்னும் சிலர் வருவார்கள்''என்றூர்.

நாங்கள் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்தோம். பொழுது இருட்டிக்கொண்டு வந்தது. ''நல்லூருக்குப் போவோம்'' என்று பூரணம் அக்கா சொன்னூர். பஸ் ஒன்று தயாராக நின்றது. அதில் சென்று ஏறிக்கொண்டோம்.

நல்லூரில் பஸ் நின்றதும் அவசர அவசரமாக பூரணம் அக்காவின் சிநேகிதி பார்வதி வீட்டுக்குச் சென்ரும். ''வா பூரணம்'' என்று வரவேற்றூர் அவர். அந்த வரவேற்பில் ஒரு குறை இருப்பதுபோல் எனக்குத் தோன்றியது. எங்களை உட்கார வைத்துவிட்டு அவர் உள்ளே சென்றூர். தேநீருக்கு ஆயத்தப்படுத்திவிட்டு உடனேயே திரும்பி வந்தார். அவர் திரும்பிவந்த சிறிது நேரத்தில் உள்ளே இருந்து அழு குரல் ஒன்று கேட்டது. பூரணம் அக்கா இருக்கையை விட்டு எழுந்து நின்றூர், எனக்கும் திகிலாக இருந்தது.

''எனது தங்கையின் புருஷனைக் கொன்றுவிட்டார்களாம் பூரணம்.'' பார்வதி தேம்பிக்கொண்டே இதைச் சொன்னூர்.

பூரணம் அக்கா உள்ளே சென்றூர். அவரைத் தொடர்ந்து நானும் சென்றேன். இருபத்திரண்டு வயதுக்கு மேல் இருக்காது. இளம்பெண் தலையில் அடித்து அடித்துக் கதறிக் கொண்டிருந்தாள். பூரணம் அக்காவைக் கண்டதும், அக்கா - அக்கா— ஐயோ மோசம் செய்துவிட்டார்களே அக்கா—'' என்று முன்னிலும் பலமாக தலையிலும் நெஞ்சிலும் அடித்து அடித்துக் கதறி அழுதாள்.

சேலைத் தலைப்பால் என் கண்களைத் துடைத்துக் கொண்டேன். பூரணம் அக்கா எங்கோ வெறித்துப் பார்த்தபடி பேசாது நின்றூர். அந்தப் பெண்ணுக்கு எப்படித் தேறுதல் சொல்வதென்று அவருக்குப் புரியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலும். இந்தத் துயரத்துக்கு எப்படித்தான் தேறுதல் சொல்வது?— யார் என்னதான் சொன்னாலும் அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் கிடைக்க முடியுமா—?

"என்ன பார்வதி நடந்தது?—" பூரணம் அக்கா மௌன நிலையைக் குலைத்தார்.

"என்னத்தைப் பூரணம் சொல்வது. மாத்தளையில் அவருக்குப் பெரிய பலசரக்குக் கடை ஒன்று இருந்தது. கடந்த இனக் கலவரம் தொடங்குவதற்குச் சில நாட்களுக்கு முன் இங்கே வந்திருந்தார். கலவரம் தொடங்குவதாக ஆங்காங்கே வதந்திகள் பரவிக்கொண்டிருந்தன. நாம் எவ்வளவோ தடுத்துப் பார்த்தோம். அவர் ஒன்றையுமே கேட்கவில்லை. அந்த நேரம்தான் அங்கே கட்டாயமாக நிற்க வேண்டுமென்று ஒரே பிடியாய் நின்றார். அதற்குமேலும் எப்படித் தடுக்கமுடியும்?— கலவரம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. அங்குள்ளவர்கள் எல்லாம் பொருள், பண்டம் போனால் போகட்டும் என்று எல்லாவற்றையும் விட்டுவிட்டு விமானத்திலும், ரெயிலிலுமாக வந்துகொண்டிருந்தனர். அப்படி வந்தவர்களிடம் சென்று விசாரித்தோம். ஒருவருக்காவது சரியாக ஒன்றும் தெரியவில்லை. மற்றவர்களைப் பார்க்கக்கூடிய நேரமா அது?—இன்று வருவார் நாளை வருவாரென்று ஒவ்வொருநாளும் எதிர்பார்த்தோம். தெரிந்தவர்கள் எல்லோருக்கும் தந்தி அடித்துப் பார்த்தோம். ஒன்றுக்குமே பதில் இல்லை. இலட்சுமியைத் தேற்றி வைத்திருப்பதே பெருங் கஷ்டமாக இருந்தது.

இரண்டு வாரத்துக்குமுன் அங்கிருந்து ஒருவர் வந்தார். அவர்தான் சொன்னார். இவருக்கு அங்கு பகைவர்கள் அதிகமென்றும், இந்தக் கலவரத்தை சாக்காகக் கொண்டு கடையுடன் சேர்த்து எரித்துவிட்டார்கள் என்று. இலட்சுமிக்குத் தெரியாமல் இருக்கவேண்டுமென்று பார்த்தோம். எப்படியும் தெரியத்தானே வேண்டுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரே சிறிது சிறிதாக விஷயத்தைச் சொல்லிவிட்டு நேரில் பார்த்துவர என்றுதான் புறப்பட்டுச் சென்றுர்.''

பூரணம் அக்கா ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே பார்வதியைப் பார்த்தார். பார்வதியின் கண்கள் கலங்கிப் போயிருந்தன. எனக்குத் தொண்டை அடைத்துப்போய் அமுக்கலாக இருந்தது.

என்ன கொடுமை இது? எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. தேகமெல்லாம் நடுங்கியது. இலட்சுமியைப்போல் இன்னும் எத்தனை எத்தனை பெண்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமோ?

★

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து சரியாக இரண்டு நாட்களாயின.

இலட்சுமியின் முகம் என் மனத்தில் அடிக்கடி தோன்றித் துன்புறுத்திக் கொண்டே இருந்தது.

இந்த இழப்பு அவளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடாதுதான். அம்மாவுக்கும் இதைப் பற்றிச் சொன்னேன். ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே ''அவளின் விதி அது'' என்ருள். எனக்கு என்னவோ மாதிரி இருந்தது. எடுத்ததற்கெல்லாம் விதி என்றுல், அதன் அர்த்தம்தான் என்ன?

பரமேஸ், தானும் என்னோடு தருமபுரத்திற்கு வருகிறேன் என்று பிடிவாதம் பிடித்தாள்.

பரமேசைக் கூட்டிக் கொண்டு போகும்படி அம்மா வற்புறுத்திஞள். வெளி உலகம் தெரியாமல், இங்கேயே அடைந்து கிடவாமல் ஒரு கிழமைக்கு வந்து நின்றுவிட்டு வரட்டுமென்று அதற்கு இசைந்தேன். என்றுமே எங்குமே வெளியில் சென்றறியாதவளுக்கு ஏதோ ஒரு புது இடத்தைப் பார்க்கப் போகின்ற துடிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணம் அக்காவுக்கு முல்லைத்தீவைவிட்டுப் புறப்படுவது பெரிய சிரமமாகவே இருந்தது. தோட்டம், ஆடு, கோழி என்று எல்லாவற்றிற்கும் ஏதாவது வழி செய்ய வேண்டியிருந்தது.

எனக்கு வேலை கிடைத்தது. எப்படியோ சிலருக்குத் தெரிய வந்தது. மனத்துள் என்ன இருந்தாலும், வெளியில் சந்தோஷப்படுவது போல் காட்டிக் கொண்டார்கள். உள்ளூரச் சிலருக்கு எரிச்சல்தான். ஒரு கூலியின் மகள் உத்தியோகம் பார்ப்பதா? அவர்கள் எத்தனையோ பேரின் பிள்ளைகள் படித்துவிட்டு வேலையின்றி இருக்கிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக ஏற்பட்ட ஆதிக்கத்தின் பிடிப்புத்தான் இதற்குக் காரணமா? அந்த ஆதிக்கப் பிடிப்புக்குள் அகப்பட்டுத் தெளிவாகத் தெரிந்து கொண்டே கஷ்டப்பட வேண்டும். இதுதான் நியதி. இந்த நியதியை மாற்ற யாரும் முற்படக் கூடாது. எது நேர்ந்தாலும் அது தான் விதி என்று அனுபவிக்க வேண்டியதுதான்.

நல்ல வேளையாக வானுடன் மனேஜர் வரவில்லை. வானை மட்டுமே அனுப்பியிருந்தார். தற்சமயம் அவர் வந்திருந்தால், இந்தப் பெரிய மனிதர்கள் ஏதாவது குத்தி வைப்பார்களோ என்று பயந்திருந்தேன்.

பூரணம் அக்காவின் சாமான்கள் வான் கொள்ளாததாக இருந்தன. சிலவற்றை அங்கு வைத்துவிட்டுச் செல்ல வேண்டியிருந்தது.

வானில் நானும் பரமேசும் ஏறிக் கொண்ட போது அம்மாவின் கண்கள் கலங்கிப் போயிருந்தன. நாங்கள் நல்ல படியாகப் போய்ச் சேரவேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக் கொண்டார். பெரியவர்களுக்கு எப்போதும் பிள்ளைகளின் கருத்துத்தான். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனாலும்கூட அவர்களைப் பொறுத்தவரையில், சிறு குழந்தைகள்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் தனிமையை நினைக்கும் போது எனக்கு வேதனையாக இருந்தது. பரமேசுக்கு ஊர் பார்க்கிற மகிழ்ச்சி. அம்மா தனியாக இருந்து பொழுதைக் கழிக்க வேண்டியிருக்குமே என்ற சிந்தனை அவளுக்கில்லை. அவள் எண்ணமெல்லாம் மோட்டார் வானில் உல்லாசமாகப் பிரயாணம் செய்து, புதியதோர் ஊரைப் பார்க்கப் போகும் இன்பத்தில் மூழ்கி இருந்தது! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

நாங்கள் தருமபுரத்தை அடைந்த போது பகல் பதினொரு மணியளவில் இருக்கும். மனேஜர் எங்களை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடன்கூட இரண்டு ஆண் ஆசிரியர்களும், இரண்டு பெண் ஆசிரியர்களும் நின் ருர்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் எங்களுக்கு அறி முகம் செய்துவைத்தார்.

தருமபுரத்தின் அழகைப் பார்த்ததும், பரமேஸ் முகத் தைச் சுளித்துக்கொண்டாள். ஒரே காடு. பாதைகளில் யானை உலர்த்திகள் காய்ந்து போய்க் கிடந்தன. என் னுடைய மனத்திலும் திருப்தியின்மைதான் தோன் றியது.

எங்களைச் சுற்றி ஜனங்கள் சூழ்ந்து கொண்டனர். அவர்களுக்கு எங்களைப் பற்றி என்ன தோன்றியதோ, துரு வித் துருவி எங்களைப் பார்த்தார்கள். ஒருவரது முகத்திலா வது மனிதக் களையைக் காண முடியவில்லை. வெறும் சாவுக் களைதான். இடம் ஒரே அசுத்தமாக, அழுக்கல்கள் குப்பைகளில் இலையான்கள் மொய்த்து ஒரே நாற்றமாக இருந்தது. அந்த நாற்றத்தைச் சகித்துக் கொள்ள முடி யாமல் பரமேஸ் அருவருப்பால் ஓங்காளித்தாள்.

மிகமிகக் குறுகலான இடம். அந்த குறுக்கலான இடத் துக்குள்ளே, மிகமிக நெருக்கமாக இருபதுக்கு மேற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாம்கள் போட்டிருந்தார்கள். அடைக்கப்பட்ட ஆட்டு மந்தைகள் போல அந்த முகாம்களுக்குள் அ க தி க ள் குமைந்து போய் இருந்தார்கள்.

அவர்களது குழந்தைகள், பிறந்த கோலத்தோடு மூக்கில் வழிய ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு யாருக்கும் அடங்கமாட்டாதவர்களாக அங்குமிங்கும் ஓடித் திரிந்தார்கள்! சில குழந்தைகள் எங்கள் அருகில் வந்து நின்று கொண்டு, எங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

''இவர்கள் எல்லாம் யார்? ஏன் வந்திருக்கிறார்கள்?'' எங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற ஒரு வயோதிபரின் கேள்வி.

''நம்ம குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் வைத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போகிறார்களாம்.'' அவருக்கு இன்னொருவர் பதில் சொன்னார்.

''ஓ, அப்படியா? அதொன்றுதான் நமக்கு இப்பொழுது இல்லாத குறை.''

''ம்.. எங்களைப் பற்றி நாங்கள்தான் கவலைப்பட வேண்டும். மற்றவர்களுக்கென்ன?''

இந்த சம்பாஷணைகள் என்னுள்ளத்தில் பாய்ந்து தாக்கின. அவர்களது ஒவ்வொரு வார்த்தையும், அவர்கள் இதயத்தின் அடியிலிருந்து ஒலிக்கும் துன்ப கீதமாக ஒலித்தது.

அந்தக் குடியேற்றத் திட்டத்தின் அதிகாரி ஒருவர் எங்களைக் கூட்டிச் சென்று, ஒவ்வொரு முகாமையும் சுற்றிக் காண்பித்தார். ஒரு பக்கத்தில் பசியால் துடிதுடிக்கும் குழந்தையின் அழுகுரல். அதற்கு அடுத்தாற் போல் சமையல் அடுப்பிலிருந்து கிளம்பும் புகை மூட்டம். இன்னோர் இடத்தில் செத்துப் போன குழந்தை ஒன்றை வை த் து க் கொண்டு ஒப்பாரி வைத்து அழும் ஒரு தாய்; அதை அடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதை பகிர்ந்து சாப்பிட்டுச் கொண்டிருக்கும் ஒரு குடும்பக் காட்சி. இவற்றை எல்லாம் பார்த்த போது எனக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது.

அந்த அதிகாரி சொன்னர்: "இவற்றை யெல்லாம் பார்த்து மனத்தைத் துன்பப்படுத்திக் கொள்ளாதீர்கள். எனக்கும் முதலில் அருவருப்பும், இந்த மனிதர்களின் நடத்தை குறித்து ஆச்சரியமுமாகத்தான் இ ரு ந் த து. நாளடைவில் இவை யாவும் பழக்கப்பட்டுவிட்டன. நாள் ஒன்றுக்குக் குறைந்தது இரண்டு மூன்று என்று செத்துக் கொண்டே இருக்கும். பக்கத்தில் இருப்பவர்கள் ஏன் என்றே கேட்கமாட்டார்கள்?"

"ஏன் இவர்கள் இப்படி?"... குரல் கரகரத்துப் பர மேஸ் கேட்டாள்.

"இவர்கள் ஒவ்வொருவரும் ஒரே இடத்தில் இருந்து வந் தவர்களல்லர். அதனுல் ஒருவரிடம் இன்னெருவருக்குப்பற்று தலோ, பந்தமோ இல்லை. ஒவ்வொருவருக்கும் தன் தன் துன் பம் பொருள் பண்டமிழந்து, தாயை இழந்து, மக்களை இழந்து, தகப்பனை இழந்து இப்படியாக ஒவ்வொருவருடைய வரலா றும் துன்பத்தில் முளைத்ததாயிருக்கின்றது. இ த ற் கு ம் மேலாக இவர்களுக்குத் துன்பம் ஏற்பட முடியாது. அப் படி உண்டாவதாயினும் அது செயற்கையானதேயன்றி இயற்கையானதாக இருக்க முடியாது."

இன்னெரு முகாமுக்கு அருகில் போன போது ஒரு வயோதிபர், உடுத்தியிருந்த சாரத் துண்டொன்றை மேலே இழுத்துப் போர்த்திக் கொண்டு எங்களுக்கருகில் வந்து தன் கையை நீட்டினர். அதற்குள் அந்த அதிகாரியின் அதட்டல் கிழவருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. திரும் பிப் பாராமலே அவர் வேகமாக நடையைக் கட்டி னர்.

எனது மனம் குழம்பிப் போய், வேதனை அடைந்தது. இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்த பிற்பாடு என் கவனம் ஒன்

திலுமே செல்லவில்லை. எனது இந்த நிலையைப் பூரணம் அக்கா புரிந்து கொண்டார்.

''கனகம், இந்த ஆட்களைப் பார்த்த பிற்பாடு உனக்கு என்ன தோன்றுகின்றது?'' என்றார்.

''ஒன்றுமே எனக்குப் புரியவில்லை அக்கா. எனக்கு எல்லாமே குழப்பமாக இருக்கின்றது.''

''கனகம், உண்மையான வாழ்க்கை என்பது இதுதான். இந்த வாழ்க்கையைப் புரிந்து கொண்டால், பின் ஒன்றிலுமே குழப்பம் இருக்காது. எல்லாம் சரியாய்விடும்.''

''எல்லாம் சரி அக்கா, பக்கத்தில் சவம் கிடக்க 'அதனைப் பார்த்துக் கொண்டே சாப்பிடுகிறார்களே அக்கா. இப்படியும் மனிதர்கள் உலகத்திலே இருக்க முடியுமா?''

''இருக்க முடியுமா என்று கேட்கிறாயே, இதோ கண் முன்னால் நீதான் பார்க்கிறாயே. இவர்களும் அசல் மனிதர்கள்தான். இவர்களது இந்த நிலையில் வேறு என்னதான் செய்ய முடியும்?— ஒரு நாளைக்கு, ஒரு வேளைக்குச் சீரான உணவு கிடைக்குமோ, என்னவோ? இந்த இலட்சணத்தில் பாசம், பற்று, அனுதாபமெல்லாம் எப்படியம்மா இருக்க முடியும்? இந்த பாச பந்தங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட விரக்தி மனம் அவர்களுடையது. எல்லாவற்றையும் நாளாந்தம் கண்டுகண்டு அதனால் அவர்களது இதயமே மரத்துப் போய்விட்டது. இப்போது அவர்களது பிரச்சினையெல்லாம் உயிர் உடம்போடு ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்பதல்ல. இந்த உடம்புக்கும் உயிருக்குமிடையே கிடந்து சித்திரவதை செய்யும் பசி என்ற, அந்த எம வேதனையைச் சமாளிப்பதுதான். உயிர் உடம்பில் தரித்திருக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் உண்ணவில்லை. அந்த நரக வேதனையின் கொடூரத் தன்மையைப் பொறுக்க மாட்டாமலே அவர்கள் உண்ணுகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், இந்தப் பசி வேதனைக்கு முன்னால் ஓர் உயிர் பிரியும் காட்சி மிகமிக அற்பமானது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸைத் திரும்பிப் பார்த்தேன். கைகளை முன்புற மாக மடித்து நெஞ்சோடு சேர்த்துக் கட்டிக் கொண்டு உணர்ச்சியற்ற நிலையில் எங்களைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. இவை எல்லாவற்றிற்கும் ஈடு கொடுக்கக் கூடிய சக்தி அவள் மனத்திலே இல்லை. இந்தக் காட்சிகளை அவள் பார்க்காமலே இருந்திருந்தால் நன்றாயிருக்குமென்று தோன்றியது.

''பரமேஸ், இப்போது பார்த்ததெல்லாம் போதும். நீ இன்றைக்கே வீட்டுக்குப் புறப்படு'' என்றேன்.

பூரணம் அக்கா நிமிர்ந்து என்னைப் பார்த்தார். நான் எதுவும் பேசாது, பரமேஸின் மனநிலை எப்படியிருக்கிறது என்று அவளை ஆராய்ந்தேன். அதே வெறிச் சோடிய எவ்வித சலனமுமற்ற பார்வைதான்.

எங்களோடு வந்த மற்றும் ஆசிரியர்களின் மனப் போக்கையும் ஆராய்ந்து பார்த்தேன். ஓரளவுக்குப் பெண்கள் இருவரதும் மனப் போக்கும் ஒத்துப் போவது போல் தோன்றியது. பக்கங்களிலிருந்து அழுகல் மணம் எடுத்த போது அவர்கள் இருவரும் சேர்ந்தாற் போல் முகத்தைச் சுளித்துக் கொண்டனர். அவர்களது அந்த பரிதாபத்தைப் பார்த்த போது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''அழுகல்கள், நாற்றங்கள், அசிங்கம், சமூகத்தில் படிந்துள்ள தூசி குப்பை கூழம் எல்லாவற்றையும் போக்கித் தூய்மைப் படுத்தக் கூடிய பெரும் சக்தி, பெண்களிடம்தான் இருக்கின்றது. அதன் கூட்டுவாரி பொறுமையும் சகிப்புத் தன்மையும்தான்.'' எப்போதோ ஒரு நாள் பூரணம் அக்கா சொன்ன இந்த வார்த்தைகள் எனது ஞாபகத்திற்கு வந்தன. உண்மையில் இந்த அழுக்குகளை ஆணிலும் பார்க்க ஒரு பெண்ணுல்தான் சகிக்க முடியும். அவளால் தான் தூய்மைப்படுத்த முடியும். தூய்மையின் சின்னம் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த அவலத்தை என் அம்மா பார்த்தார் என்ருல் என்னை ஒரு நிமிடம்கூட இங்கே நிற்கவிடமாட்டார்.'' —இது ஒருத்தி.

''என்ன செய்கிறது, நம்ம விதி. இதையும் அனுபவிக்க வேண்டுமென்றிருக்கிறது''— இது மற்றவள்.

இவர்களுக்கும் எனக்குமுள்ள வித்தியாசமென்ன? ஒரே மனப்போக்குத்தான். ஒரே உணர்வுதான். என்னுடைய குடும்பக் கஷ்டத்தினுல், நான் விரும்பினுல் என்ன, விரும்பாவிட்டால் என்ன? இதற்கு ஈடு கொடுக்க வேண்டியிருக்கிறது. என்னுடன் கூட பரமேசும் இந்த அவலத்தை அனுபவிக்க என் மனம் இசையவில்லை.

முன்னவள் பத்மாவதி தனது பெயருக்கு இல்லாத முதன்மையையும், மதிப்பையும் பொலிஸ் இன்ஸ்பெக்டரான தனது தகப்பனின் அந்தஸ்துக்கே கொடுத்து, அதைப் பற்றியே சிறிது நேரம் பிரலாபித்தாள். அவளது பேச்சு, பாவனை, உடல் கொந்தளிப்பு எல்லாம் நலுங்காமல், நோகாமல் வளர்ந்தவள் போல் காட்டிக் கொடுத்தன. உண்மையில் இந்த அவலத்தை அவளது அம்மா கண்டால், இதற்கு விட்டிருக்கவே மாட்டாள்.

இன்பத்தையும், சுகத்தையும்தான் ஒவ்வொருவரது மனமும் நாடும். யாராவது வேண்டுமென்றே துன்ப வாழ்க்கையை ஏற்றுக்கொள்வரா?

இந்த எண்ணம் தோன்றியவுடனேயே, என் உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையிலிருந்து, 'பூரணம் அக்காவுமா?' என்ற கேள்வி எழுந்தது.

மாறுபட்ட எண்ணங்களும் சிந்தனைகளும்தான், மனிதர்களை உருவாக்குகின்றன. ஒரு கணத்தில் இது தான் உண்மை என்று வரையறை செய்வதும், மறு கணத்தில் அந்தத் தீர்ப்புக்கு மறுப்பான எண்ணங்கள் தோன்றுவதும் இயல்பாயுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணம் அக்கா வேண்டுமென்றே துன்பத்தை ஏற்றுக் கொள்ளுகின்றாரா? இதுவரை காலமும் அவருடன் பழகியும் அவரைப் பற்றி என்னால் ஒன்றுமே புரிந்துகொள்ள முடியவில்லை. மனம் பக்குவப்பட்ட ஒருவித தனிப் போக்கு. யாராலும் சுலபமாக அவர் போக்கைப் புரிந்து கொள்ள முடியாது. எல்லாவற்றிலும் ஒன்றையே காண்கிறார். அறுசுவை உணவையும், குப்பைத் தொட்டிக்குள் வீசப்படும் எச்சிலையும் ஒன்றாகவே கருதுகிறார். இவற்றைச் சாப்பிடுகிற மனிதர்கள் ஒரேவித இன்பத்தை— உணர்வைத்தான் பெறுகிறார்கள். இந்த உண்மையில் எல்லாம் அவருக்கு ஒன்றேதான்.

மற்றவள் கமலாசனி. அவளது குடும்ப நிலை இரண்டுங் கெட்ட நடுத்தரமானது. அவளது உழைப்பும் அவசரமானது. ஆனால் அவளது உழைப்பால்தான் குடும்பம் நடக்க வேண்டியிருக்கிறது என்ற நிலை இல்லை. மற்றவர்கள் கஷ்டத்தில் ஒரு சிறு பகுதியையாவது அவளால் குறைக்க முடியும். குறைக்க வேண்டுமென்ற ஆவல் அவளிடம் மிகுதியாகக் காணப்பட்டது.

பரமேசின் கவனம் முழுவதும், அந்த ஜனங்களின் விசித்திரமான போக்குகளைக் கவனிப்பதிலேயே சென்றது. வெளி உலகம் இவ்வளவு அலங்கோலமாக இருக்குமென்று அவள் எண்ணியிருக்க மாட்டாள்.

ஆண் ஆசிரியர்கள் இருவரும் எங்களை விட்டு வேறு திசையில் சென்று கொண்டிருந்தனர்.

மனேஜர் எங்களை அழைப்பதாக ஓர் ஆள் வந்து சொன்னான். பெரியதொரு கொட்டில் பள்ளிக்கூட உருவம் பெற்று, இரு தொங்கல்களிலும் ஒரு சிறு பகுதியை வேறு படுத்திக் சிறுகுகளால் அடைத்துத் துப்பரவு செய்திருந்தார்கள். இன்னொரு கொட்டிலை, அதிலுள்ள ஜனங்களை எழுப்பி வேறு கொட்டில்களுக்கு மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வேந்திர முகூர்த்தத்தில், நாலைந்து பிள்ளைகளுடன் பூரணம் அக்காவே பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து வைத்தார்.

இங்கு பள்ளிக்கூடம் தொடங்கப்பட்ட அதே நேரத்தில் காலியாகிக் கொண்டிருந்த கொட்டிலிலிருந்து ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக் கொண்டனர். அவர்களுடைய அந்தச் சத்தமும் அதைத் தொடர்ந்து பெண்களது கூக்குரலும் கூப்பாடும் காதை அடைத்தன.

''ஏதோ இருக்கிற இடத்திற்காகச் சண்டை பிடிக்கிறார்களாம்'' என்று அதைப் பார்த்து வந்த ஒருவர் சொன்னார்.

' ம்... எங்களைப் பற்றி நாங்கள்தான் க வ லை ப் பட வேண்டும். மற்றவங்களுக்கென்ன?'' நாம் வந்த போது கதைத்த அந்த மனிதனின் கரகரத்த அந்தத் தொனி காதில் சுழன்று கொண்டிருந்தது.

புத்தகம், வாங்கு, மேசை, சிலேட் பலகை எதுவுமே இல்லாது முதல்நாள் பள்ளிக்கூடம் நடந்துமுடிந்தது.குழந்தைகளுக்கு ஏதோ ஒரு வேடிக்கை. எங்களைப் பார்ப்பதில்—எங்களோடு பழகுவதில் உள்ள வேடிக்கையோ என்னவோ—எடுத்த எடுப்பிலேயே ஒவ்வோர் ஆசிரியரையும் அணுகி, ''உங்களுக்கு என்ன பேர் வாத்தியார்? — உங்களுக்கு என்ன பேர் அக்கா?''—என்று அவர்கள் கேள்விக்குமேல் கேள்வி கேட்டபோது சிரிப்பாகவும், வேடிக்கையாகவும் இருந்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

"சிவபாதத்திற்கும், சுந்தரமூர்த்திக்கும் நீங்களே சமைத்துக் கொடுத்தா என்ன?—" என்று பூரணம் அக்காவை மனேஜர் கேட்டார். பூரணம் அக்கா அதற்கு எதுவித பதிலும் சொல்லாமல் நின்றார்.

"பிறர் ஏதாவது கதைப்பதற்கு நாம் ஏன் இடம் கொடுக்க வேண்டும்? இங்குள்ள மற்றவர்களும் எப்படியோ சாப்பிடுகிறார்கள்தானே. அவர்களைப்போல நாமும் செய்து கொள்ளலாம்" என்று சிவபாதம் கூறினார்.

எங்கள் எல்லோருடைய பார்வையும் ஒரே கணத்தில் சிவபாதத்தின்மேல் விழுந்தது. சுந்தரமூர்த்தியும் சிவபாதத்தின் இந்த யோசனையை ஆமோதிப்பவர்போல் காணப்பட்டார். இருவரும் இளைஞர்கள். சிவபாதம் உயரத்துக்கேற்ற உடம்போடு வாட்டசாட்டமாகவும், சுந்தரமூர்த்தி உயரமாகவும், ஒல்லியாகவும், நோயுள்ளவர்போலும் தெரிந்தது.

"நாங்களே சமைத்துக் கொடுக்கிறோம். அதில் எங்களுக்கு எந்தவித கஷ்டமுமில்லை" என்றார் பூரணம் அக்கா.

எதைப்பற்றித்தான் அவர் இவ்வளவு நேரமும் யோசித்தாரோ தெரியாது. இந்தப் பதிலையே என் மனமும் அவரிடமிருந்து எதிர்பார்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனேஜர் புறப்படப்போகின்றார் என்று தெரிந்தது. முல்லைத்தீவுக்குப் போய், பிற்பாடு அங்கிருந்து யாழ்ப் பாணம் போவதாகச் சொன்னார். நான் பரமேசைப் பார்த்தேன்.

''நீ என்னம்மா செய்யப்போகின்றாய்?''

''உன் இஷ்டம்.''

''இங்கே நிற்க உனக்கு விருப்பமாயிருக்கா?''

''... ... ... ... ...''

''இஷ்டமானால் இரண்டொரு நாளுக்கு நின்றுவிட்டுப் போ; நான் தடுக்கவில்லை. இப்போதே போவதானால் மனேஜருடனேயே போகலாம்.''

எங்கள் சம்பாஷணையைப் பார்த்து பூரணம் அக்கா சிரித்தார்.

''பரமேசுக்குத்தான் அக்கா இந்த இடம் பிடித்திருக் கின்றது'' என்றேன்.

''மற்றவர்களுக்கு பிடிக்கவில்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றார் சுந்தரமூர்த்தி.

''ஏன் வேறு யாருக்குப் பிடித்திருக்கின்றது?''—நான் சிரித்துக்கொண்டே கேட்டேன்.

''உங்கள் பரமேசுடன் சிவபாதத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். அவருக்கும் இந்த இடம் நன்றாகப் பிடித் திருக்கிறது.''

''ஏன் இங்கு இருப்பவர்கள் எல்லாம் மனிதர்கள் இல்லையா?''என்றார் சிவபாதம்.

''இங்கே இருப்பவர்கள் எல்லாம் மனிதர்கள்தான். அதை யாரும் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் இந்த இடமும், அவர்களது இந்த அலங்கோலமும்தான் சகிக்கமுடியவில்லை''என்றாள் பத்மாவதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குச் சிவபாதம் எதுவும் சொல்லவில்லை. மெது வாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பிலேதான் பதில் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டாரோ என்னவோ?

ஆனால் பரமேசைப் பொறுத்தவரையில் ஏதோ ஒரு வித்தியாசமான—வேடிக்கையான புதினம் பார்க்கிற மன உணர்வுதான் அவளுக்கு. பிரித்து ஆராய்ந்து கொள்வதற் குரிய வளர்ச்சி அவளுக்கு இல்லை.

உள்ளூர அவளைக் குறித்து இனம் புரிந்துகொள்ள முடி யாத ஒருவித பயம் எனக்கிருந்தது. எதற்காக, ஏன் என்று எந்தவித காரணமும் எனக்குத் தெரியவில்லை. ஏதோ ஒரு வித உணர்வு.

சிந்தனைகளுக்கும் எண்ணங்களுக்கும் குறிப்பிட்ட ஓர் எல்லையோ, வரையறையோ இல்லை. ஒவ்வொன்றோடு ஒவ் வொன்று சேர்ந்து, ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவி—மனத் தின் இயல்பே இதுவாயிருக்கின்றது.

என்னுடைய பொறுப்பில் மூன்றும் வகுப்பு விடப்பட் டது. இப்படியே ஒவ்வொருவருக்கும் வகுப்புகள் பிரித்துப் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

எனக்குத் தரப்பட்ட வகுப்புக்குள் நான் நுழைந்த போது, "இந்தக் குழந்தைகளுக்கு இப்போது படிப்பு அத்தியாவசியமான ஒன்றா?" என்ற கேள்வியை எனக்குள் நானே கேட்டுக்கொண்டேன். ஒரு குழந்தையின் முகத் திலாவது இயற்கையான மகிழ்ச்சியையும், குழந்தைகளுக்கு உரித்தான அந்தத் துடிதுடிப்பையும் காணமுடியவில்லை. கந்தல் உடை, எண்ணெயைக் கண்டு பல நாட்களுக்கு மேலான தலை, வாரிவிடப்படாமல் சிக்குப்பிடித்துப் போய்க் கிடக்கும் கூந்தல். பெண் குழந்தையாவது சரி, ஆண் குழந்தையாவதுசரி, அரைவரைக்கும் கட்டிய துண்டுக்கு மேற்பாகம் வயிறு ஒட்டிப்போய், மார்பு எலும்புக்கூடு தெரிய, தோல்கள் ஊத்தைப் படலங்களால் கோலமிடப் பட்டுத் தோற்றமளித்தனர். இந்த இலட்சணங்கள் போதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று சதா மூக்கை உறிஞ்சியும், கையாலும் அரையில் கட்டிய அந்தத் துண்டாலும் மாறி மாறித் துடைத்துக் கொண்டும் இருந்தனர்.

ஒவ்வொரு குழந்தையையும் தனித் தனியாகக் கூப்பிட்டு அவர்களது பூர்வாங்க வரலாற்றை சொல்லச்சொல்லிக் கேட்டேன். அப்படி அவர்கள் தங்கள் அனுபவங்களைச் சொல்லக் கேட்ட பிற்பாடு, இந்தக் குழந்தைகளிடம் நான் ஏன் இவற்றைக் கேட்டேன் என்றாகிவிட்டது. ஒவ்வொரு வருடைய கலவர கால அனுபவங்களும் ஒவ்வோர் துன்ப காவியம்.

இந்தக் கோரமான அனுபவங்கள் இந்தச் சிறு வயதில் இவர்களுக்கு கிடைக்க வேண்டுமா?

சரஸ்வதி என்ற குழந்தையைக் கூப்பிட்டுக் கேட்டேன். அந்தக் குழந்தை தாங்கள் பட்ட கஷ்டத்தைப்பற்றிச் சொல்லியபோது, எனக்கு அழுகையே வந்துவிட்டது. தங்க விக்கிரகம்மாதிரி பார்ப்பதற்கு இலட்சணமாக இருந்தாள். அவள் கதைசொல்லும்போது அவளது முகமும், கனவு காண்கின்ற அந்தக் கண்களும் — ஆனால் கண்களில் உயிரில்லை. சதா கைகளைப் பிசைந்துகொண்ட அந்தப் பாவமும் அவர்களுக்கு ஏற்பட்ட கொடுமையாக விஸ்வரூபம் எடுப்பதுபோல் எனக்குத் தோன்றின.

"அக்கா, நீங்கள் நம்பமாட்டீர்கள். நாங்கள் ஐஞ்சு நாளாய் ஒன்றுமே சாப்பிடவில்லை. இரவு பகலாக ஒரு முள்ளுப் பற்றைக்குள்தான் பயந்துபோய் ஒளித்திருந் தோம். அனுராதபுரத்திலிருந்து ஆறு, ஏழு கட்டைக்கு மேல் ஒரு காட்டுக்குள்ளே ஓடியிருப்போம். அப்படியிருந் தும் அந்த அவசரத்துக்குள் எங்கள் அண்ணன் எங்கோ தவறிப்போய்விட்டான். இவ்வளவு நாளாகியும் அவனைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அவனைக் கொலை செய்திருப் பார்கள் என்று சொல்லுகிறார்கள். அக்கா, எங்க அண் ணன் மிகவும் நல்லவன். என்னிடம் அவனுக்கு நல்ல பிரியம் அக்கா. அவனைக் காணாமல் என்னாலே இருக்கவே முடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. நிசமாய் அவன் செத்துத்தான் போயிட்டாஞ அக்கா?''—அவள் கண்ணில் ஏக்கமும் துயரமும் பிரதி பலித்தன.

''சரஸ்வதி!''

''என்ன அக்கா?''

''கவலைப்படாதேம்மா. உன் அண்ணன் எப்படியும் கிடைத்துவிடுவான்.''

''நிசமாவா அக்கா?''

''...?'' இந்தக் கேள்விக்கு நான் என்ன பதிலைச் சொல்வது?— குழந்தைக்கு தென்பளிப்பதாக எண்ணி அதை ஏமாற்றுவதா?

''அவனைக் காணுமல் என்ஞல் இருக்கவே முடியவில்லை அக்கா.'' சரஸ்வதியின் இந்தத் துயரம் என் இதயத்தைக் கசக்கிப் பிழிந்துகொண்டிருந்தது.

எனது அண்ணன்—, அவனது அந்தத் தோற்றம்— சரஸ்வதி—, அவளின் காணுமற்போன அவளது அண் ணன்—, ஐயோ!—, ஏன் இந்தக் கொடுமை?

''சரஸ்வதி!''

''என்னக்கா?''

''ஒன்றுமில்லையம்மா.''

''சரஸ்வதி!''

''அக்கா?''

''... ... ... ... ...''

''ஏன் அக்கா அழுகிறீங்கள்?''

''அழுகிறேஞ?— இல்லையம்மா—, நான் அழவில்லை.''

''எங்கள் அண்ணன் காணுமல் போய்விட்டான் என்று அழுகிறீங்களா அக்கா? அழாதீங்க அக்கா. அழுதாப் போலை அவன் வந்துவிடவா போருன்?''

''சரஸ்வதி!—''--அவளை அருகில் இழுத்து இறுக அணைத்துக்கொண்டேன். வேறு எப்படி நான் என் உணர்ச்சிப் பெருக்கை காட்டிக்கொள்ள முடியும். இந்தக் குழந்தைக்கு வயதுக்குமீறிய அறிவையும் கொடுத்து, வயதுக்கு மீறிய துயரத்தையும் கொடுத்தானே.

சரஸ்வதியைத் தட்டிக்கொடுத்துத் தேறுதல் கூறி, அவள் இருக்கைக்கு அனுப்பினேன். கிண்டிக் கிளறிவிடப்பட்ட என் மனம் உள்ளுக்குள்ளேயே கிடந்து எரிவு எடுத்துக்கொண்டிருந்தது.

இது என்ன அசுர விளையாட்டு?— கொடுப்பதுவும், கொடுத்ததைப் பறிப்பதுவும், படைப்புத் தெய்வத்துக்கு இது ஒரு கேளிக்கையா? இதன் இரகசியம் என்ன? ஏன் அந்தக் கேளிக்கை? ஏன் இந்த விளையாட்டு? அண்ணனைக் காணாத துயரத்தில் வாடி வதங்கிப்போயிருக்கும் அந்தப் பச்சைக் குழந்தை சரஸ்வதி, மகனின் பிரிவுத் துன்பத்தால் ஏற்பட்டுள்ள வேதனையை வேண்டுமென்றே இயல்பாயுள்ள இயற்கைக்கு மீறி வலிந்து தாங்கிக்கொள்ளும் ஒரு தாய்; என் அண்ணன்—என் அப்பா?

ஒன்றுமே புரியவில்லை.

பாடசாலை முடிந்து குழந்தைகள் போனபிற்பாடு, எல்லோருமாகச் சாப்பிட உட்கார்ந்தோம். என்னுல் இரண்டு கவளம்கூடச் சீராகச் சாப்பிட முடியவில்லை. மனம் ஒரேயடியாய் சோர்ந்து விழுந்துவிட்டது. சரஸ்வதி எனக்கு முன்னுல் நின்று ''நீங்க நம்பமாட்டீங்க அக்கா. நாங்கள் ஐஞ்சு நாளாய்ச் சாப்பிடவில்லை'' என உரத்த சத்தத்துடன் கூவிச் சொல்வதுபோன்ற பிரமை. என் செவிகளில் அவளது குரல் கணீர், கணீரென்று ஒலித்துக்கொண்டிருந்தது. அந்தக் குழந்தைக்கே தெரியும், தாங்கள் ஐந்து நாட்கள் பட்டினி கிடந்ததை யாரும் நம்பமாட்டார்கள் என்று. எப்படித்தான் நம்புவது? அந்தக் குழந்தை ஐந்து நாட்களாய்ச் சாப்பிடவில்லையென்ருல், அதைவிடக் கொடுமை ஒரு குழந்தைக்கு இந்த உலகத்தில் இருக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கையைக் கழுவிக்கொண்டு எழும்பியபோது எல்லோரும் என்னையே பார்த்தார்கள். பரமேஸ், என்னவோ, ஏதோ என்று பயந்துபோய்த் திரு திருவென்று விழித்தாள்.

''ஏன் கனகம், சாப்பிடவில்லை'' என்றார் பூரணம் அக்கா.

''பசியில்லை அக்கா.''

''ஏன், என்ன நடந்தது?''

''எனக்குத் தெரியவில்லை அக்கா.''

''உங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் எனக்குத் தெரிகிறது. நீங்கள் மிகவும் பலவீனமானவர்'' என்று சிவபாதம் குறுக்கிட்டார். எல்லோருடைய பார்வையும் அவர்மீது விழுந்தது. நானும் திடுக்கிட்டாற்போல் அவரைப் பார்த்தேன். ஏன் அப்படிச் சொன்னார்? என் உடம்பு நடுங்கியது. அவர், பின் எதுவும் பேசாது சாப்பாட்டில் கவனமாயிருந்தார்: மற்றவர்களும் ஒன்றும் புரியாமல் சாப்பாட்டில் கவனத்தைச் செலுத்தினர்.

''ஏன் அப்படிச் சொன்னீர்கள்?'' —தடுமாறியபடி கேட்டுவிட்டேன்.

அவர் என்னை நிமிர்ந்து பார்த்தார்!

''நீங்கள் இன்னமும் அதையேதான் நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா? நான் வித்தியாசமாக எதுவும் சொல்லவில்லை. குழந்தைகளுடன் நீங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். அதனால்தான் சொன்னேன்'' என்றார்.

நான் எதுவும் பேசாது வெளியே வந்தேன். சிறிது நேரத்தில் பரமேசும் என்னைத் தொடர்ந்து சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்தாள்.

''ஏன் அக்கா சாப்பிடவில்லை?''

''எனக்குப் பசிக்கவில்லையம்மா. ஏன் இதைப் பெரிது படுத்திக் கேட்கிறாய்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் எதுவும் பேசாமல் இருந்தாள். எதுவித அர்த்த மும் இல்லாமல் இந்தச் சிறிது நேரத்துக்குள் அவள் முகம் வாடிப்போயிருந்தது.

என்ன இருந்தாலும் நான் பலவீனமானவள்தான்.

மாலையில் எல்லோருமாகச் சிறிது தூரம் நடந்து, இடங்களைப் பார்த்துவரச் சென்றோம். சிவபாதம் மட்டும் எங்களுடன் வராமல் பள்ளிக்கூடத்திலேயே நின்றுவிட் டார்.

நெத்தலி ஆற்றைத் தாண்டி நடந்துகொண்டிருந் தோம். பாதையின் இரு மருங்கிலும் ஒரே வனக்காடு. இன் னும் சில காலத்தில் இந்தச் சுவடே தெரியாமல் நாடாகி விடும். இடைக்கிடை சிலர் அந்த முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். எங்களைக் கண்டதும் ஒருவர், தன் தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து மரியாதை செய்தார்.

''என்ன, காடு வெட்டுகிருப்போல இருக்கு?'' என்று அந்த ஆளைப் பார்த்து பூரணம் அக்கா கேட்டார்.

''ஆமாங்க. நாம இருக்கிறதற்கு ஏதாவது வழி பார்க் கத்தானே வேண்டும். இனியும் நாங்கள் இருந்த இடங் களுக்குத் திரும்பிப் போக முடியுமா? அதெல்லாம் இனிச் சரிப்பட்டு வராது. ஏதோ இந்த இடத்திலேயாவது இனி அமைதியாக காலம் தள்ள முடிந்தால் போதும்.''

''காணிகளை பிரித்துப் பிரித்துத் தந்திருக்கிருர்களா?''

''ஆமாங்க. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வோர் ஏக்கர் குடியிருப்புக் காணி இப்போது தந்திருக்கிருர்கள். இதை விடக் கமச் செய்கைக்கும் மும்மூன்று ஏக்கர் தருவதாகச் சொல்லுகிருர்கள். நேரத்தோடு தந்துவிட்டால் நாங்கள் வெட்டி வெளியாக்கி ஏதாவது பயிர், கொடியைச் செய்ய லாம்.''

''உங்கள் பேர் என்ன?''-- எப்படியோ ஏதோ ஓர் எண்ண மோதலில் நான் கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ராமையயாவுங்க. சரஸ்வதி என்ற ஒரு குழந்தை பள்ளிக்கூடத்துக்கு வந்திருக்கே, அது என் குழந்தை தானுங்க.''

''ஒரு குழந்தை மட்டும்தானு?''- பூரணம் அக்கா தொடர்ந்து கேட்டார்.

''இல்லே இன்னெருமகனும். அதை ஏன் கேட்கிறீங்கள்?'' என்று நீட்டிக்கொண்டு பேசினர். நான் அந்த இடத்தைவிட்டு சிறிது தூரம் முன்னேக்கி நடந்தேன். பிறகுதான் நான் அந்த இடத்தில் நிற்காது நடந்திருக்கக் கூடாது என்று உணர்ந்துகொண்டேன். தன்னுடைய துன்பக் கதையைக் கேட்பதில் நான் அக்கறை காட்டவில்லேயே என்று அந்த மனிதன் நினைக்கும்படி நான் நடந்துவிட்டேனே என்று வேதனைப்பட்டேன். அந்தக் கதையை இன்னெரு தடவை கேட்பதற்கு வேண்டிய வலிமை என்னிடம் இல்லேயோ என்னவோ?

சரஸ்வதியின் தந்தையைக் கண்டதன்பின் என் மனம் சிறிது விரிவடைந்து இலேசாக இருந்தது. தனது கஷ்டங்கள் எல்லாவற்றையும் மறந்து வாழ முயல்கின்ற இந்தத் தன்மை எனக்கு வியப்பையும் உற்சாகத்தையும் அளித்தது. அந்தத் துன்பங்களின் அடி இன்னும் இருந்து கொண்டே இருக்கின்றது. அப்படியிருந்தும் காடுவெட்டிப் பயிர்செய்து அமைதியாக வாழவேண்டும் என்று நினைக்கிறது அந்த மனம்!

சிறிது நேரம் நடந்து சென்றதும், ''இனித் திரும்புவோம். பிறகு இருட்டிவிடும்'' என்றார் பூரணம் அக்கா. ஏதோ கனவு உலகத்தில் என்னைச் சஞ்சரிக்கவிடாமல் பிடித்து இழுப்பது போன்றிருந்தது. இந்த உலகம், இந்த இயற்கை எவ்வளவு அழகுடையது. இந்த மனிதர்கள் மட்டும் இந்த இயற்கையோடு ஒன்றிச் சந்தோஷமாக ஏன் வாழமுடியவில்லே?

நாம் திரும்பியபோதும் அந்த மனிதர்கள் காட்டுக்குள் வேலே செய்துகொண்டே இருந்தார்கள். உழைப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையை உணர்ந்த இந்த மனிதர்களால்தான் உலகம் வாழ்கின்றது. உலகத்தை தம் உழைப்பின் சக்தியால் அவர்கள் வாழவைக்கிறார்கள். அந்த உலகமோ இந்த மனிதர்களை ஓட ஓட விட்டு விரட்டி அடிக்கின்றது. உழைப்பு ஒன்றைத் தவிர வேறெதுவும் அவர்களுக்குத் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தால், பிறகு உலகம் எப்படி வாழ முடியும்?

நாம் போனபோது, சிவபாதம், பள்ளிக்கூட மேசை ஒன்றில் யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

''என்ன மாஸ்டர், எந்தக் கப்பல் கவிழ்ந்துவிட்டது?'' என்றாள் பத்மா.

''இல்லை. எதையும் நான் கவிழ விடமாட்டேன்.''

''அது எப்படி உங்களால் சாத்தியமாகும்?''

''என் பலம் எனக்குத் தெரியும்?''

கேள்வியும் பதிலும் எங்களுக்குச் சிரிப்பாக இருந்தன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

வெள்ளிக் கிழமை வந்தது. பாடசாலை தொடங்கி ஐந்து நாட்களாகிவிட்டன. இந்த நாட்களின் ஓட்டத்தில் நாம் ஒரு சிறு குடும்பம் போல ஆகிவிட்டோம். பத்மா, கமலாஜனி, சுந்தரமூர்த்தி எல்லோருமே ஒருவரோடொரு வர் மனம்விட்டுப் பேசிக் கலகலப்பாயிருந்தோம். பூரணம் அக்காவும் ஓரளவு ஒதுங்கியும் ஒட்டியும் இருந்தார். சிவ பாதம் மட்டும் ஒருவரோடும் ஒட்டிக் கொள்ளாமலும் மனம் விட்டுப் பழகாமலும், தனிப் போக்காகத் தானும் தன்பாடும் என்றிருந்தார். எல்லோருக்கும் அவர் ஒரு கேள்விக் குறியாகவே தோன்றினர். வெளிப்படையாக யாரும் அப்படிக் காட்டிக் கொள்வதில்லை.

பள்ளிக்கூடம் முடிந்ததும் மாலையில் எல்லோரும் தத் தம் ஊருக்குப் போகப் புறப்பட்டார்கள். எனக்கும் பரமேசைக் கூட்டிக்கொண்டு போக வேண்டியிருந்தது. அவளைத் தனியாக அனுப்பக் கூடியதாயுமில்லை. சிவபாதம் தான் வீட்டுக்குப் போகவில்லை என்றார். பூரணம் அக்காவும் என்னுடன் வருவதாகச் சொன்னர். சிவபாதம் மட்டும் தான் தனியாக நிற்க வேண்டியிருந்தது.

''சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?''— என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது என்ன கேள்வி? நீங்கள் போனால் நான் பட்டினியாகவா இருக்கப் போகின்றேன்?"— என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

"பின்னே எப்படிச் சாப்பிடுவீங்கள்?"

"எனக்குச் சமையல் செய்யத் தெரியும்."

நான் குபீரென்று சிரித்துவிட்டேன். அவர் எதுவும் பேசாது அமைதியாக இருந்தார்.

அவர் பிடிவாதமாகத் தான் சமையல் செய்து சாப்பிடுவதாகச் சொன்னார். அதனால் அவருக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து வைக்க வேண்டியிருந்தது,

கூண்டுக்கிளி கூண்டிலிருந்து வெளியேறத் துடிப்பது போல், பத்மாவும் சுந்தரமூர்த்தியும் வீட்டுக்குப் போவதில் ஆவலாயிருந்தனர்.

"நான் வருகிற கிழமை திரும்பி வருவேனோ, இல்லையோ—" என்றாள் பத்மா.

"ஏன்?"— என்று கேட்டேன்.

"இந்த இடத்தைப் பற்றி அம்மா கேட்பாள். நான் சொன்னதும் சிலவேளை என்னைப் போக வேண்டாமென்று சொன்னாலும் சொல்வாள்" என்றாள்.

அவளது அந்தப் பேச்சில் நான் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. அவளது பேச்சிலும் அங்க அசைப்பிலும் அந்தஸ்தின் பெருமையே தொனித்தது. அப்படி அவள் சொல்லிக் காட்டுவதிலேயே அவளுக்கு ஒரு தனி இன்பம்.

நாம் முல்லைத் தீவுக்கு வந்து சேர்ந்த போது நன்றாக இருட்டிவிட்டது. வழியெல்லாம் சரஸ்வதியையும், சிவபாதத்தையும் பற்றிய சிந்தனையாகவே இருந்தது. இந்த ஐந்து நாட்களுக்குள் சரஸ்வதி என்னுடன் எவ்வளவு தூரத்திற்கு ஒட்டிக் கொண்டுவிட்டாள். எனக்குத் தெரியாமலே நானும் அவளுடன் எவ்வளவோ இணைந்துவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் குழந்தைகளுமே துன்பப்பட்டவர்கள்தான். பெரும்பாலும் தந்தையை, தாயை, அண்ணனை, தங்கையை இழந்தவர்களாகத் தான் எல்லோரும் இருந்தார்கள். அப்படியிருந்தும் சரஸ்வதியிடம் மட்டும் ஏன் எனக்குத் தனிப்பட்ட ஈடுபாடு?— அந்தக் குழந்தை தன் கஷ்டத்தைச் சொல்லிய அந்தத் தோரணையினலோ என்னவோ? அது மட்டுந்தான் காரணமென்று சொல்ல முடியாது. மனத்துக்குப் புரியாத ஏதோ ஓர் ஒற்றுமை. அது பிய்த்துப் பிடுங்கித் தெரிந்துகொள்ளக் கூடியதல்ல. மானசீகமாக உணர்ந்துகொள்ளக்கூடிய ஒருவித உணர்வு. சிவபாதத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருநாள் படுக்கைக்குப் போகும்போது பத்மா சொன்னுள், ஏதாவது காதல் வியாதியாயிருக்குமென்று. ஆளைப் பார்த்தால் எனக்கு அப்படியும் தோன்றவில்லை,

எது எப்படியிருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் அவர் எனக்கொரு புதிராகவே இருந்தார்.

அம்மாவுக்கு எங்களைக் கண்டதும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. பலநாள் பிரிந்திருந்தவர்கள் போன்ற உணர்வுடன், பரமேஸ் அம்மாவைக் குழந்தை மாதிரிக் கட்டித் தழுவிக் கொண்டாள். அம்மா நன்றுக மெலிந்து காணப்பட்டாள்.

''என்னம்மா, நீ சாப்பிடுறதில்லையா?''— என்றேன்.

''எனக்கென்ன, நான் போக வேண்டியவள். இன்றே நாளையோ என்று நாட்களை எண்ணிக் கொள்ள வேண்டியவள்'' என்றுள்.

சாப்பாடானதும் நானும், பரமேசும் பாயை விரித்துப் படுத்துக்கொண்டோம். பிரயாணக் களைப்பினுல் உடல் அசதியாக இருந்தது. பூரணம் அக்காவும் அம்மாவும் குசினிக்குள் இருந்தபடியே, நெடுநேரமாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுச்சாமம் அளவில், திடுக்கிட்டு அலறியபடி தூக்கத்திலிருந்து எழுந்தேன். அம்மாவும் "என்ன?— என்ன?" என்று கேட்டுக் கொண்டு எழுந்திருந்தாள். பூரணம் அக்காவுக்கு விளங்கிவிட்டது.

"என்னம்மா கனவு கண்டாயா?" என்றார்.

"ஆமாம் அக்கா!"

"சரி, எழுந்து வாயைக் கழுவிவிட்டுப் பயப்படாமல் படுத்துத் தூங்கு." என்றார்.

"சரஸ்வதி— உனக்கென்னவாவது நேர்ந்து விட்டதா?— ஐயோ— அந்தக் குழந்தைக்கு எதுவும் நேரக் கூடாது." என் உள்ளம் வேதனையோடு அலறியது.

"தலைவிரி கோலமாக முகமெல்லாம் உரஞ்சுப்பட்டு, இரத்தம் கசிந்து கசிந்து ஓட, அரையில் கட்டிய பாவாடை கிழிந்துபோய்த் துண்டம் துண்டமாகத் தொங்க, சரஸ்வதி "அண்ணா— அண்ணா—" என்று கதறிக் கொண்டு ஓடுகிறாள். எங்கோ, புரிந்துகொள்ள முடியாத, மலையும் மடுவும் சூழ்ந்த பெரும் பிரதேசம். கால் தடுமாறி விழுந்து எழுந்து கதறிக் கதறி ஓடுகிறாள். மலை— மடு— மலை— மடு— பள்ளத்தாக்கு— மடு— குழந்தை எங்கே?— ஐயோ! குழந்தையைக் காணவில்லையே—, அந்த மடுவில் நீர்க்குமிழி ஒன்று மேலெழுகிறது. சிறிது நேரத்தில் சரஸ்வதி மேல் ஓங்குகின்றாள். அப்போது வாயைப் பிளந்தபடி பார்த்துக் கொண்டிருந்த ஒரு முதலை— அதன் வாயில் சரஸ்வதி—" ஏன் இந்தப் பயங்கரமான கனவு?

நெடு நேரமாகியும் என்னால் தூங்க முடியவில்லை. சரஸ்வதியின் துயரமும் ஏக்கமும் சூழ்ந்த அந்த முகம், எங்கே நோக்கினாலும், என்னத்தை நினைத்தாலும் அங்கெல்லாம் தோன்றித் தோன்றி, "அண்ணனைக் காணாமல் என்னால் இருக்க முடியவில்லையே அக்கா—" என்று சொல்லிக் கொண்டே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ் குறட்டை விட்டபடி, நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து போயிருந்தாள். அவளது குறட்டை ஒலி இருள் சூழ்ந்த அந்த நடுநிசியின் நிசப்தத்தையும் பிளந்துகொண்டு பயங்கரமாக ஒலித்தது.

காலையில் எழுந்த போது வெயில் நன்ருக ஏறிவிட்டிருந்தது. கண்கள் எரிவு எடுத்தன.

''என்னக்கா, இவ்வளவு நேரமா தூங்குவார்கள்?'' என்ருள் பரமேஸ்.

சோம்பலை முறித்துக் கொண்டு, எழுந்து குசினிப் பக்கம் போனேன். இரவு கண்ட அந்த பயங்கரமான கனவு ஞாபகத்திற்கு வந்தது. உடம்பை ஒருமுறை சி லி ர் த்துக் கொண்டு, அம்மாவின் சமையல் வேலையைக் கவனித்தபடி இருந்தேன்.

சரஸ்வதியைப் பற்றிய எண்ணம் தோன்றுகின்றபோது கூடவே புரிந்துகொள்ள முடியாத ஒருவித பயங்கரஉணர்வும் தோன்றி மனதை உலுக்குகின்றது. எதை நாம் மறக்க வேண்டுமென்று முயல்கின்ருேமோ, அது நம்மை ஆட்டி வைக்கின்றது. நாம் அதை மறப்பதற்காக எடுக்கின்ற அந்த முயற்சியே அதன் தூண்டுகோல். அந்தக் கனவையும் சரஸ்வதியையும் எவ்வளவு முயன்றும் என்னுள் இருந்து பிரித்துக்கொள்ள முடியவில்லை.

நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, தலைமை ஆசிரியரின் மூத்த பையன் கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து பூரணம் அக்காவிடம் கொடுக்கும் படியாகத் தந்தான். அது பூரணம் அக்காவின் பெயருக்கே விலாசமிட்டு வந்திருந்தது.

எங்கேயிருந்து வந்திருக்கின்றது என்று பார்த்தேன். 'சீல்' விளக்கமில்லாமல், கண்டுபிடிக்க முடியாதபடி இருந்தது. மேல் விலாசம் மணிமணியான எழுத்துக்களால் அழகாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாடு முடிந்ததும், பரமேஸ் தருமபுரத்தையும் அந்தச் சனங்களையும் பற்றித் தன் வர்ணனைகளையும் சேர்த்து விரிவுபடுத்தி, அம்மாவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். அம்மாவும் அவளது பேச்சில் இலயித்துப் போய், அளவு கடந்த ஆர்வம் காட்டிக் கேட்டுக் கொண்டிருந்தாள்,

எனக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. அவர்களது பேச்சில் ஆர்வம் காட்டவோ, அவர்களுடன் சேர்ந்து கதைக்கவோ என்னுல் முடியவில்லை.

தூக்கத்தின் வெறியான ஒரு நிலை. தூங்கவும் முடியாமல், விழிக்கவும் முடியாமல், ஏதோ ஒரு கனவு நிலையில் அந்தரப்பட்டுக் கொண்டு படுத்திருந்தேன். அதற்குக் காரணம் பரமேசின் சிரிப்பும் உரத்த சத்தமும் சேர்ந்த கதை தான். கூடவே ஓர் ஆண் குரலும் சேர்ந்து அட்டகாசமாக இருந்தது. தூக்கக் கிறக்கத்தோடு கண்களைச் சிறிது விழித்துப் பார்த்தேன். இராமுப் பிள்ளையரின் மகன் இராசவேலு. அவனைப் பார்த்ததும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவன் ஏன் இங்கே வந்தான்? பெரிய பணக்கார வீட்டுப்பிள்ளை. எங்கள் வீட்டுக்கு வரவேண்டிய அவசியம் என்ன? இங்கே படிக்கும்போது பரமேசுடன் ஒரே வகுப்பில் படித்தவன். பிறகு, யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரியில் சேர்ந்து படிக்கின்றுன்.

எது எப்படியிருந்தால் என்ன? நித்திரை வெறி, வெறி தான். தூக்கத்தைக் கலைத்துக் கொள்ளவோ, எழுந்திருக்கவோ மனமில்லை. புரண்டு புரண்டு படுத்தேன். அந்நிய ஆடவன் ஒருவன் இருக்கின்றுன் என்பதே எனக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

எப்படியோ நன்றாகத் தூங்கிவிட்டேன், பரமேஸ் எழுப்பியிராவிட்டால் இன்னும் சிறிது நேரம் தூங்கியிருக்கலாம் என்ற குறைமனத்துடனேயே எழும்ப மனமின்றி எழுந்திருந்தேன். எழும்பியபோது மதியம் திரும்பிப் பகல் ஒரு மணிக்கு மேலாகியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கே அக்கா அந்தக் கடிதம்?—"

"என்ன கடிதம்?"

"பூரணம் அக்காவுக்கு வந்த கடிதம்."

கடிதத்தை எடுத்துப் பூரணம் அக்காவிடம் கொடுத்தேன். அவர் என்னிடமிருந்து அதனைப் பெற்று சிறிது நேரம் வரை மேலும் கீழுமாகப் புரட்டிப் புரட்டிப் பார்த்தபடி இருந்தார். அவர் முகத்தில் கேள்விக் குறியுடன் கூடிய ஒரு வித இனம் புரிந்து கொள்ள முடியாத ஏக்கம் பிரதிபலித்தது. என்ன காரணத்தினுலோ பூரணம் அக்காவின் முகத்தை— அதன் நெளிவு சுளிவுகளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பூரணம் அக்கா அமைதியாகக் கடிதத்தைப் படித்து முடித்தார். அதனைப் படித்து முடிக்கும் வரைக்கும் அவரது முகத்திலிருந்து எந்தவித உணர்ச்சியையும் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. முடிவில் ஒரு பெருமூச்சு— நெஞ்சில் பொதிந்து கிடந்த துயரத்தின் திரட்சியான ஒரு கூட்டாகவே அந்தப் பெருமூச்சு எனக்குத் தோன்றியது.

"என்ன அக்கா?"

"ஒன்றுமில்லை."

"ஏன் உங்கள் முகம் ஒருமாதிரியாய் இருக்கின்றது?"

"அப்படியா விசேஷமாய் ஒன்றுமில்லையே."

தன்னைச் சமாளித்துக் கொள்வதற்காகச் சிரிக்க முயன்ருர். அந்தச் சிரிப்பினுல் தன்னைச் சமாளித்துக்கொண்டு என்னை ஏமாற்றிவிட்டதாக நினைத்தாரோ என்னவோ? எல்லா மனிதர்களும் இதே மாதிரித்தான். தங்களைக் காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக மேலோட்டமாய் நடிக்க முயல்கின்ருர்கள். என்ன?-- ஏன்?-- மேலும் பிடுங்கிக் கேட்க எனக்கு மனம் வரவில்லை. சிறிது நேரம் வரை எதுவும் பேசாதிருந்தேன். அவரும் எதுவும் பேசவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்தார். எப்படித்தான் திறமையாக நடித்து மற்றவர்களை ஏமாற்றிக் கொண்டாலும் உள்ளே ஒன்றிப் போயிருக்கும் உள்ளத்திற்கு அதன் உணர்ச்சிகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். அந்த உணர்ச்சிகளை எப்படி ஏமாற்ற முடியும்?

திரண்டு வரும் கறுத்த முகிற் கூட்டம் மழையின் அறிகுறிதான். அறிகுறியேயன்றி கட்டாயம் மழை பெய்து தான் ஆகவேண்டுமென்பதில்லை, காற்று வாக்கில் அந்த முகில்கள் கலைந்துபோகலாம். பூரணம் அக்காவின் முகத்திலும் இத்தகைய பிரதிபலிப்பே இருந்தது. கண்ணீர், இந்தா வருகிறேன் என்ற நிலையில் அவரது முகம் வீங்கி இருண்டு கறுத்துப் போயிருந்தது. உறவினர் யாருக்கும் ஏதாவது சுகவீனமோ அல்லது வேண்டியவர்கள் யாராவது இறந்து போயிருப்பார்களோ-- என்று பலப்பல எண்ணி மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் குமைந்து கொண்டிருந்தேன்.

இவையெல்லாம் ஒரு சிறிது நேரம்தான். அம்மா சாப்பாட்டுக்கு வந்து அழைத்ததும், ''வா கனகம் சாப்பிடலா''மென்று பூரணம் அக்கா எல்லாவற்றையும் மறந்து கலகலப்பாய் அழைத்தார். நேரத்திற்கு நேரம் உணர்ச்சிகளை வேண்டியபடி மாற்றிக் கொள்ள இவரால் எப்படித்தான் முடிகின்றதோ என்று எண்ணி வியந்தேன்.

''மனிதன் மனிதன்தான். அவன் தெய்வமுமில்லை, மிருகமுமில்லை. இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் அவன் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்'' என்று முன்னொரு போது பூரணம் அக்காவின் வாயால் கேட்ட இந்த வார்த்தை ஞாபகத்திற்கு வந்தது.

அப்படியானால் இது என்ன நிலை?-- தெய்வமும் மிருகமுமில்லாத-- இன்பமும் துன்பமுமற்ற இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையா?--

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

ஞாயிற்றுக்கிழமையே தருமபுரத்துக்குப் புறப்பட்டோம். அம்மா பஸ் நிற்கும் இடம்வரை வந்து எங்களை பஸ்ஸில் ஏற்றிவிட்டுச் சென்ருள்.

கறிப்பட்டமுறிப்பில் பஸ் நின்றபோது ஏறுபவர்களும், இறங்குபவர்களும் சேர்ந்து ஒரே இரைச்சலாக இருந்தது.

''இந்தாண்ணை இதைப்பிடி--'' நான் திரும்பிப் பார்த்தேன். ஒரு நடுத்தர வயதுப் பெண், இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றைக் கையில் நீட்டியபடி நின்ருள்.

''வேண்டாம் தங்கச்சி. நீ கொண்டுபோ. சொன்னுல் கேட்கவேணும்.'' அவன் ஒரு பலாக்காயைத் தூக்கி பஸ்ஸில் வைத்தான். அந்தப் பலாக்காய்க்குரிய விலைபோலும் அது. அவளும் அந்தப் பணத்தை அவனிடம் கொடுத்து விடவேண்டும் என்று படாத பாடுபட்டாள். அவனும் பிடிவாதமாய் அதனை வேண்டிக்கொள்ளவில்லை.

திரும்பிப் பார்த்தபோது இவர்களால்தான் பஸ் தாமதித்து நிற்பது தெரிந்தது. அவர்களது பிரச்சினையும் ஒருவழியிலும் தீருவதாகத் தெரியவில்லை. அவள், அவனிடம் வலுக்கட்டாயமாக அந்தப் பணத்தைத் திணித்தாள். அவன் அதனைத் திரும்பவும் அவளிடம் திணித்தான்.

''ஏனப்பா, அது பாவம் கொடுக்கவேணுமென்று ஆசைப்படுதே. நீதான் பெற்றுக்கொள்ளேன்.'' பஸ்ஸில் இருந்த கிழவி ஒருத்தி சமரசம் செய்துவைக்க முயன்ருள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னணை பாட்டி, ஒரு தங்கச்சிக்கு இந்தப் பலாக் காயைக் கொண்டுவந்து கொடுத்தால், அதற்கு அவள் பணம் தருவதென்றால், பிறகு அண்ணன் என்ன, தங்கச்சி என்ன? காசு வேண்டுமென்றால் சந்தையிலே கொண்டு போய்க் கொடுப்பேனே.'' அவன் சொன்னது கிழவிக்கு நியாயமாகப் பட்டதுபோலும். கிழவி அந்தப் பெண்ணைப் பார்த்து வாயைத் திறப்பதற்கிடையில் ''சரி-சரி-, இப்படி வெயிட் பண்ணினால் மற்றவர்கள் போறதில்லையா? — பஸ்ஸை எடு டிரைவர்—'' குரல் வந்த திசையைப் பார்த்தேன். ஒரு நீளக் காற்சட்டைக்காரரர். அவருக்கு இந்த அண்ணன் தங்கை சமாசாரமெல்லாம் அநாகரிகமாகப் பட்டதுபோலும். டிரைவரும் ஒரு வயோதிபர். குரல் வந்த திசையை உற்றுப் பார்த்துவிட்டு பஸ்ஸை எடுத்தார். அந்தப் பெண் தனக்கு ஏற்பட்ட தோல்வியினால் தன் சகோதரனை அன்பால் கடிந்துவிட்டுப் பேசாதிருந்தாள்.

பூரணம் அக்காவைத் திரும்பிப் பார்த்தேன். இந்தக் கலாட்டா எதையும் அவர் கவனித்ததாகத் தெரியவில்லை. அவரது மனம், சிந்தனை எல்லாமே எங்கோ சென்றிருந்தன. பஸ்ஸுக்கு வெளியே ஜன்னலுக்கு ஊடாக வெறித்துப் பார்த்தபடி இருந்தார்.

''அக்கா.''

''ஏம்மா?''

''என்னக்கா, ஒருமாதிரியாயிருக்கிறீங்க?''

''ஒன்றுமில்லையேம்மா.''

''இல்லேக்கா, நீங்க எதையோ எனக்கு மறைக்கப் பார்க்கிறீங்க.''

''........'' மௌனம்.

பரந்தனில் இருந்து தருமபுரத்துக்குப் போவதற்கு எவ்வித வசதியும் இல்லை.

''நடந்துகொண்டிருப்போம் கனகம். வழியில் ஏதாவது அகப்பட்டால் சரி. இன்றேல் நடந்தே போய்விடலாம்'' என்றார் பூரணம் அக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தருமபுரம் வந்து சேரும்வரை லொறியோ, காரோ எதுவும் வரவில்லை. நடந்ததினுல் கால்கள் வலி எடுத்தன.

விடுதி பூட்டப்பட்டிருந்ததால் மற்றைய ஆசிரியர்கள் இன்னும் வரவில்லை என்று தெரிந்தது. பக்கத்தில் நின்ற குழந்தையிடம், ''சிவபாதம் வாத்தியார் எங்கே?'' என்றேன்.

''அவையள் கோயில் கட்டுகினம் அக்கா.''

''என்ன கோயில்?''

''சுவாமி இருக்கிற கோயில் அக்கா.''--எனக்குச் சிரிப்பாக இருந்தது.

''எங்கே கட்டுகினம்?''

''அங்கே, ஆற்றங்கரை அருகில்.''

சிவபாதத்தைக் கூட்டிவரும்படி ஒரு பையனை அனுப்பினேன், அந்தப் பையன் போய் சிறிது நேரத்தில் கையில் திறப்புடன் வந்தான். சிவபாதம் வரவில்லை.

''எங்கே வாத்தியார்?'' என்றேன்.

''அவர் வர நேரமாகும் என்று சொன்னர் அக்கா.''

முதலில் சமையல்கூடத்தைத் திறந்து பார்த்தேன். உருளைக்கிழங்கும் பருப்பும் சேர்த்து ஒரே கறியாக ஆக்கி வைத்திருந்தார். கறியைத் தொட்டு நாக்கில் வைத்து உருசி பார்த்தேன். உப்போ, புளியோ எதுவுமேயில்லை. எப்படித்தான் அவர் இதைச் சாப்பிட்டாரோ? பூரணம் அக்காவையும் அழைத்துக் காட்டினேன். நான் எதிர்பார்த்த அளவுக்கு அவர் அதில் அக்கறை காட்டவில்லை. அவர் வரவிட்டுக் கேலி பண்ணவேண்டும் என்ற எண்ணத்துடன். அப்படியே இருந்தமாதிரி எல்லாவற்றையும் மூடி வைத்தேன்.

பொழுது நன்ருக இருட்டியும் சிவபாதம் வராதிருந்தார். கோவில் கட்டுவதில் அவருக்கு இவ்வளவு ஆர்வமோ என்று எண்ணி வியந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணம் அக்கா, இடாப்புகளை எடுத்து வைத்துக் கொண்டு பள்ளிக்கூட வேலையில் ஈடுபட்டார்.

வெளி விறாந்தையில் வந்துநின்று சுற்றும் முற்றும் பார்த்தேன். சுற்றிலும் ஒரே புகைமூட்டம். ஆங்காங்கே ஆரவாரமும் இரைச்சலுமாயிருந்தது. சமையல்வேலை, பழைய புதிய சமாசாரங்கள் பற்றிக் கதைப்பது, ஒருவருக்கொருவர் வாக்குவாதப்படுவது, இழந்த ஏதோ ஒன்றை நினைத்து அழுவது, எல்லாமே ஒரே நேரத்தில் நடந்து கொண்டிருந்தன.

ஒரு சமுதாய வாழ்க்கையை முழுதாக இதில் காண்பது போல் எனக்குத் தோன்றியது. இவர்களுக்குள்ளேயே எசமானனாக இருந்தவனும், அவனுக்கு குற்றேவல் புரிந்தவனுமாகப் பல்வேறு தரப்பட்ட மனிதர்கள் இருப்பார்கள். விதி அவர்கள் எல்லோரையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் சேர்த்து வைத்திருக்கிறது.

ஒரே இருள். அமாவாசைக்குக் கிட்டவுள்ள நாளாக இருக்க வேண்டும். இந்த இருளைப் பார்த்துக் கொண்டு நிற்பதிலேயே புரிந்துகொள்ள முடியாத ஒருவகை இன்பம் இருந்தது.

வெகு நேரமாகியும் சிவபாதம் வரவில்லை. காரணம் புரியாமல் என் நெஞ்சு அடித்துக்கொண்டது. அவர் நேரத்தோடு வருவதாலோ அல்லது வராமல் விடுவதாலோ எனக்கென்ன? இனம்புரியாத ஏதோ ஒருவித அக்கறை. மனிதத் தோற்றுவாய்க் காலத்தில் இரண்டு வெவ்வேறு மனிதர்களுக்கிடையில் எத்தகைய சம்பந்தம் இருந்திருக்க முடியும்? அதைப்போன்ற ஒன்ருக இதுவும் இருக்க முடியுமா?

நாலைந்து பேர் வருவது தெரிந்தது.

நான் விறாந்தையில் நிற்பதைக் கண்டதும் சிவபாதம் சிறிது நின்ருர். இவ்வளவு இருட்டுகின்றவரை நின்றதற்கு ஏதோவெல்லாம் ஏசிக் கொட்ட வேண்டும் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு. வெளிவரத் தகுதியற்றுத் தாஞகவே அடங்க வேண்டிய உணர்வுதானே.

''ஏன் இவ்வளவு நேரம்?''

அவர் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார். பின் என்ன நினைத்தாரோ?

''கோவில் ஒன்று கட்டுகிருேம்'' என்ருர்.

''உங்களுக்கு கடவுள் பக்தி நிரம்ப உண்டோ?''

''ஒரு காலத்தில் கடவுள் நம்பிக்கையே எனக்கில்லை. ஆனுல் ஒரு மனிதனுக்கு அந்த நம்பிக்கை அமைதியை அளிக்கமுடியுமென்று இப்போது நம்புகின்றேன்.''

''... ... ... ... ...''

''மற்றவர்கள் வரவில்லையா'' என்று கேட்டார்.

''இல்லை, நானும் பூரணம் அக்காவும்தான் வந்தோம்,''

எங்கள் சத்தம் கேட்டு பூரணம் அக்கா வெளியே வந்து எட்டிப் பார்த்தார். ஒருவரோடும் ஒன்றும் பேசாமல் சிறிதுநேரம்வரை அப்படியே நின்றுவிட்டுத் திரும்பிப் போய்விட்டார். ஏன் அவர் அப்படி ஒன்றும் பேசாது போஞர் என்று எனக்கு வேதனையாக இருந்தது.

''என்ன கோவில் கட்டுகின்றீர்கள்?'' சிவபாதத்திடம் கேட்டேன்.

''அது இன்னும் தெரியாது.''

இதை அவர் சொன்னதும் நான் பலமாகச் சிரித்து விட்டேன். அந்தக் குழந்தையைக் கேட்டபோது சாமி இருக்கிற கோயில்'' என்று சொல்லியது என் நினைவுக்கு வந்தது. இவரால் அப்படிக்கூடச் சொல்ல முடியவில்லையே என்று எண்ணினேன்.

''மட்டக்களப்பில் நீங்கள் எந்த இடம்!'' என்றேன்.

''டவுண்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சம்பாஷணை இந்த அளவில்தான் ஓடிக்கொண்டிருந்தது. மேற்கொண்டு பேசுவதற்கு எதுவும் இருக்கவில்லை. அவர் ஒன்றும் பேசாது உள்ளே சென்றார்.

விசித்திரமான ஒரு மனிதன்தான்!

குடியேற்றத் திட்ட அதிகாரியின் கந்தோரிலிருந்து பாட்டுக் கேட்டது. ஏதோ ஓர் இந்திப் பாட்டு. ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடுவது. மனதுக்கு இரம்மியமாக இருந்தது. பொருள் விளங்கவில்லையாயினும் அது ஒரு காதற் பாட்டு என்று புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

சினிமாப் பாடலோடு ஓடிய சிந்தனை, காதலைப்பற்றிய விவகாரத்தில் வந்துநின்றது. அத்தோடு கூட அம்மா சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தது.

''கனகம்! பரமேசும் இருக்கிறாள். நீயும் இனி இப்படியே இருக்கமுடியாது. எங்காவது உனக்கு ஒரு வழி பார்த்தால்தான் எனக்கு ஆறுதலாக இருக்கும்.''

பெற்றவர்களுக்கு எவ்வளவு பொறுப்பு. பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, அவர்களுக்கு கல்யாணம் செய்து வைக்கின்றவரைக்கும் அவர்கள் என்னென்ன கஷ்டப்படுகின்றார்கள்.

உண்மையாக நினைத்துப் பார்த்தால் கல்யாணம் செய்துகொள்வதற்கு எனக்கும் விருப்பம்தான். ''இப்போது என்ன அவசரம். ஆறுதலாகச் செய்துகொள்ளலாம்'' என்று வெறுமனே ஒரு சம்பிரதாயமாகச் சொல்வதற்கு எனக்கு விருப்பமில்லை. இருந்தும் என்ன செய்வது? சமுதாயத்தில் சாக்கடையாகக் கருதப்படும் என்னைப் போன்றவர்களுக்கு வேறு வழியே இல்லை.

பூரணம் அக்கா கூப்பிட்டார்.

''அங்கே என்னம்மா செய்கின்றாய்?''

''சும்மா நின்றேன் அக்கா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் சும்மா நின்று பொழுதைப் போக்கவேண்டும். ஏதாவது புத்தகத்தை எடுத்துவைத்து படித்துக்கொண்டு இருக்கலாமே.''

''என்னத்தை அக்கா படிக்கிறது?''

''ஏன், எல்லாம் படித்து முடிந்துவிட்டதா?''

நான் மெதுவாகச் சிரித்தேன். அவரது கடைசிக் கேள்வியில் கண்டிப்பு இருந்ததை உணர்ந்துகொண்டேன்.

காலையில் வகுப்பில் சரஸ்வதியைக் கண்டதும் மனதுக்குப் பெருத்த ஆறுதலாக இருந்தது. அவளைக் கட்டி அணைத்துக்கொள்ள வேண்டும் போன்றதொரு விசித்திர உணர்வு. கலகலப்பாக இருந்தாள். அவள் அண்ணன் கிடைத்துவிட்டானோ என்னவோ? ஆனாலும் கேட்டு அறிந்து கொள்வதற்கு மனம் வரவில்லை. அவளுடைய அண்ணன் இன்னமும் கிடைத்திராவிட்டால் அவளது உள்ளத்தைக் கிளறிவிடுவதாகவும் முடியும் என்ற எண்ணத்துடன் பேசா திருந்தேன்.

எனக்கு அரை மணித்தியாலம் ஓய்வு நேரம். அதே நேரத்தில் சிவபாதத்துக்கு என் வகுப்பில் பாடம் இருந்தது. நான் விடுதி அறைக்குள் சென்று படுத்திருந்தேன். மனம் தன்பாட்டுக்கு அலைந்துகொண்டிருந்தது. ஏதோ நிவர்த்தி பெறமுடியாத குறை ஒன்று என் வாழ்க்கையில் இருப்பதுபோன்ற ஒருவித உணர்வு. மனித மனம் ஒருபோதும் அமைதியடைவதில்லைதான். ஆனாலும் அந்த அமைதியின்மைதான் எனது இந்த உணர்வுக்குக் காரணம் என்று சொல்லமுடியாது. தேகம் களைப்பாக இருந்தது. சிறிது நேரம் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டேன்.

''அக்கா..., அக்கா.'' குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் போய் விழித்தேன். எனது வகுப்பு மாணவி ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்.

''என்ன?'' என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களை பெரிய ரீச்சர் கூட்டிக்கொண்டு வரச் சொல்லிச் சொன்னார்'' என்றாள்.

அவசர அவசரமாகப் புறப்பட்டு வகுப்புக்குள் சென்றேன். எனது வகுப்பில் யாருமில்லை. அக்கா பேசப் போகின்றாரே என்று பயந்துகொண்டிருந்தேன்.

''இஞ்சருங்கோ அக்கா.''

''என்ன அது?''

நிலத்திலிருந்து ஒரு காகிதத்தைப் பையன் ஒருவன் எடுத்து வந்தான். அதைக் கையில் வாங்கிப் பார்த்தேன். அந்த எழுத்துக்கள் எங்கோ எப்போதோ பார்த்தது போலிருந்தன. எங்கோ பழக்கப்பட்ட மிக மிக அருகாமையில் உள்ளதுபோல் தோன்றியது. வெகுநேர யோசனைக்குப் பின், அன்று பூரணம் அக்காவுக்கு வந்திருந்த கடிதம் நினைவுக்கு வந்தது. அதிலே எழுதியிருந்த மேல் விலாசத்து அதே எழுத்துத்தான் இதுவும். குண்டு குண்டாக கவர்ச்சியாக இருந்தது. இதுவும் பூரணம் அக்காவினுடையது தானே என எண்ணினேன். பிறருடைய கடிதத்தைப் பார்ப்பது தவறு என்று மனச்சாட்சி குத்திக்காட்டிய போதிலும், பூரணம் அக்காவுடையது என்று தீர்மானித்துக்கொண்டதும், அதனைப் பார்க்கவேண்டும் என்ற விசித்திர மனப்பான்மை ஏற்பட்டது.

மேலே தொடக்கத்தைப் பார்த்தேன். ''அன்பார்ந்த மகனுக்கு'' என்றிருந்தது. கீழே கையொப்பம் 'சிவமூர்த்தி' என்றிருந்தது.

சிவபாதத்துடையதாக இருக்குமோ என்ற எண்ணத்தில் அவரிடம் கொடுத்து அனுப்பி விசாரித்தேன். தன்னுடையதுதான் என்று பெற்றுக் கொண்டதாக கொண்டு சென்ற பையன் வந்து சொன்னான்.

சிறிது நேரம்வரை யோசித்தேன். சிலவேளை வெவ்வேறு ஆட்களின் எழுத்தாக இருக்கலாமென்று மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முடிந்ததும் பூரணம் அக்கா என்னிடம் வந்தார்.

''என்ன கனகம், உடம்புக்கு என்ன?''

''ஒன்றுமில்லையே.''

''பிறகேன் வகுப்பில் இருக்காமல் போய்ப் படுத்துக் கொண்டாய்?''

''அது எனக்குப் பிறீப் பீரியட். போய்ப் படுத்திருந் தாற்போல் உறங்கிவிட்டேன்.''

''ஒருபோதும் இனி அப்படி நடக்கக்கூடாது. பிறி பீரியட்டாக இருந்தாலும் அங்கே அறைக்குப் போக வேண்டாம்.''

''சரி அக்கா.''

மற்றைய ஆசிரியர்களும் பக்கத்தில் நின்றமையால் எனக்குச் சிறிது அவமானமாக இருந்தது. எனது தவறை எண்ணி வருத்தப்பட்டேன். இனிமேல் மிகவும் எச்சரிக்கை யாக நடந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிக்கொண் டேன்.

பூரணம் அக்கா போகின்றபோது, பத்மா, அவரைப் பார்த்துச் சைகையால் அழகு காட்டினாள். அதைக்கண்டு எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

''என்ன கனகம், சட்டமெல்லாம் மெல்ல மெல்லத் தோன்றுகின்றது'' என்றாள் பத்மா.

''இருக்கத்தானே வேண்டும்'' என்று வெட்டினாற் போல் பதில் சொல்லிவிட்டு அவ்விடமிருந்து நகர்ந்தேன்.

சிவபாதம் சமையல்கட்டுக்கு வந்தார்.

''எனக்குச் சாப்பாடு தருகிறீர்களா?''

''ஏன், எல்லோருமே சாப்பிடுகிறதுதானே''என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை; என்றால் தாமதித்திருக்க முடியாது. வேலை இருக்கின்றது. ஆட்சேபனை இல்லையென்றால் நானே போட்டுச் சாப்பிட்டுக் கொள்ளுகிறேன்.''

''அது எப்படி ஆட்சேபனை இல்லாமல் இருக்கமுடியும்'' என்றேன் தமாஷுக்காக.

அவர் முகம் இருந்தாற்போல் ஒடிக் கறுத்தது. நான் தமாஷுக்காகச் சொன்னேன் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

''சும்மா வேடிக்கையாகச் சொன்னால் நீங்கள் வருத்தப் படுகிறீர்களே. நான் போட்டுத் தருகிறேன், வாருங்கள்'' என்றேன்.

நான் இப்படிச் சிவபாதத்திடம் சொன்னபோது, அதற்கும் ஒரு நெளிப்பு பத்மா நெளித்ததை உணர்ந்து கொண்டேன். அதை நான் பொருட்படுத்தியதாகக் காட்டிக்கொள்ளாமல், அவருக்கு நான் சாப்பாடு போட்டுப் பரிமாறினேன்.

''என்ன அவசர வேலை?''

''ஏன்?''

''சும்மா கேட்டேன். ஏன் அப்படிக் கேட்கக்கூடாதா?''

''கோவில் வேலை கொஞ்சம் பாக்கி இருக்கின்றது.''

''வந்ததும் வராததுமாய் எப்படித்தான் இந்தச் சனங்களோடு பழக்கமானீங்கள்?''

''ஏன், இவர்களைப் பார்த்தால், உங்களுக்கு மனிதர்களைப் போலத் தெரியவில்லையா?''

''தெரியாமல் என்ன? லேபல் ஒட்டவேண்டிய அவசியம் இல்லை. மற்றும்படி'' - அபிநயம் காட்டிச் சிரித்தாள் பத்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது பேச்சையும், அந்தச் சிரிப்பையும் பெரிய ஹாஸ்யமாக நினைத்துச் சுந்தரமூர்த்தியும் சேர்ந்து சிரித்தார்.

பேச்சின் நடுவே பத்மா குறுக்கிட்டது, எனக்கு எரிச்சலாக இருந்தது. சிவபாதம் தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்துவிட்டு, எதுவும் பேசாது சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

சாப்பாடு முடிந்ததும், அவரவர் தத் தம் அலுவல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். பத்மாவும், கமலா ஜனியும் படுத்து உறங்கினர்கள். சிறிது நேரம் படுத்து உறங்குவதற்குக்கூட எனக்குப் பிடிக்கவில்லை. பூரணம் அக்கா, பள்ளிக்கூடத்துள் தனது இடத்திலிருந்து ஏதோ வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள்.

பொழுது போகாமையால், வெளி விறுந்தையில் வந்து நின்று அகதிச் சனங்களையும், அவர்களது நடவடிக்கைகளையும் பார்த்தபடி நின்று கொண்டிருந்தேன், தூரத்துப் பார்வைக்குத்தான் மனிதர்களின் கஷ்டங்கள் பெரிதாகத் தோன்றுகின்றன. அது குறித்து அனுதாபமும் ஏற்படுகின்றது. வெறும் அனுதாபம்; பயனற்ற அனுதாபம்.

ஒரு பெண் என்னை உற்றுப் பார்த்தாள். அவள் என்னைப் பார்ப்பதை உணர்ந்துகொண்டு, நான் எனது பார்வையை வேறு பக்கம் திருப்பினேன். பிறகு அவள் நிற்கவில்லை. ஏறக் குறைய என்னுடைய வயதுதான் அவளுக்கும் இருக்கும். கல்யாணமாகி குழந்தை குட்டிகள் பெற்றிருப்பாள். அவளது தோற்றம் அப்படித்தான் காட்டுகின்றது.

என்னுடைய இந்த உடையையும், ஓரளவு மினுக்கான இந்தக் கோலத்தையும் கண்டு அவள் என்ன நினைத்திருப்பாளோ? நினைப்பதற்குத்தான் என்ன இருக்கின்றது பெண்களிடம் சுபாவமாக உள்ள ஏக்கம் அவளுக்கும் ஏற்பட்டிருக்கும். என்னுடைய உடம்பிலிருக்கும் எதையும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது அவள் நினைத்துப் பார்ப்பதற்கு அருகதை அற்ற ஏழை. சிலவேளை இதற்கு முன்பு அவளும் இந்தக் கோலத்துடன், இந்த மினுமினுப்புடன் வாழ்ந்திருக்கலாம். எங்களைப் பார்க்கின்றபோது, அந்தப் பழைய காலத்தை நினைத்து அவள் பெருமூச்சு விடுவதற்கு நாம் தூண்டு கோலாக அமைந்துவிடுகின்றோமா? என்று தோன்றியது.

ஏழைகளுக்கு செல்வர்கள்தான் ஆபத்தானவர்கள். அவர்களது இடாம்பீகமான வாழ்க்கை ஏழைகளைப் பார்த்துப் பெருமூச்சு விடச் செய்கின்றது. அவர்களது வாழ்க்கையைப் போலத் தாமும் வாழ்வதற்கு ஆசைப்பட்டு, வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து, சிலர் இருந்த இடமே தெரியாமல் குட்டிச்சுவராகி விடுகிறார்கள்.

எம்முடைய இந்தக் கோலங்களும், மூன்று வேளைச் சாப்பாடும் மன்னிக்க முடியாத குற்றம்போலத் தோன்றியது.

பூரணம் அக்கா கூப்பிட்டார். ஏதோ ஒரு குற்ற உணர்வு, அவருடன் கூடச் சுதந்திரமாக அண்ட முடியாதபடி தடுத்தது.

''என்ன கனகம், பலமான யோசனை?''

''ஒன்றுமில்லை அக்கா.''

''ம். ஒருபோதும் கடுமையாகச் சிந்திக்க முற்படாதே. அதனால் நம்மைப் போன்றவர்களுக்கு மிஞ்சுவது வெறும் துன்பம்தான்.''

ஏன் இவருக்கு இந்த எண்ணம் தோன்ற வேண்டும் என்று யோசித்தேன். அன்று வீட்டில் அந்தக் கடிதம் வந்த நாள் தொடக்கம் நடை, பேச்சு எல்லாவற்றிலுமே குறிப்பிடத்தக்க ஒரு மாறுதல் ஏற்பட்டிருப்பதை என்னால் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அந்தக் கடிதத்தோடு ஒட்டியதாகத்தான் இந்த எண்ணங்களும் விரிவுபடுகின்றதோ என்று எண்ணினேன். அவருடைய பேச்சிலும், அதன் பாவனையிலும் விரக்தியும், ஆற்றாமையும்தான் தொனித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் மனம் நொந்துபோய் இருப்பதுபோல் எனக்குத் தெரிகின்றது அக்கா" என்றேன்.

"ஆ, அப்படியா? ஏன் நான் கதைப்பதைக்கொண்டு சொல்லுகின்றாயா? சிலருக்கு சுடலேஞானம் ஏற்படுவது போல்தான் இதுவும்"-- சொல்லிக்கொண்டே சிரித்தார்.

பின்னர் சிறிது பொறுத்து:-

"எனக்கு இப்படி இடைக்கிடை ஏற்படுவது வழக்கம் தான்" என்றார்.

அவரை, நான் நையாண்டி செய்வதாக எண்ணிச் சொன்னரோ என்று வருந்தினேன்.

"கனகம், எனக்கென்னமோ இந்த வாழ்க்கை ஒன்று மாய் விளங்கவில்லை."

"விளங்காமல் இருப்பது நல்லதுதானே அக்கா."

சிறிது நேரம்வரை இருவருமே ஒன்றும் பேசவில்லை. பென்சில் ஒன்றைப் பல்லால் கடித்தபடி என்னையே பார்த்துக்கொண்டிருந்தார்.

"சரி வா, அதிகமாக அலட்டிக்கொண்டோம். சிறிது நேரம் ஆற்றங்கரைப் பக்கம் நடந்துவிட்டு வருவோம்" என்று எழும்பினார்.

நானும் எழும்பினேன்.

"மற்றவர்கள் என்ன செய்கிறார்கள்?" என்றார்.

"அவர்கள் படுத்துத் தூங்குகிறார்கள்" என்றேன்.

"பிரயாண அலுப்பு. நன்றாகத் தூங்கட்டும். நாம் மட்டும் போய்வருவோம்" என்றபடி நடந்தார்.

ஆற்றங்கரையை அடுத்து, மேலுள்ள உயரமான தரையில் கோவில் வேலை நடந்துகொண்டிருந்தது. சின்னஞ் சிறு கொட்டில் உருவத்தில் அழகாகச் செய்ய முயன்று கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கனமான மரமொன்றைத் தோண்டிய கிடங்குள் போட்டு நிறுத்துவதற்காக தன்னந் தனியாக நின்று முயன்றுகொண்டிருந்தார் சிவபாதம். மற்றவர்கள் வெவ்வேறு இடங்களில் நின்று மரத்தை வெட்டுவதும், தோலை உரிப்பதுமாய் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

சிவபாதத்தின் உடம்பிலிருந்து தண்ணீர் ஓடுவதுபோல் வியர்வை வழிந்துகொண்டிருந்தது. மரத்தை உயர்த்துவதற்கு எடுக்கும் முயற்சியின்போது, முறுக்கேறிய அவரது தசைநார்கள் விரிவதையும் ஒடுங்குவதையும் பார்க்கப் பார்க்க ஒரு தனிக் கவர்ச்சியும், மோகமும் உண்டாக்கக் கூடியதாக இருந்தது.

நாங்கள் வந்ததையே அவர் கவனிக்கவில்லை. மரத்தை உயர்த்தும் முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தார். தன் சக்தி எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து: ஓரளவுக்கு உயர்த்திக்கொண்டு போகின்றபோது,, திடீரென அதன் அடி சறுக்கியது. மந்திரத்தால் இயக்கப்பட்டவனைப்போல் நான் ஓடிச்சென்றேன். எல்லாம் ஒரு கணப்பொழுதுதான். என்னைக் கண்ட தடுமாற்றத்திலோ என்னவோ, அவர் சக்தி முழுவதும் விரயமாகக் கை சோர்ந்துபோய், மரத்தைத் தன் இச்சைப்படி விழவிட்டார். அது விழுந்து, உருண்டு அவரது கால் படத்தைப் பதம் பார்த்தது. வலி தாங்க முடியாமல் காலைப் பிடித்தபடி அப்படியே இருந்துவிட்டார்.

நான் ஓடிச்சென்று, அவரது அடிபட்ட பாதப் பகுதியைக் கையால் பிடித்து அழுத்தினேன். எனது கையை உதறிவிட்டு அவர் காலை இழுத்துக்கொண்டார். பூரணம் அக்கா ஒன்றிலும் தொட்டுக்கொள்ளாமல் பக்கத்தில் சிறிது தூரம் தள்ளி நின்றுகொண்டிருந்தார். பூரணம் அக்காவின் தேகம் நடுங்கிக்கொண்டிருப்பதை என்னால் உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

''என்ன மாஸ்டர், நன்றாக வலிக்கின்றதா?'' அவர் என்னை நிமிர்ந்து பார்த்தார். இழுத்துக்கொண்ட காலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் நான் பிடித்து தடவிக்கொடுத்தேன். ஏதாவது முறிவு ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகத்தில், ஒவ்வொரு விரலாகப் பிடித்துப் பிடித்து அமர்த்திப் பார்த்தேன். அவர் "ஐயோ" என்று முனகினார். எனது நெஞ்சு படபடத்து நடுங்குகிறது, பூரணம் அக்காவும் சிறிது கிட்டவாக வந்தார். ஆனாலும், அவரது காலைப் பிடித்துப் பார்க்கவோ அல்லது அவருக்கு ஆறுதல் அளிக்கவோ அவர் முயலவில்லை. நெஞ்சோடு சேர்த்து கைகளைக் கட்டிப் பிடித்தபடி பேசாது பார்த்துக்கொண்டு நின்றார். அவரது கண்கள் கலங்கிப் போயிருந்தன. அவரது இந்த விசித்திரமான போக்கு எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

பக்கத்தில் நின்ற ஒரு வயோதிபர், எங்களை விலக்கிக் கொண்டு ஒவ்வொரு விரலாக இழுத்து, இழுத்துப் பார்த்தார். "ஐயோ நோகின்றது" என்று முனகியபடி அவர் காலை இழுத்துக்கொள்வதைப் பார்க்க எனக்கு வேதனையாக இருந்தது.

"ஒன்றுக்கும் பயமில்லேம்மா; கொஞ்ச நோதான் ஏற்பட்டிருக்கிறது. வேறு ஒன்றும் ஆகவில்லை. கொஞ்ச மஞ்சள் மாவும், நல்லெண்ணெயும் சுட வைச்சு ஒத்தடம் பிடித்தால் சரியாயிடும்" என்றார்.

இதைக் கேட்ட பிற்பாடுதான் மனதுக்கு சிறிது ஆறுதலாக இருந்தது.

அவரால் காலை ஊன்றி நடக்க முடியாதிருந்தது. இன்னொரு மனிதன் உதவிக்குப் பிடிக்க, "வேண்டாம்" என்று மறுத்துவிட்டுக் கஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டு நடந்து வந்தார்.

நான் அப்படி ஓடிப் போயிராவிட்டால் இது நேர்ந் திருக்காது என்று என் மனச்சாட்சி என்னைக் குத்தியது.

அவருக்குச் சிகிச்சை செய்வதில் கூடுதலான கவன மும், அக்கறையும் எனக்கிருந்தன. என்னைக் காரணமாகக் கொண்டு ஏற்பட்ட விபத்து என்ற காரணத்தினலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது இயற்கையான ஒரு பணிவிடை மனப்பான்மையோ என்னவோ? ஆனால் ஒன்று மட்டும் உண்மை. நான் மஞ்சள் மாப் பொட்டலத்தால் நோ பட்ட இடத்துக்கு ஒத்தடம் கொடுக்கின்றபோது, ஏதோ அளவிட முடியாத இன்பத்தை அனுபவிக்கின்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அவரது நேசவைப்பற்றி சட்டைசெய்யாது, எனது நடவடிக்கைகளை வெறுப்புணர்வுடன் மற்றவர்கள் பார்த்துக்கொண்டு நின்றனர். எனக்கு அவர்களைப்பற்றிய கவலையே இருக்கவில்லை. இத்தகைய அலேமோதலுக்குமுன் ஆயிரம் பேர் நின்று கைகொட்டிச் சிரித்தால்தான் என்ன? இதைப் போக்கடிக்கிற சக்திக்கு அது ஈடாகாது.

''நோ வேதனைப்படுத்துகிறதா?''

''இல்லை. அது இருந்த இடமே தெரியவில்லை.''

''ஏன்?''

அவர் பதில் சொல்லவில்லை. அதையெல்லாம் சேர்த்து ஒரு புன்சிரிப்புடன் என்னை நிமிர்ந்து பார்த்தார். அவர் அப்படிப் பார்த்தபோது நான் தலையைக் குனிந்து கொண்டேன். ஏன்?

என் தவறை உணர்ந்துகொள்ள என்னால் முடியாமலிருக்கவில்லை. ஒருபுறம் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஏதோ ஒருவித கிளுகிளுப்பான உணர்வும், இன்னொரு புறம் வேதனையாகவும் இருந்தது.

பூரணம் அக்கா பள்ளிக்கூடத்துக்குள் இருந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். என்னதான் அவ்வளவு வேலையோ? பத்மாவும், கமலாஜனியும் வெளியில் உலாவப் போயிருந்தார்கள். போகும்போது என்னையும் அழைத்தார்கள். அவர்களுடன் கூட நானும் போயிருக்கலாம். எதிலும் மனம் செல்லவில்லை.

நேரம் ஆகிக்கொண்டிருந்தது. உறக்கமும், விழிப்பும் அற்ற நிலையில் எழுந்திருக்கவே மனமின்றி அறைக்குள் படுத்திருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுமே புரியவில்லை? எனது பலம் எனக்குத் தெரிகிறது. நானும் பெண்தானே. கூலிக் குடும்பத்தில் பிறந்து விட்டதற்காக உள்ளத்து உணர்ச்சிகள்கூட அற்றுப் போய்விட வேண்டுமா?

வெளியில் இருள் பரவாத போதிலும் அறைக்குள் ஒரே இருட்டாக இருந்தது. எழுந்து விளக்கேற்ற வேண்டுமென்ற எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

சிவபாதத்தின் கால் ஓரளவுக்குக் குணமாகியிருந்தது. வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் அவர் நடந்து கொண்ட போதிலும், உள்ளூர நல்ல நோ ஏற்பட்டிருந்த தென்பது, இந்த இரண்டு மூன்று நாட்களிலும் அவரால் நன்ருக மிதித்து நடக்க முடியாததிலிருந்து தெரிந்தது.

சிறிதளவு குணமாவதற்குள்ளாகவே பழையபடி கோவில் வேலையில் ஈடுபடத் தொடங்கினர். யாரும் அவரைத் தடுப்பதாகவுமில்லை. அவரிடம் நெருங்கி ஏதாவது சொல்லிப் பார்ப்பதற்கு, எனக்கும் மனமில்லாதிருந்தது. தூர நின்று அனுதாபப்படுவதைத்தவிர என்னல் வேறு எதுவும் செய்ய முடியாதிருந்தது.

பூரணம் அக்கா என்னிடமிருந்து தூர விலகிப் போவது போல் எனக்குப்பட்டது. அவரது போக்கு எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கக்கூடியதாக இருந்தது. பள்ளிக்கூட நேரங்களிலும் சரி, பள்ளிக்கூடம் முடிந்த பிற்பாடும்சரி தனியாக இருந்து சதா ஏதாவது எழுத்து வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டே இருப்பார். ஏதோ ஒன்று அவரைப் போட்டுத் துன்புறுத்திக் கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றியது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காகவோ அல்லது அதை மறக்கடிப்பதற்காகவோ என்னவோ அவர் இப்படித் தன்னைத் தானே வருத்திக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முடிந்து, எல்லோரும் சாப்பிட்டு முடிந்த பிற்பாடு, ஏதோ சில பைல்கள் புத்தகங்களுடன் பூரணம் அக்கா பள்ளிக்கூடத்திற்குள் தனது இடத்தில் போய் அமர்ந்து கொண்டார். இனி அந்த இடத்தைவிட்டு எழுந் திருப்பது இருட்டும் போதுதான். அதுதான் அவரது வழக்கம்.

நான் வலிந்து அவரிடம் சென்றேன். அவர் என்னை நிமிர்ந்து பார்த்தார்.

''வா கனகம். என்ன விசேஷம்? வீட்டிலிருந்து உன் அம்மா எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்'' என்றார்.

கடிதத்தை என்னிடம் தந்தார். அம்மா எழுதியதைப் போல் பரமேஸ் எழுதியிருந்தாள். முழுக்க எனது கல்யாணம் சம்பந்தமாகத்தான். ஏதோ எல்லாம் வழ வழா என்று எழுதப்பட்டிருந்தது.

கடிதத்தைப் பார்த்துவிட்டு, அவரிடமே திருப்பிக் கொடுத்தேன்.

''நான் வீட்டுக்கு வந்திருந்த போதும், இதைத்தான் சொன்னாரம்மா? அவருக்கு இப்போது இதே கவலைதான். இருக்க வேண்டியதும்தான். என்னம்மா செய்கிறது, நான் எங்காவது முயற்சி செய்யக் கூடிய அளவில் இப்போது என் மனசு இல்லை.''

''அதெல்லாம் இருக்கட்டும் அக்கா, பிற்பாடு பேசிக் கொள்ளலாம். நீங்கள் ஏன் அக்கா ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்? உங்கள் போக்குத்தான் எனக்குக் கவலையை அளிக்கின்றது.''

''அதுவா? சும்மா அர்த்தமற்ற சிந்தனை. வேறு ஒன்றுமில்லை. ம்... அதிருக்கட்டும் எழும்பு. சும்மா ஆற்றுப் பக்கம் வரை போய் வருவோம். மனதுக்குச் சிறிது ஆறுதலாயிருக்கும். ஒரே புழுக்கமாயிருக்கு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் கோரமாக இருந்தது. அவர் ஏதாவது பேசு வார் என்று அடிக்கடி அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு நடந்தேன். அவர் எதுவும் பேசவில்லை.

ஆற்றைக் கடந்து தெருவழியே நடந்தோம். அங் கொன்றும் இங்கொன்றுமாகக் காடு வெட்டு வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்ததும் சரஸ் வதியின் தகப்பனது ஞாபகம் வந்தது. அந்தக் காணி யைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் நடையைத் துரிதப்படுத்தினேன். என்னைப் பார்த்துப் பூரணம் அக்காவும் நடந்து வந்தார்.

தெருவில் சரஸ்வதி நின்று கொண்டிருந்தாள்.

''என்ன சரஸ்வதி, இதிலே நிற்கிறுய்?'' என்றேன்.

''இதுதான் அக்கா எங்கள் காணி.''

''ஓ எங்கே அப்பாவைக் காணவில்லை.''

நான் கேட்டு வாய் மூடுவதற்கிடையிலேயே 'ஏனுங்க' என்று கேட்டுக் கொண்டே சரஸ்வதியின் தகப்பன் ராமையா வந்தார். அதைத் தொடர்ந்து, எங்களைப் பார்த்துவிட்டு காணிக்குள்ளிருந்து இரண்டு பெண்களும் வந்தனர். மூத்தவள் சரஸ்வதியின் தாயாக இருக்கலா மென்று தோன்றியது. மற்றவளைப் பற்றித் தெரியவில்லை. எங்கோ கண்ட முகம் போல் தெரிந்தது. இந்த அகதி முகாமில்தான் கண்டிருக்கலாமென்று எண்ணினேன்.

''இது தானுங்க என்னுடைய சம்சாரம்'' என்று மூத்தவளை ராமையா அறிமுகம் செய்தார்.

''மற்றவள் யார்?'' என்றேன்.

''தெரிந்த பெண்ணுங்க. அவள் புருஷன் கலவரத்தில் இறந்துவிட்டான். அந்தச் சேதி அறிந்து துடிக்கிறதற் கிடையிலேயே, பிரேதத்தையும் பார்க்க முடியாமல், நமது உயிரைக் கொண்டு தப்பவேண்டி ஏற்பட்டதுங்க—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் பிள்ளைத்தாச்சி வயிற்றோடு அது பட்ட கஷ்டத்திலே உயிரை விட்டிடலாமென்று துணிந்திட்டுதுங்க.''

''பிள்ளைத்தாச்சி வயிற்றோடா?''

''ஆமாங்க, மூன்றும் நாளுக்கு அப்புறம் பிள்ளையும் பிறந்து செத்துப் போச்சுதுங்க. அந்தச் சீரழிவை எல்லாம் நினைத்துப் பார்த்தால் மனுஷன் ஏன் தான் வாழவேணும் என்று தோன்றுமுங்க. ம்... அதுதான் போச்சு, அதை விட்டுத் தள்ளு.''

''அந்த உடம்போடா வேலை செய்கிறது?''

''நான் வேண்டாமென்று சொன்னேனுங்க, அது கேட்குதில்லை. நெடுக நெடுக அடிச்சி வேலை செய்த உடம்புதானுங்களே— இதெல்லாம் நமக்குப் புதிசு இல்லைங்க.''

நான் ஆச்சரியத்தோடு அந்தப் பெண்ணைப் பார்த்த படி நின்றேன். இவ்வளவுக்கும் அந்தப் பெண் வாய் திறந்து ஒன்றுமே பேசவில்லை. என்னையே உற்று உற்றுப் பார்த்தாள்.

''காணியிலே இப்போது என்ன வேலை நடக்கின்றது?'' என்றார் பூரணம் அக்கா.

''இன்னும் முழுவதும் வெட்டி முடியல்லீங்க, ஒரு கொஞ்சத்தைத் துப்பரவாக்கிவிட்டு, குடில் ஒன்று வைக்க வேணுமுங்க. அதுதான் இப்ப செய்து கொண்டிருக்கிறம்.''

காணாமல் போன மகனைப் பற்றிக் கேட்பதற்கு வாய் எடுத்தேன். பின்னர் கேட்கவில்லை. கிடைத்திருந்தால் அவர்களே சொல்லியிருப்பார்கள். அவர்களாக அதைப் பற்றி எதுவும் பேசாமலிருக்கும் போது நானாகக் கேட்பது அவர்களது வேதனையைக் கிளறிவிடலாமென்று எண்ணினேன்.

சரஸ்வதியின் தாயை அவதானித்துப் பார்த்தேன். ஒன்றுமாகக் கண்டுகொள்ள முடியாதிருந்தது. மகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சோகமோ அல்லது பசியோடு போராடித் தீரும் இந்தச் சீரழிவோ தாக்கியிருப்பது போல் தெரியவில்லை. இந்த வாழ்க்கையை எப்படியாவது ஓட்டித் தீர்க்கவேண்டிய ஒருவித அலட்சிய மனோபாவத்தைத்தான் காண முடிந்தது.

அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வந்த வழியே திரும்பி, ஆற்றோரமாக நடந்து கொண்டிருந்தோம்.

''அந்தப் பெண்ணைப் பார்த்திங்களா அக்கா?'' என்றேன்,

''ஆமாம்மா, பாவம்; எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும்?''

''அதுதான் போகின்றதென்றால், குழந்தையைப் பெற்றுச் சாகக் கொடுத்த உடம்போடு வேலை செய்கின்றதே?''

''என்னம்மா செய்வது? வீட்டிலே இருந்தால் சீவியத்தைப் போக்கவும் வழி வேண்டுமே? இந்த நிலையில் அதற்கு ஆதரவு கொடுத்து, வைத்து ஆதரிக்கின்ற அவர்களைத்தான் போற்ற வேண்டும்.''

நான் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே நடந்தேன். வெளியிலே வந்து இந்த கஷ்டங்களையும் அவல வாழ்வையும் பார்த்த பிற்பாடு, நான் எண்ணிக் கொண்ட— எனக்கிருந்த கஷ்டங்களை ஒரு கஷ்டமாக நினைக்க முடியவில்லை.

சிறிது தூரம் நடந்து சென்று, ஒரு பெரிய அழகான மணல் திட்டியில் போய் அமர்ந்தோம். சுற்றிலும் ஒரே வனாந்திரக் காடு. எவ்வளவு துணிவாகப் பயமின்றி இதில் இருக்கின்றோம் என்று எண்ணி எனக்குள் சிரித்துக் கொண்டேன். இப்படி எண்ணமிட்டுக் கொண்டிருக்கின்ற போது, எனக்குப் பின்னாலிருந்து ஏதோ சரசரப்புச் சத்தம் கேட்டுப் பயந்து போய்த் திடுக்கிட்டுப் பின்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப் பார்த்தேன். சிவபாதமும், வேறு சிலரும் கொடிக் கட்டுகளுடன் காட்டுக்குள் இருந்து வந்துகொண்டிருந்த னர்.

எங்களைக் கண்டதும், சிவபாதம் சிறிது தயங்கி நின் ருர். நான் அவரை உற்றுப் பார்த்தேன். காட்டுக்குள் நுழைந்ததால் தலையெல்லாம் குழம்பிப் போய், சருகுத் தூசிகள் படிந்து போய் அலங்கோலமாக இருந்தது. அந்த அலங்கோலத்துக்குள்ளும், ஏதோ ஒரு கவர்ச்சி இருப்பது போல் எனக்குத் தோன்றியது.

''என்ன மாஸ்டர், கால் நன்ருகக் குணமடைவதற் குள் இப்படித்தான் திரிகிறீங்களே. கொஞ்சம் பொறுத் தால்தான் என்ன?'' என்றேன்.

அவர் எதுவும் பேசாமல் வெறுமனே சிரித்துவிட்டு நடந்தார்.
சிறிது நேரம் வரை கண்கொட்டாமல் அவர் நடப் பதையே பார்த்துக் கொண்டிருந்தேன். மனத்திலுள்ள அந்த அலட்சிய பாவமும் பிடிபடாத போக்கும் அவர் நடையிலும் தெரிந்தன.

பூரணம் அக்கா ஒன்றுமே காட்டிக் கொள்ளாது அமைதியாக இருந்தார்.

எங்களுக்கு நேரே உள்ள மரக்கிளையில் புரு ஒன்று பறந்து வந்து இருந்தது. அதையே பார்த்தபடி இருந் தேன்.

''என்ன கனகம், உன் மனதுக்குப் பிடித்த யாரை யாவது நீ நினைத்திருக்கிருயா?''

''என்னக்கா?'' புருவின் சிந்தனையிலிருந்து மனத்தைத் திருப்பிக் கொண்டு பூரணம் அக்காவை நான் பார்த் தேன். கையால் மணலை அளைந்தபடி அவர் சொன்ஞர்,

''தங்கள் விருப்பத்தை மனம் விட்டுச் சொல்ல அஞ்சு கின்றபடியால் எத்தனையோ பெண்கள் வாழ்க்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்படுகின்ருர்கள். எங்கள் சமூகத்தின் கட்டுப்பாடுகளும், சட்ட திட்டங்களும், பழக்க வழக்கங்களும்தான் அந்த அச்சத்தைக் கொடுக்கின்றன. உன்னேப் பொறுத்த வரையில், அப்படி உனக்கு யாரையாவது பிடித்திருந்தால் அல்லது உன் மனத்தில் யாரையாவது நினைத்திருந்தால் பயப்படாமல் தைரியமாக என்னிடம் சொல்.''

''என்னக்கா நீங்கள் சொல்லுறீங்க, என்ஞல் எப்படி அக்கா அப்படியெல்லாம் இருக்க முடியும்? நான் எதற்காக உங்களுக்கு மறைக்க வேண்டும்? நான் அப்படி யாரையுமே நினைக்கவில்லை அக்கா.''

''நானும் அப்படித்தானம்மா நினைத்தேன். சும்மா கதைக்காகக் கேட்டுப் பார்த்தேன். அப்படியானுல் என்னம்மா நீ நினைக்கிருய்?''

''நான் என்னத்தை அக்கா நினைக்கிறது? சில வேளைகளில் நினைத்தால் கல்யாணம் செய்துகொள்ளாமலே காலத்தைக் கடத்தலாமென்று தோன்றுகின்றது.''

''அது கஷ்டம் அம்மா, அப்படி நினைக்காதே.''

''அது கஷ்டமானதுதான் என்பதை நானும் உணருகிறேன் அக்கா,ஆனுலும் என்னசெய்வது?கூலியின் மகள் கூலியின் மகள்தானே. உத்தியோகம் பார்க்கிறேன் என்ருற்போல் அந்தத் தரத்தை மாற்றிவிட முடியுமா? அதுதான் இல்லையென்ருலும், சீதனம் என்று கொடுப்பதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது? ஏதோ எப்படியோ படித்து விட்டேன், அவ்வளவுதான். வேண்டுமென்ருல் ஒன்று செய்யலாம். படிப்பு வாசனேயே அற்ற சாதாரண கூலிக்காரன் ஒருவனுக்குப்பார்த்து கல்யாணம் செய்து வாழ்க்கை நடத்தலாம்.''

''கனகம்!''

''வேறு என்னக்கா செய்கிறது? எனக்கு ஒரு மாப்பிள்ளை நானே தேடி, நானே கல்யாண ஒழுங்குகளை செய்யவேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிய இந்தநிலை, என்னைத் தவிர வேறு ஒரு பெண்ணுக்கு இருக்குமா அக்கா?''

எப்போதாவது நடக்கிற பலன் இருந்தால் நடக்கட்டும். மற்றப்படி நாமாக முயன்று செய்யக் கூடியது ஒன்றுமே இல்லை. காலத்தின் பொறுப்பிலேயே விட்டுவிட வேண்டியதுதான்.''

போகலாம் என்று எழும்பினர். நானும் எழும்பி நடந்தேன்.

திடீரென்று உணர்ச்சி வசப்பட்டுவிடுகின்றேன். அதை என்னால் கட்டுப்படுத்த முடிவதில்லை. கதைக்கின்ற போது என் கண்கள் கலங்கி, நெஞ்சு வரண்டு கொண்டு வந்தது. இதைப் பார்த்துவிட்டுத்தான் பேச்சை நிறுத்திவிட்டுப் போவதற்கு எழும்பினர் போல் எனக்குத் தோன்றியது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

பூரணம் அக்கா, அவசர அவசரமாகத் தன் சாமான்களை ஒழுங்குசெய்து அடுக்கிக்கொண்டிருந்தார்.

''என்னக்கா இது?,'

''எனக்குச் சிலாபத்துக்கு மாற்றம் அம்மா.''

''என்ன அக்கா சொல்லுகிறியள்?''

''உண்மைதான் கனகம்!!''

அவர் எதுவித பதற்றமுமின்றி, மிகவும் சர்வ சாதாரணமாகச் சொன்னார். அதைக் கேட்டதும் என்னால் ஒன்றுமே பேச முடியவில்லை.

அவர் சாமான்களை அடுக்கிக்கொண்டு நின்றபோது சிவபாதம் வந்து பூரணம் அக்காவைக் கூப்பிட்டார்.

''உங்களுக்கு மாற்றமா?'' என்றார்.

''ஆமாம்''என்றார் பூரணம் அக்கா.

''உங்களிடம் கொஞ்சம் தனியாகக் கதைக்கவேண்டியிருக்கின்றது. முடியுமா?''

''எதைப்பற்றி?''

''விளங்கவில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பள்ளிக்கூடம் சம்பந்தமாகவா அல்லது வேறு ஏதாவது விஷயமாகவா?''

சிவபாதம் சிறிது நேரம் ஏதோ யோசித்துக்கொண்டு நின்ருர். பின் ஏதோ முடிவுக்கு வந்தவர்போல் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''பிரத்தியேகமானது'' என்ருர்.

''எனக்கு இப்போது அவகாசமில்லை. என்னை மன்னித்து விடுங்கள்.''

''நீங்கள் இப்படிச் சொல்வதின் அர்த்தத்தை நான் வேறு மாதிரியாகவும் எடுத்துக்கொள்ளலாம் அல்லவா?''

''எப்படி??'

''என்னேடு கதைப்பதற்கு உங்களுக்கு இஷ்டமில்லை என்று.''

''வேண்டுமானுல் அப்படியே நினைத்துக்கொள்ளுங்கள்''— பூரணம் அக்காவின் உடம்பெல்லாம் நடுங்கி, வியர்த்துக் கொட்டியதை என்னுல் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

சிவபாதம் சிறிது நேரம்வரை எதுவும் பேசாது நின்று விட்டுப் போய்விட்டார்.

பூரணம் அக்கா எவருடனும் எதுவும் பேசாது தன் பிரயாண ஒழுங்குகளைக் கவனிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

சாப்பாட்டு நேரத்தின்போதும் அவர் யாருடனும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. சும்மா ஒப்புக்காகச் சாப்பிட்டு எழும்பினுர். சிவபாதம் சாப்பாட்டு நேரத்துக்கு விடுதியில் இல்லாமல் எங்கோ போயிருந்தார்.

எனக்கு இதெல்லாம் பெரிய குழப்பமாக இருந்தது. பூரணம் அக்காவிடம் ஏதும் கேட்கலாமென்ருல், மற்றவர்களும் இருக்கும்போது எப்படிக் கேட்பது? பத்மாவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலாஜனியும் இருக்கத்தக்கதாக, சிவபாதமும் பூரணம் அக்காவும் அப்படிக் கதைத்துக்கொண்டதே எனக்கு என்னவோ மாதிரி இருந்தது.

பூரணம் அக்காவிடம் ஏதோ விடுபடமுடியாத புதிர் ஒன்று புதைந்து கிடப்பதை என்னுல் நன்ருக உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

பூரணம் அக்கா போகின்ருர். இந்த நினைப்பை என்னுல் தாங்கிக்கொள்ள முடியாதிருந்தது. அவர் போகின்றதில் உள்ள பிரதானத்திலும் பார்க்க, அவர் வாழ்க்கையில் நிறைந்து, மறைத்துக்கொண்டிருக்கின்ற அந்த ஒன்று என்ன? என்ற கேள்வியே மேலோங்கி நின்று என்னை அரித்துக்கொண்டிருந்தது.

இவ்வளவு நெருக்கமாக அவருடன் பழகியும் என்னுல் தெரிந்துகொள்ள முடியாது போயிற்றே என்று வருந்தினேன். பூரணம் அக்கா, வீட்டுக்கு என்று போகாதிருப்பது—எல்லாம் ஒவ்வொன்ருக எனது சந்தேகத்துக்கு உருவேற்றிக்கொண்டிருந்தன.

பூரணம் அக்காவின் சாமான்களைத் தூக்கிக் காரில் வைத்தோம். கார் புறப்படுவதற்கு ஆயத்தம். பூரணம் அக்கா என்னைப் பார்த்தார். நான் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டேன். கவிந்திருந்த முகிற் கூட்டம் வெடித்துச் சிதறியது.

''கவலைப்படாதே கனகம். நான் போய்ச் சேர்ந்ததும் எல்லாம் விவரமாக எழுதுகின்றேன்'' என்ருர்.

மற்றைய ஆசிரியர்களிடம் விடைபெற்றுக் கொண்டார். சிவபாதத்தை மட்டும் காணவில்லை. கார் புறப்பட்டுவிட்டது. கார் போவதையே நெடுநேரமாகப் பார்த்துக்கொண்டு நின்றேன். கார் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்த பிற்பாடும்கூட விடுதிக்குத் திரும்பவேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கனகம்'' நான் திடுக்கிட்டுப் போய்த் திரும்பினேன். சிவபாதம்தான். என் பெயரைச் சொல்லி அழைத்தது எனக்கு ஒருமாதிரியாக இருந்தது.

''எனக்குக் கொஞ்சப் பணம் வேண்டும். தருவீங்களா?'' என்றார்,

''எவ்வளவு?''

''பத்து ரூபாய்.''

''தருகிறேன்.''

அறைக்குள் சென்று காசை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தேன். அவர் அதை என்னிடம் இருந்து பெற்று, பக்கத்தில் நின்ற ஒரு மனிதனிடம் கொடுத்தார். அவர் அதற்குப் பிரதி உபகாரமாக ஒரு கூழைக் கும்பிடு போட்டு விட்டுச் சென்றான்.

''ஏன் அந்த மனிதனுக்குக் கொடுத்தீர்கள்?''

''பாவம். கோயில் வேலையில் பழக்கமானவன். அரிசி வாங்குவதற்கு ஒன்றுமில்லாமல் இன்றுமுழுவதும் பட்டினி என்று வந்து கேட்கின்றான். அவனது நிலைமையில் இந்தப் பத்து ரூபாய் தேவாமிர்தம் கிடைத்தது மாதிரி இருக்கும்.'

''நீங்கள் ஏன் இன்னும் சாப்பிடவில்லை?''

''பசியில்லை. எப்போதும்தானே சாப்பிடுகின்றோம்.''

''ஏன் பசியில்லை?''

''எல்லாவற்றிற்கும் ஏன் என்ற கேள்வியைப் போடு வதில் அர்த்தமில்லை.,,

''பூரணம் அக்காவுடன் என்ன கதைக்க இருந்தீர்கள்?''

''ஏன்?''

அவருடைய இந்த ஏன் என்ற கேள்வியும், என்னைப் பார்த்த பார்வையும் எனக்கு என்னவோமாதிரி இருந் தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கள் உதவிக்கு மிக்க நன்றி. எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கின்றது'' என்று சொல்லிவிட்டுச் சென்ருர்.

''சாப்பிட்டுவிட்டுப் போங்களேன்.''

அநுதாபம் நிறைந்த ஒரு சிரிப்பைப் பதிலாகத் தந்து விட்டுப் போய்விட்டார். அறைக்குச் சென்று பாயை விரித்துக்கொண்டு பேசாது படுத்திருந்தேன். மனம் ஒரே யடியாகச் சோர்ந்து ஒடிந்துபோயிருந்தது. எதையும் நினைக்கவோ, எதிலும் ஈடுபடவோ முடியவில்லை. எல்லாம் வெறுமையடைந்து, பாரமற்றுச் சுவையற்று இருப்பது போன்ற ஒரு தோற்றம்.

''ஏன் கனகம், பூரணம் அக்கா சிவபாதம் மாஸ்டரிடம் அப்படி வெட்டிப் பேசினுர்?'' என்ருள் பத்மா.

அதுதான் எனக்கும் தெரியவில்லை. பூரணம் அக்காவைக் கேட்பதற்குக்கூட எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கேட்டிருந்தால்கூட அவர் சொல்லியிருக்க மாட்டார்.''

''பாவம்! சிவபாதம் மாஸ்டருக்கு முகத்தில் அடித்தாற்போலிருந்தது. அதுதான் அவர் போகின்றபோது கூடத் தலையைக் காட்டவில்லை.''

''இருக்கும்.''

கதைத்துக்கொண்டே அயர்ந்து தூங்கிவிட்டேன். எழுந்திருக்கின்றபோது மணி ஐந்துக்கு மேலாகியிருந்தது.

தேநீர் குடிக்கின்ற நேரத்துக்கும் சிவபாதத்தைக் காணவில்லை. அப்போது போனவர் இன்னும் வரவில்லையோ என்று எண்ணினேன். ஒன்றும் சாப்பிடாமல் பசியோடு ஏதாவது வேலை செய்கின்ருரோ என்று வருந்தினேன்.

எவ்வளவுதான் என் மனத்தை நான் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பியபோதிலும் நடைமுறையில் அது சாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியமானதாகத் தெரியவில்லை. எப்படியோ சிவபாதத்தின் சுக துக்கங்களில், என்னை அறியாமலே என் மனம் ஈடு பாடு கொண்டுள்ளதை என்னால் தவிர்க்க முடியாதிருந்தது. அதற்குச் சரியான அர்த்தமும் எனக்குப் புரியவில்லை.

அவர் சாப்பிடாமல் பட்டினியாய்க் கிடந்தால்தான் என்ன? அத்தோடு வேலை செய்து உடம்பை முறித்துக் கொண்டால்தான் எனக்கென்ன? நான் யாரோ, அவர் யாரோ! அவரைப்போல், என்னைப்போல், எத்தனை எத்தனையோ மனிதர்கள். இருந்தும் இந்த மனிதத்துவ ஆராய்ச்சி எனக்குப் புரியாத ஒன்றாக இருக்கின்றது. ஏதோ ஒரு பாசம், ஏதோ ஓர் அக்கறை. எனக்கிருக்கும் இந்த அக்கறை, இந்தப் பாசமெல்லாம் அவருக்கும் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன். இல்லையேல் மற்றவர்கள் எல்லாரும் இருக்கத் தக்கதாக என்னிடம் மட்டும் ஏன் பணம் கேட்கவேண்டும்?

பொழுது சாய்ந்துகொண்டிருந்தது. பொழுது சாயச் சாய என் நெஞ்சமும் அர்த்தமில்லாதவகையில் துடித்துக் கொண்டிருந்தது.

குடியேற்றத் திட்ட அதிகாரி எங்கள் விடுதிக்கு வந்தார்.

தேநீர் தயாரித்து எடுத்துக்கொண்டு சென்றேன். சுந்தரமூர்த்தியுடன், ஏதோ சிவபாதத்தைப் பற்றிக் கதைப்பது என் காதில் விழுந்தது. என் இதயம் படக் படக்கென்று அடித்துக்கொள்ள, நின்று அவதானிக்க முற்பட்டேன்.

''என்ன இருந்தாலும் மாஸ்டர், நம் கௌரவத்தை விட்டுக்கொடுக்கக்கூடாது'' என்றார் அந்த அதிகாரி.

''அது சரி, அதை அவர் உணரவேண்டும். நாம் என்ன செய்யலாம்?'' என்றார் சுந்தரமூர்த்தி.

''நீங்கள் அவருக்குப் புத்தி சொல்லிப் பாருங்கள்,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன்? என்ன நடந்தது? என்றேன், என்னால் மேலும் பொறுமையாக இருக்கமுடியாமல்.

''ஒன்றுமில்லை டீச்சர். உங்களுடைய மாஸ்டரைப் பற்றிச் சொல்லுகின்றேன். கோவில் வேலை செய்கின்ற போது, அதுதான் போகிறது பொதுத்தொண்டு, ஒரு நல்ல காரியம் என்று பேசாதிருந்தேன். இப்போது என்னடா என்றால் யாரோ ஒருத்தனுடைய காணியில் போய் ஏதோ வேலைசெய்து கொடுக்கின்றாராம். இவர் இப்படி மானம் மரியாதை என்று ஒன்றுமில்லாமல் அவர்களோடு போய், அவர்களுக்கு ஏவல் செய்கிறமாதிரி வேலை செய்தால், பிறகு அவர்கள் இவரை மதிப்பார்களா? இவர்தான் இதனால் பாதிக்கப்படுகிறவர் என்றில்லை. பிறகு எங்களையுமே மதிக்கமாட்டார்கள்'' என்றார்.

நான் எதுவும் பேசாமல் கேட்டுக்கொண்டு நின்றேன்.

''நீங்களே அவரிடம் சொல்லிப்பாருங்களேன்''என்றார் சுந்தரமூர்த்தி.

''நான் எப்படிச் சொல்வது?'' என்றார் அந்த அதிகாரி.

''சரி, உங்களால் சொல்ல முடியாவிட்டால் விடுங்கள். என்னுடைய கடமை உங்களுக்கு ஒரு சொல், சொல்ல வேண்டியது. சொல்லியாயிற்று. பிறகு ஏதாவது நடக்கின்றபோது என்னைக் குறைநினைக்கக்கூடாது.'.

''என்ன நடக்கிறது?.'

''என்னவாயினும் சரி.''

''விளங்கும்படியாகச் சொல்லுங்களேன்.''

''மாஸ்டர், இந்தச் சனங்களைப்பற்றி உங்களுக்குத் தெரியாது, சிங்கள நாட்டில் இருந்துவிட்டு வந்தவர்கள். அங்கே கூலிவேலை செய்து பிழைத்த காட்டுமிராண்டிச் சனங்கள். மனிதரோடு எப்படிப் பழகவேண்டும் என்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்குத் தெரியாது. இன்றைக்கு ஐயா என்று கூப்பிடுவார்கள். நாளைக்கு மாஸ்டர் என்று சொல்வார்கள். அதன்பின் மச்சான், டேய் வாடா, போடா, என்னடா சொன்னுய்? தெரியுமோடா என்னைப்பற்றி என்று சண்டைக்கும் தொடங்கிவிடுவார்கள். அப்போது?''

''தலைமை ஆசிரியரிடம் சொல்லுங்களேன்.''

''அவர் இன்று வந்தவர். அவருக்குச் சொல்வது சரியல்ல. இனி எனக்கேன் இவ்வளவு அக்கறை? பழகியவர்கள் என்ற முறையில்தான் உங்களுக்குச் சொன்னேன்.''

அவர் போய்விட்டார். அவர் சொன்னதிலும் சில சில உண்மைகள் இருப்பதுபோல எனக்குப் பட்டது.

சிவபாதம் யாரோ ஒருவருடைய காணியில் போய் வேலை செய்கிறுர் என்று நினைத்தபோதே, எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அது அவருடைய மனப்போக்கு, அவருடைய இஷ்டம்தான். ஆனுலும்கூட, இப்படி இவர் போயிருக்க வேண்டாம் என்றே எனக்குப் பட்டது. அவரது பெருந்தன்மையையும் பரந்த நோக்கையும் இந்த மனிதர்கள் உள்ளபடி உணர்வார்கள் என்பதுதான் என்ன நிச்சயம்? அந்த அதிகாரி சொன்னமாதிரி அவர்களால் நாளைக்கு இவருக்கு ஏதாவது நடந்துவிட்டால்?

தலைமை ஆசிரியரும், சுந்தரமூர்த்தியும் வெளியில் எங்கோ சென்றுர்கள். கமலாஜனி அறைக்குள் இருந்து பாடிக்கொண்டிருந்தாள்.

பாரதியின் ''தாயின் மணிக்கொடி பாரீர்'' என்ற பாடலை மிகுந்த அபிநயத்துடன் பாடிக்கொண்டிருந்தாள்.

அவள் பாடிக்கொண்டு இருக்கின்றபோதே சிவபாதமும் வந்தார். அவர் வந்தது தெரிந்து, கமலாஜனி பாடலை நிறுத்திக்கொண்டாள்.

''தேநீர் கொண்டு வரட்டுமா?'' என்றேன்.
''வேண்டாம், சாப்பிடப்போகின்றேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி வாருங்கள்; போட்டுத் தருகின்றேன்.''

நான் அவரைக் கூட்டிச்சென்று சாப்பாட்டைப் போட்டுக் கொடுத்தேன். சாப்பாட்டைப் பரிமாறிய பிற் பாடுதான், பத்மாவும், கமலாஜனியும் இருக்கத்தக்கதாக நான் ஏன் முந்திக் கொள்கிறேன் என்று தோன்றியது. 'ஏன்?' என்ற கேள்வியைப் போட்டு என்பாட்டுக்கு யோசித்துப் பார்த்தேன். ஒன்றுமே விளங்கிக்கொள்ள முடியாதபடி சிக்கலாக இருந்தது.

''இன்று எங்கே போயிருந்தீர்கள்?'' ஒன்றுமே அவ ரிடம் கேட்கக்கூடாதென்று எண்ணிக்கொண்டபோதிலும் தன்பாட்டிற்கு என்னை அறியாமல் இயற்கையாகவே வெளிவந்தது.

''எதற்காகக் கேட்கிறீர்கள்?'' அவர் என்னை நிமிர்ந்து பார்த்தார். அந்தப் பார்வையில் சிறிதளவுகூடக் கடுமை இருக்கவில்லை. இருந்தும், என்றால் அந்தப் பார்வைக்கு ஈடுகொடுக்க முடியாமல் தலையைக் குனிந்துகொண்டேன். என் உடலெல்லாம் நடுங்கி வியர்த்துக் கொட்டியது. இதை அவர் எப்படி எடுத்துக்கொண்டாரோ? பிறகு அதைப் பற்றி அவரும் எதுவும் கேட்கவில்லை. நானும் சொல்ல வில்லை.

அவர் எழும்பிக் கையைக் கழுவிக்கொண்டு போய் விட்டார். தொடர்ந்து மற்றவர்களும் சாப்பிட ஆயத்தம் செய்தார்கள்.

எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிட்டுக் கொண் டிருந்தோம். தலைமையாசிரியர் சிறிது கூச்சப்பட்டுக் கொண்டிருந்தார். புது இடம், புதிய மனிதர்கள், புதிய அனுபவமாக இருக்கலாம். போகப் போக எல்லாம் சரி யாய்ப் போய்விடும்,

''நீங்கள் என்ன டீச்சர் நினைக்கிறீர்கள்?'' என்று என்னைப் பார்த்துச் சுந்தரமூர்த்தி கேட்டார். மற்றவர் களும் அவர் முகத்தைப் பார்த்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எதைப்பற்றி?''

''சிவபாதத்தைப் பற்றி அந்த அதிகாரி சொல்லியதைக் கேட்கின்றேன்.''

''அது அவருடைய சொந்த விஷயம்'' என்றேன். சுந்தரமூர்த்தி என்னை நிமிர்ந்து பார்த்தார்.

''மற்றவர்களையும் பாதிப்பதாயிருந்தால்?''

''அதற்கு அவர் ஜவாப்தாரியாக முடியுமா?''

''ஏன்?''

''அவர் தனக்குச் சரியென்று தோன்றியதைச் செய்கிறார். அவரது வழி அதுவாயிருக்கலாம்.''

பத்மா, சுந்தரமூர்த்திக்கு கண்ணால் ஜாடை காட்டியது எனக்குத் தெரிந்தது.

சிவபாதத்தைப் பற்றி யாரும் குறைசொல்லவோ அல்லது அவர்மேல் குற்றஞ்சாட்டவோ முயன்றால் என்னால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாதுபோல் தோன்றியது. காரணம் புரியாத ஒருவித பற்றுதல். அது ஏன் என்றே எனக்குத் தெரியவில்லை.

நான் சுந்தரமூர்த்திக்குச் சொன்ன பதிலை, ஒவ்வொரு சொல்லாகப் பிரித்துப் பிரித்துத் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தேன். இதைவிட வேறு எப்படியும் நான் சொல்லியிருக்க முடியாது.

கமலாஜனி பாரதி பாடலை வைத்துப் பாடிக்கொண்டிருந்தாள்.

பத்மா பேசாது படுத்திருந்தாள். இன்னும் சிறிது நேரத்தில் அவள் தூங்கிவிடுவாள். அதுதான் அவளது வழக்கம். கதைத்துக்கொண்டிருப்பாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அதைத் தொடர்ந்து குறட்டை ஒலியும் கேட்கும். ஒரு நூதனமான நித்திரைதான் அவளுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஏதாவது படிக்கலாமென்று தேடிப் பார்த்தேன். மனதுக்குப் பிடித்ததாக ஒன்றும் அகப்படவில்லை. தலைமை ஆசிரியர் தினசரி ஒன்று வைத்திருந்தது ஞாபகத்துக்கு வந்தது. அதை வாங்கிச் சிறிது நேரம் படிக்கலாமென்று வெளியே வந்தேன். சிவபாதம் மட்டும்தான் வெளியில் இருந்தார். ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் வைத்திருந்தபடி யோசனையில் ஆழ்ந்துபோயிருந்தார்.

''தலைமை ஆசிரியர் இருக்கிறாரா?'' என்றேன்.

''காணவில்லை. எங்கோ போய்விட்டார்கள். ஏன்?''

''பத்திரிகை வேண்டுவதற்குக் கேட்டேன்.''

''அவர் தான் வரவேண்டும்.''

''நீங்கள் பூரணம் அக்காவிடம் ஏன் அப்படிக் கேட்டீர்கள் என்று எனக்குச் சொல்லமாட்டீர்களா?''

''எதற்காக நீங்கள் இவ்வளவுதூரம் அக்கறைப்படுகின்றீர்கள்?''

''இல்லை, சும்மா கேட்டேன். உங்களிடம் ஏதாவது கேட்பதற்கே எனக்குப் பயமாக இருக்கின்றது.''

''ஏன் அப்படி?''

''இந்தக் கேள்விக்கு நீங்கள் உங்களைப்பற்றியே சிறிது யோசித்துப் பாருங்கள். உங்களிடம் அப்படி என்ன சக்தி இருக்கிறதென்று.''

சிறிது பொறுத்து, ''நான் அப்படித்தான் இருக்க முடியும்'' என்றார். இதனை அவர் சொல்லுகின்றபோது அவர் குரல் வளை ஆழம் காண முடியாத வேதனைக்குள் சிக்கிக் கம்மலாக இருந்தது.

''நான் கேட்பது தவறு என்றால் என்னை மன்னித்து விடுங்கள். வேறுபாடாக நான் எதையும் நினைக்கவில்லை.''

''ஏன், ஏதாவது சொன்னாரா உங்களுக்கு?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை. அவர் எதுவும் சொல்லவில்லை. சொல்லவும் மாட்டார்.''

''உங்களுக்கு அவர் நெடுநாள் பழக்கமா?''

''இல்லை. கொஞ்சக் காலம்தான். ஓரளவு நெருக்கமான பழக்கம் இருக்கும். மூன்று நாலு வருடங்களுக்குக் கிட்டவாக எங்கள் ஊரில்தான் படிப்பித்தவர்.''

சிறிது நேரம் ஏதோ யோசித்துக்கொண்டிருந்தார். பிறகு எதுவும் பேசாமல் கையில் வைத்திருந்த புத்தகத்தைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

நானும் எதுவும் பேசாமல் அவரையே பார்த்தபடி நின்றுகொண்டிருந்தேன். நான் நிற்கிறேனே என்ற எண்ணம் அவருக்கு இல்லைப்போலிருந்தது.

எடுத்தாற்போல், ''உங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை'' என்றேன். அவர் திடுக்கிட்டாற்போல் நிமிர்ந்து பார்த்தார்.

''என்ன சொன்னீங்கள்? நான் கவனிக்கவில்லை'' என்றார்.

''உங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றேன்.''

''ஏன் உங்களுக்கு அந்தச் சிரமம்?''

இப்படி அவர் சொன்னது எனக்கு கன்னத்தில் அறைந்தாற்போலிருந்தது. நெஞ்சம் வரண்டுபோய், உள்ளம் பொருமிக்கொண்டிருந்தது.

எதுவும் பேசாது அந்த இடத்தைவிட்டு அறைக்குள் சென்றேன். கமலாஜனி அமைதியாக இருந்து படித்துக் கொண்டிருந்தாள். தொண்டைக்குழி ஈரப் பசுமையே அற்று ஒரேயடியாக வரண்டுபோயிருந்தது.

ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் யாரோ, அவர் யாரோ. என் உணர்ச்சிகள், அபிலாஷைகள் யாவற்றுக்கும் அவர் ஈடுகொடுக்க வேண்டுமென்பது என்ன கட்டாயம்? என்னை நான் சமாதானப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

பத்மா, மெல்லிதாகக் குறட்டை விட்டபடி தூக்கத்தில் ஆழ்ந்துபோயிருந்தாள். அவளது அந்தக் குறட்டை ஒலியை இரசித்துச் சிரித்தாள் கமலாஜனி. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

பூரணம் அக்கா போய் ஒரு கிழமைக்குப் பிற்பாடு கடிதம் எழுதியிருந்தார்.

அன்பார்ந்த கனகம்,

இங்கு வந்து சேர்ந்தவுடனேயே உனக்குக் கடிதம் எழுதவேண்டுமென்றிருந்தேன், முடியவில்லை. நான் இவ்விடமிருந்து இங்கு வந்தது பற்றி உவ்விடம் எப்படி நினைக்கிறார்களோ என்பது எனக்குத் தெரியாது. எப்படியாவது நினைத்துக் கொள்ளட்டும். ஆனால் உவ்விடமிருந்து நான் இங்கு வருவதற்கு நானேதான் காரணம். என்னை உவ்விடமிருந்து மாற்றிவிடும்படி நானே மனேஜரைக் கேட்டிருந்தேன்.

உன்னை யாராவது கேட்டால், தருமபுரம் அவருக்குப் பிடிக்கவில்லையாம் என்று சொல்லிவிடு, முன்கூட்டியே உனக்கு நான் சொல்லாமைக்கு என்னை மன்னித்துக் கொள். நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாயோ எனக்குத் தெரியாது. காலப் போக்கு உனக்குக் காட்டிக் கொடுக்கலாம்.

உன் விஷயத்தில் அம்மாவைக் கலங்கவிடாது புத்தியாய் நடந்துகொள். என்னால் உனக்கு உதவி செய்யக் கூடியதாயிருக்குமாயின் கட்டாயம் செய்வேன். நலம்.

அன்புள்ள
பூரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பத் திரும்ப பல தடவை படித்துப் பார்த்தேன். ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை. காலப் போக்கு என்னத்தைக் காட்டப் போகின்றது?...

சிவபாதத்திடமும் கடிதத்தைக் காட்ட வேண்டும் போல் தோன்றியது. இருந்தும் அந்த எண்ணத்தைப் பல வந்தமாகக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

சிவபாதம் எவ்வளவுதான் என் மனம் நோகும்படியாக நடந்து கொண்ட போதிலும், அவரிடமிருந்து விலகிக் கொள்ள முடியாதபடி ஏதோ ஒருவித பிணைப்பு இருந்து கொண்டிருப்பதை நான் உணராமல் இல்லை. அவரும் என்னிடம் மாத்திரம்தான் ஏதாவது கதைத்துக் கொள்கிறார். மற்றவர்களுடன் அதிகமாகக் கதைப்பதேயில்லை. இந்தப் பிணைப்பைத் துண்டித்துக் கொள்ளவோ, அதன் மூலம் என்னை நான் சோதித்துக் கொள்ளவோ என் மனம் விரும்பவில்லை. அதற்கு வேண்டிய தைரியமும் எனக்கில்லை.

சுந்தரமூர்த்தியும் பத்மாவும் அடிக்கடி சேர்ந்து சேர்ந்து கதைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் இருவரும் கூடிக் கதைக்கின்றபோது, என்னைப் பற்றித்தான் ஏதோ கதைக்கின்றார்கள் போல் எனக்குத் தோன்றும். என்னையும் சிவபாதத்தையும் குறித்து அவர்களுக்குச் சந்தேகம் இருப்பதை நான் உணராமலில்லை.

இரவுச் சாப்பாட்டுக்குப்பின் சிவபாதம் வந்து என்னைக் கூப்பிட்டார். பத்மாவும், கமலாஜனியும் ஒருவருக்கொருவர் சாடைகாட்டிப் பேசிக் கொண்டனர். எனக்கு, அவர் என்னை எதற்காகக் கூப்பிடுகிறார் என்பது பற்றிய பிரச்சினையே இல்லை. எதற்காயினும் சரி, அவர் என்னைக் கூப்பிட்டது ஒரு வித இன்ப உணர்வை ஊட்டியது.

''இந்தக் குழந்தைகளுக்கு உங்களால் ஏதாவது உதவி செய்யக் கூடியதாய் இருக்குமா?'' என்றார்.

''என்ன உதவி?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர்களுக்குக் குறைந்த விலையில், எளிமையான முறையில் ஏதாவது உடுப்புகள் எடுத்துக் கொடுக்கலாம் என்று எண்ணுகின்றேன்.''

''அதற்கு எனை என்ன செய்யச் சொல்கின்றீர்கள்?''

''பணம் வேண்டும்.''

''மற்றவர்களிடமும் கேட்டீர்களா?''

''இனித்தான் கேட்க வேண்டும். அவர்களிடம் எனக்கு நம்பிக்கையில்லை.''

''என்னிடமிருந்து எவ்வளவு எதிர்பார்க்கிறீர்கள்?''

''ஒரு மாதச் சம்பளம்.''

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். அந்த அளவுக்கு என்னுடைய நிலைமை இல்லை! என்னுடைய இந்தச் சம்பளத்தில், யார் உதவியுமற்ற மூன்று பெண்கள் சீவிக்க வேண்டியிருக்கிறது. ஆண் உதவியே இல்லை. உறவினர் என்றுகூட யாருமில்லை, என் வாழ்வு, இங்கே வந்திருந்த என் தங்கையின் வாழ்வு எல்லாம் இந்தச் சம்பளத்தில் தான் தங்கியிருக்கின்றது. நீங்கள் ஏதோ கேட்டதற்காக இதைச் சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள். ஒரு மாதச் சம்பளத்தில் கால்பங்கு வேண்டுமானல் தருகின்றேன். மற்றவர்களிடமும் கதைத்துப் பாருங்கள்.''

''உங்களுக்குக் கஷ்டமாயிருந்தால் வேண்டாம். உங்கள் நிலைமை எனக்குத் தெரிந்திருந்தால், நான் கேட்டிருக்கவே மாட்டேன். கேட்டதற்காக நான் வருந்துகின்றேன்.''

நான் பேசாதிருந்தேன்.

படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தேன். வெகு நேரமாகியும் நித்திரை வருவதாயில்லை. என்னைப் பற்றி, ஏன் நான் அவருக்குச் சொன்னேன் என்றிருந்தது.

கமலாஜனியும் படிப்பதை நிறுத்தித் தூங்கிவிட்டாள். என்னுல் மட்டும் தூங்கிக் கொள்ள முடியாதிருந்

தது. விழித்தபடி இருளையே பார்த்துக் கொண்டு படுத்திருந்தேன். மிகமிகச் சமீபத்தில் நரிகள் சேர்ந்து ஊளையிடுகின்ற சப்தம் கேட்பதற்குப் பயங்கரமாயிருந்தது.

சிந்தனைகள் மாறி மாறி அலை புரண்டு கொண்டிருந்தன. சிவபாதத்தைச் சுற்றிப் படர்ந்து கொண்டிருந்த அந்த இனிமையான எண்ணச் சுழல்களிலிருந்து என்னை நான் மீட்டுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. அப்படி நான் விரும்பினுல்கூட அது என்னுல் முடியாத ஒன்று. இதுகால வரையும் என்னை ஒத்த ஆண்களுடன் பழகும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்படாமையாலோ என்னவோ, தீவிரமான மன உணர்வுக்கும் பற்றுதலுக்கும் ஆளாகியிருந்தேன்.

அன்று, ஆற்றங் கரையில் பூரணம் அக்கா கேட்டபோது, ''எனக்கு சிவபாதத்தில் விருப்பமிருக்கின்றது'' என்று சொல்லியிருக்கலாமே என்று எண்ணிப்பார்த்தேன். இந்த எண்ணத்துடன் கூடவே சிரிப்பும் வந்தது. என் மனப்போக்கையும், சிந்தனைகளையும் பற்றி எண்ணிப்பார்த்தேன். இப்படியே ஒவ்வொரு சிந்தனையும் தொடர்ந்து தொடர்ந்து இன்னென்ருக மாறி, மாறி நித்திரைகொள்ளவே முடியாதிருந்தது.

பழைய நினைவுகள்; அண்ணன் கோவணக் கட்டோடு குளிர் தாங்க முடியாது கொடுகிக் கொடுகி வரும் அந்தத் தோற்றம், சரஸ்வதி காணுமற் போன அவளுடைய அந்த அண்ணன்— எல்லாமே சலனப் படக் காட்சியைப் போல், மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தது. ஏதோ புரிந்துகொள்ள முடியாத ஏக்கத்துடன் அகல அகல விரித்துப் பரிதாபமாகத் தோற்றுகின்ற அண்ணனின் அந்தத் தோற்றம். ஐயோ! உரக்கக் கத்தி, நெஞ்சு அடைத்து வரண்டுபோகும் வரைக்கும் அழுது தீர்க்கவேண்டும் போல் இருந்தது.

என்னைத் தவிர மற்றைய எல்லோரும் தங்களை மறந்த நிலையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரிகளின் அந்த அவலக் குரல் திரும்பவும் தொடங்கியது. ஒன்றைத் தொடர்ந்து ஒன்று மனிதர்களுக்கு அருவருப்பையும் அவலத்தையும் கொடுக்கின்ற இந்தக் குரலையும் இப்பிராணிகளிடம் படைத்தவன் உண்டாக்கி அதை மனிதர்கள் கேட்டு அனுபவிக்கவேண்டிய நியதியையும் உண்டாக்கிவிட்டானே.

★

காலையில் எழுந்திருக்கவே முடியவில்லை. உடம்பெல்லாம் அடித்துப்போட்ட மாதிரி அலுப்பாக இருந்தது. ஆற்றில் போய் அமுங்கி அமுங்கித் தோய்ந்த போது மனதுக்கும், உடலுக்கும் இதமாக இருந்தது. நான் குளித்துவிட்டு ஈரப் புடவையுடன் கரையேறிய போது, குச்சியால் பல்லை விளக்கியபடி சிவபாதம் நின்று கொண்டிருந்தார். கூடுதலான நேரம் குளித்துக் கொண்டு நின்றமையால் பத்மாவும் கமலாஜனியும் முன்னதாகவே கரைக்கு வந்து, உடை மாற்றிக் கொண்டு கோவிலுக்கு முன்னால் நின்றனர்.

தண்ணீருக்குள்ளிருந்து வெளியேறியவுடன், அதிகாலைச் சூரிய குளிருடன் உடம்பு கொடுகத் தொடங்கியது.

''இப்படியே உங்களைப் பார்க்கின்ற போது, நீங்கள் மிக மிக அழகாக இருக்கின்றீர்கள்'' என்று சிவபாதம் என்னைப் பார்த்துச் சொன்ன போது நான் துணுக்குற்றுப் போனேன். இவ்வளவு துணிச்சலாக, இப்படிச் சொல்லுகின்றாரே என்று யோசித்தேன். அது ஒரு சொற்ப நேரம் தான். வெட்கம் என்னைப் பிடுங்கி எடுத்தது. விவரிக்க முடியாதபடி உணர்வு அலைகள் பொங்கிக் கொந்தளிக்க குனிந்த தலை நிமிராமல் அவரைக் கடந்து நடந்தேன்.

வெகு நேரம் வரை அவர் சொன்ன அந்தச் சொற்கள் என்னுள் சுழன்று சுழன்று நர்த்தனம் செய்துகொண்டிருந்தன. அதை நினைக்கும் போதெல்லாம் கூடவே ஒரு வித கூச்சமும் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக் கூடத்தில் வகுப்பு நேரங்களில் அவரைப் பார்க்கின்ற போதெல்லாம் நேருக்கு நேர் பார்க்கின்ற தைரியம் இழந்து தலை குனிந்துகொள்வேன்.

அவரது நடைமுறைகளில் மட்டும் எதுவித மாற்றமு மில்லை. எல்லாம் வழக்கம் போல்தான்.

வகுப்பில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத் துக் கொண்டிருக்கின்ற போது, எனது பலவீனத்தின் உச் சத் தன்மையை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பாடம் சொல்லிக் கொடுப்பதிலிருந்து, என் கவனமும் புலனும் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தன.

''அக்கா, உங்களைத் தலைமை ஆசிரியர் கூப்பிடுகிறார்'' என்று பையன் வந்து சொன்னான். எதற்காகக் கூப்பிடு கிறார் என்று எண்ணிக் கொண்டே அவரிடம் சென்றேன்.

நான் போனதும் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியை சுட்டிக்காட்டி, ''இருங்கள்'' என்றார்.

''வேண்டாம், பரவாயில்லை. நான் நிற்கிறேன். சொல்லுங்கள்'' என்றேன்.

அவர் சிறிது நேரம் வரை ஏதோ யோசித்துக் கொண் டிருந்தார். பிறகு—

''உங்களுக்கு எப்படிச் சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை'' என்றார்.

ஒருவித அர்த்தமுமின்றி, என் உடம்பு நடுங்கியது. இனம் புரிந்துகொள்ள முடியாத ஒரு பய உணர்வுடன் அவரை நிமிர்ந்து பார்த்தேன்.

''நான், நீங்கள், ஏன் எல்லோரும் இங்கு வந்ததன் நோக்கம் ஒன்றுதான். சம்பளம். அதற்காகத்தான் இவ் வளவு கஷ்டமெல்லாம். எம்மைக் குறித்து மக்களிடம் நல்லபிப்பிராயம் ஏற்படும்படியாகவும் நடந்து கொள்ள வேண்டும். நாம் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையே கடுமை யான சூழ்நிலைக்கு உட்பட்டதாக இருக்கின்றது. ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணமும், நம் உணர்வுகளோடு போராடிக் கொண்டு, ஜாக்கிரதையாக நம்மைப் பாதுகாத்து நடக்க வேண்டியது, நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும். அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?''

''நான் என்னத்தை நினைப்பது? நீங்கள் சொல்வதை நானும் ஏற்றுக் கொள்ளுகின்றேன். நீங்கள் இதை இப்போது எதற்காகச் சொல்லுகின்றீர்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.''

''நான் சொல்வதையிட்டு நீங்கள் சிறிதளவேனும் வருத்தப்படக் கூடாது. ஒரு தங்கைக்கு ஒரு அண்ணன் சொல்லுகின்ற புத்திமதி போல் எடுத்துக் கொள்ளுங்கள். இங்குள்ள ஆண் ஆசிரியர்களுடன் அதிகமாக நெருக்கம் வைத்துக் கொள்ளாதீர்கள். ஆண்கள் வண்டு போன்றவர்கள். மலரைப் பற்றிய கவலை ஒரு வண்டுக்கு இருக்க முடியாது.''

''விளங்குகின்றது.''

''குறிப்பாக சிவபாதமும் நீங்களும் மிகமிக நெருக்கமாகப் பழகுவது போல் எனக்குப் படுகின்றது. கூடிய வரையில் அதைத் தவிர்த்துக் கொள்வதுதான் நல்லது. நான் உங்களைத் தவறுதலாக மதிப்பிட்டுச் சொல்லுகின்றேன் என்று தயவு செய்து எண்ணிக் கொள்ளாதீர்கள்- நான் மணமானவன். குழந்தை குட்டிகள் உள்ளவன். ஒரு யுவனும் யுவதியும் இந்தக் காட்டுப் பிரதேசத்தில் இருந்து கொண்டு, நெருக்கமாகப் பழகிக்கொள்வதால் ஏற்படக் கூடிய ஆபத்தை நான் நன்கு உணர்வேன்.''

நான் எதுவும் பேசாமல் நின்றேன்.

''இதற்காகத்தான் கூப்பிட்டேன். போய் வாருங்கள்'' என்றார்.

நான் எனது வகுப்பில் வந்திருந்தேன். புத்திமதிகள் என்ற பேரில் அவர் சொன்ன அந்த ஒவ்வொரு வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் எண்ணிப் பார்த்தேன். எனக்குக் குறிவைத்து எய்த அம்புபோல் என்னுள் பட்டுத் தாங்கிக் கொள்ள முடியாதிருந்தது.

சரஸ்வதி வந்து, ''அக்கா'' என்ருள். நான் எதுவும் பேச முடியாத நிலையில் இருந்தமையால் திரும்பவும் கூப்பிட்டாள்.

''என்ன வேணும்?'' என்று சற்று கடுமையாகவே கேட்டேன். இதை அவள் சிறிதளவேனும் எதிர்பார்த்திருக்கமாட்டாள். அவள் பயந்து நடுங்கிப் போய் ''ஒன்றுமில்லை அக்கா'' என்று சொல்லிவிட்டுத் தன் இருக்கைக்குச் சென்ருள்.

'சரஸ்வதி, இங்கே வாம்மா. என்ன வேணும்?'' — நான் அவளைக் கூப்பிட்டு முதுகில் தட்டித் தடவிக் கொடுத்துக் கொண்டு கேட்டேன்.

''எனக்கொரு சந்தேகம் அக்கா.''

''என்னம்மா?''

''ஏன் அக்கா நாங்கள் முன்னர் இருந்த இடத்திலிருந்து, எங்களை அடித்துத் துரத்திஞர்கள்?''

''அவர்களுக்கு எங்களிலே கோபமம்மா?''

''நாங்கள் அங்கே இருக்கின்றபோது ஒருத்தராவது எங்களோடு கோபமாக நடக்கவில்லையே அக்கா,''

''அவர்கள் அப்படித்தான் அம்மா. நேருக்கு நேராகக் கோபம் மாதிரிக் காட்டிக் கொள்ள மாட்டார்கள்'' என்று சொல்லிக் கொண்டே அவள் கேட்கும் கேள்விக்கு மட்டம் தட்ட எண்ணினேன். அவளது கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிற அளவுக்குப் பொறுமையோ, அவசரமோ எனக்கில்லை.

சரஸ்வதி போய் தன் இருக்கையில் அமர்ந்தாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபாதத்தைத் தேடிக்கொண்டு, தந்திச் சேவகன் வந்தான். சிவபாதம் அவனிடமிருந்து தந்தியை வேண்டிப் பரபரப்புடன் படித்தார். என்ன விஷயம் என்று அறிந்து கொள்வதற்கு எனது மனத்தில் ஆவல் இருந்த போதிலும், வலிந்து கட்டுப்படுத்திக் கொண்டு பேசாதிருந்தேன்.

தந்தியைப் படித்து முடிந்ததும், அது அவரது கைக்குள் கிடந்து தன்னிச்சையாகவே கசங்கிக் கொண்டிருந்தது. எதையோ வெறித்துப் பார்த்தபடி சிறிது நேரம் வரை நின்று கொண்டிருந்தார். இதற்கு மேலும் எனது உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்துகின்ற தைரியமோ, விருப்பமோ எனக்கு இருக்கவில்லை.

''என்ன தந்தி?'' என்றேன். அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார். அந்த ஒரு கணத்தில், அவருள் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பு...? மனத்தை நன்ருகத் திடப் படுத்திக் கொண்டு, தகப்பனுர் இறந்துவிட்டார், இறந்து விட்டார் என்ருர். நான் துணுக்குற்றுப் போய் அவரைப் பார்த்தேன். தொடர்ந்து, ''அவர் இறந்ததைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அவர் இறக்கவேண்டியவர் தான். ஆனல் அவரது கடைசிக் காலத்தில் அவருக்கு இருந்த ஆவல் நிறைவேருமலே போய்விட்டது. அதுதான் எனக்குக் கவலை'' என்ருர்.

''என்ன ஆவல்?'' என்றேன்.

அவர் எதுவும் பேசாமல் நின்ருர். நான் கேட்ட கேள்வியையே மனத்துள் கொண்டதாகத் தெரியவில்லை.

''காசு இருக்கின்றதா?'' என்றேன். அவரிடம் காசு இருக்க முடியாதென்பது எனக்குத் தெரியும்.

''இல்லை.''

என்னிடம் காசு இருந்தது. முழுவதையும் எண்ணிப் பாராமலே எடுத்து அவரிடம் கொடுத்தேன். அவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பார்க்கவில்லை. அப்படியே வேண்டி சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டார். ஐம்பது ரூபாய்க்கு மேல் இருக்குமென்று தோன்றியது. அவருடைய பிரயாணத்திற்கு அது போதும்.

அவர் போய்விட்டார்.

அவரது தகப்பனாரின் அந்தக் கடைசி ஆவல் என்ன வாயிருக்குமென்று எண்ணிப் பார்த்தேன். அந்த ஆவல் நிறைவேருதது குறித்துச் சிவபாதம் வேதனைப்பட்டமை யால், அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருக எனக் குப் பட்டது.

அவர் போய்விட்ட பிற்பாடு சரஸ்வதி திரும்பவும் வந்தாள்.

''என்ன சரஸ்வதி, கணக்குச் செய்துவிட்டாயா?''

''இல்லை அக்கா... வந்து''

''என்ன வந்து... போ, போய்க் கணக்கைச் செய்.''

அவள் பயந்துகொண்டே அவ்விடத்தைவிட்டு அகன்ருள்.

மூன்று தினங்கள் கழிந்தன. ★

சாப்பாடு முடிந்ததும் அவரவர் தத்தம் கடமைகளைச் செய்துகொண்டிருந்தனர். பத்மா வழமையான தன் தொழிலில் ஈடுபட்டாள். கமலாஜனி பாடப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு, பத்மாவின் தூக்கத்தைக் கெடுக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் மௌனமாக உருப் போட்டுக்கொண்டிருந்தாள்.

உறக்கமும், உறக்கமற்றதுமான ஒரு நிலையில் படுத் திருந்தேன். முன் அறையில் தலைமை ஆசிரியருடன் யாரோ வேற்று மனிதர் கதைத்துக்கொண்டிருப்பது, எனது மயக்க நிலையில் பட்டும் படாததுமாய் ஒலித்துக்கொண்டிருந் தது.

கமலாஜனி என்னைத் தட்டி எழுப்பினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன கமலா?" என்றேன்.

"யாரோ ஒருத்தனுடைய பிள்ளைக்குச் சுகமில்லை யாம். அந்தப் பிள்ளை நினைவின்றி, 'கனகம் அக்கா! கனகம் அக்கா!' என்று பிதற்றிக்கொண்டு கிடக்குதாம். அதுதான் அவன் உன்னைக் கூட்டிக்கொண்டுபோக என்று வந்தானும்."

உடுத்திருந்த சேலையைக்கூடச் சரிசெய்துகொள்ளா மல் முன் விறாந்தைக்கு ஓடிச் சென்று பார்த்தேன். சரஸ் வதியின் தகப்பன் இராமையா நின்றுகொண்டிருந்தான்.

மூன்று நாட்களாக சரஸ்வதி பள்ளிக்கூடத்துக்கு வராததன் காரணம் புரிந்தது.

சரஸ்வதிக்குச் சுகமில்லை.

சரஸ்வதி நினைவின்றிப் பிதற்றுகிறாள்.

என் தலை சுற்றியது. இராமையா என்னைப் பார்த்த படியே லாந்தர் விளக்குடன் நின்றுகொண்டிருந்தான். அவனிடம் எதுவுமே கேட்பதற்கு எனக்குத் தோன்றவில்லை.

"குழந்தை படும் அவஸ்தையைப் பார்த்துச் சகிக்க முடியல்லேங்க. தாய் ஒரே கண்ணீரும், கம்பலையுமாக அழுதுகொண்டிருக்கின்றாள். நினைவு வருகின்றபோதெல் லாம் அது உங்கள் பெயரையே சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டிருக்குதுங்க."

"நான் போய்ப் பார்த்துவருகின்றேன் மாஸ்டர்."

"இந்த இரவு நேரத்தில், எப்படிப் போய்வரப் போகின் றீர்கள்? பார்க்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள்?"

"அவர்கள் எதை வேண்டுமானாலும் சொல்லட்டும். நான் அவசியம் போயே ஆகவேண்டும்."

"நானும் துணைக்கு வரவா?" என்றாள் கமலாஜனி.

"வேண்டாம்."

இராமையா லாந்தரையும் கொண்டு முன்னுக்கு நடந்தான். நான் அவனைப் பின்பற்றி நடந்துகொண் டிருந்தேன். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

அடர்ந்து வளர்ந்தோங்கிய மரங்கள் இருளுடன் சேர்ந்து அந்தச் சூழ்நிலையைப் பயங்கரமாக்கிக் கொண்டிருந்தன. ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுகொள்ள முடியாத கும்மிருட்டு. இராமையா முன்னுக்கு விரைந்து நடந்துகொண்டிருந்தான். என்னால் இராமையாவுக்கு ஈடு கொடுத்து நடக்க முடியாதிருந்தது.

சிறிது தூரம்தான் நடந்திருப்போம். பின்னால் சுந்தரமூர்த்தி ஓடிவந்தார். இருட்டில் ஆளை அடையாளம் தெரியாமல் முதலில் பயந்துபோய்விட்டேன்.

''ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்?''

''ஒன்றுமில்லை. நானும் வருகின்றேன்.''

''தலைமை ஆசிரியர் ஒன்றும் சொல்லவில்லையா?''

''அவர்தான் என்னைப் போகும்படி சொன்னார்.''

ஓட்டமும், நடையுமாக என் கால்கள் பின்னிப் பின்னித் தடுக்குப்பட்டன. என் இதயம் டக்—டக் என்று அடித்துக் கொள்ளும் சத்தம் மற்றவர்களுக்கும் கேட்டுவிடும்போல் இருந்தது.

மனம் எதுவித அர்த்தமுமின்றிப் பயந்துகொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆண்டவனே! சரஸ்வதிக்கு ஒன்றும் நேராமல் காப்பாற்று. உன் அசுரத் தனத்தை இந்தச் சிறு குழந்தையிடமும் காட்டிவிடாதே.'' என் உள்ளம் புலம்பியது.

ஆட்டம், அசைவு எதுவுமின்றி வெறுமனேபதுமைபோல் சரஸ்வதி படுத்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் குப்பி மண்ணெண்ணெய் விளக்கு, புகையைக் கக்கியபடி அவிந்து அவிந்து எரிந்து கொண்டிருந்தது. எங்களைக் கண்டதும் தாயும், மற்றவர்களும் ஒதுங்கி இடமளித்தனர்.

சரஸ்வதியின் உடம்பைத் தொட்டுப் பார்த்தேன். இதயம் படக் படக்கென்று அடித்துக்கொண்டது. வைத்த கை வெந்துவிடும் போன்று அவள் உடம்பு கொதித்துக் கொண்டிருந்தது.

''104க்கு மேலிருக்கும் போலிருக்கே''என்றார் சுந்தரமூர்த்தி.

''இவ்வளவு நேரமும் கண்டபடி பிதற்றிவிட்டுச் சிறிது முன்பாகத்தான் பேசாது படுத்திருக்கிறாள்.'' தாய்மையின் துயரம் ஒவ்வொரு சொல்லிலும் தேங்கி வழிந்தது. உடுத்தியிருந்த சேலைத் தலைப்பால் கன்னத்தைத் துடைத்துக்கொண்டாள்.

''என்ன கொடுத்தீர்கள்?''

''காலையில் கண்டாவளைக்குப் போய் மருந்து வேண்டி வந்தோம்.''

மருந்தை எடுத்துக் காட்டினாள். சுந்தரமூர்த்திக்குச் சைகை காட்டிவிட்டு வெளியே வந்தேன்.

''என்ன டீச்சர்?''

''குழந்தை ஆபத்தான நிலையில் இருக்கிறாள் என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?''

''நானும் அப்படித்தான் நினைக்கின்றேன். இந்த நேரத்தில் என்ன செய்யமுடியும்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் எப்படியாவது கண்டாவளைக்குப் போய், டாக்டரைக் கூட்டிவரமாட்டீர்களா?"

"இராமையாவை அனுப்பினால் என்ன?"

"இல்லை மாஸ்டர், இராமையாவை அனுப்புவதிலும் பார்க்க நீங்கள் போவதுதான் நல்லது. இராமையா போனால் டாக்டர் வருவாரென்று சிறிதேனும் எதிர் பார்க்க முடியாது. சிரமத்தைப் பாராமல் எனக்காகப் போய்விட்டு வாருங்கள். எப்படியாவது டாக்டர் வந்தால் தான் பலன் உண்டு."

"அவர் கேட்டால், என்ன வருத்தம் என்று சொல்வது?"

"டிப்தீறியா போலிருக்கு என்று சொல்லுங்கள். எங்களுக்கு எப்படித் தெரியும், என்ன வருத்தமென்று. அவருக்குத்தானே அது தெரிய வேண்டும்?"

சுந்தரமூர்த்தி போய்விட்டார். எதிர்பார்க்கின்ற அளவுக்கு டாக்டர் விரைவாக வந்து சேர்வாரோ என்பது சந்தேகமாக இருந்தது.

நான் வெளியிலேயே நின்றுகொண்டிருந்தேன். இராமையாவைத் தொடர்ந்து மற்றவர்களும் வெளியே வந்தார்கள்.

"எங்கேம்மா, அவர் போகின்றார்?"

"டாக்டரைக் கூட்டி வருவதற்காகக் கண்டாவளைக்கு அனுப்பியிருக்கிறேன்."

தாய் தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள். அவளை எப்படித் தேற்றி ஆறுதல் அளிப்பதென்று இராமையாவுக்குமே புரியவில்லை.

ஒன்றை இழந்த துயரம் தீருவதற்கு முன் இந்த நிலைமை என்றால்...?

குழந்தை அனுங்கி முனகும் சத்தம் கேட்டது. மற்றவர்களை வெளியிலேயே நிற்கச்சொல்லிவிட்டு, குழந்தைக்கு அருகில் சென்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களை உதறி, உதறி அடித்தாள். எனக்குப் பயமாக இருந்தது. இதயம் புடைத்துக் குமுறி ஓலமிட்டது.

குழந்தையின் தலையைத் தூக்கி எனது மடியில் வைத்துக்கொண்டு, கால்களை கெட்டியாகப் பிடித்துத் தடவிக் கொடுத்தேன். திடீரென்று இருந்தாற்போல் கீச்சிட்டு அடித்துவைத்துக் குழறினுள். "என்னம்மா, என்னம்மா, ஐயோ! என்னது?" பதறிப்போய் தாய் ஓடிவந்தாள்.

"பதறுதீங்க, குழந்தைக்கு ஒன்றுமில்லை" என்று குழந்தையைத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தேன்.

தலைமை ஆசிரியரும், மற்றவர்களும் வந்தார்கள். சுந்தரமூர்த்தி போய்ச் சொல்லியிருக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டேன்.

யார் வந்தென்ன? இப்போது டாக்டர்தான் வரவேண்டும் என்று மனம் புலம்பிக்கொண்டிருந்தது.

திடீரென்று —

"கனகம் அக்கா! கனகம் அக்கா!!"

"சரசு, நான் தானம்மா. இங்கே பார். என்னம்மா வேணும்?" இந்த உலகம் முழுவதையுமே அவள் முன்னுல் ஈடாக்கி வைக்கின்ற மனேநிலை.

"சரஸ்வதி, என்னம்மா செய்கின்றது?"

தன் கண்களைத் திறந்து என்னைப் பார்த்தாள். ஒன்றும் புரியாத ஒருவித பாவனை. மற்றவர்களைச் சிறிது விலகி நிற்கும்படி சொன்னேன்.

என் முகத்தைத் தன் கையால் தடவினுள்.

"நீ அண்ணனைக் காணல்லியா அக்கா?"

"... ... ... ... ..." நான் இதற்கு என்ன பதிலைச் சொல்வது?

என் முகத்தையே துருவிப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பேசாமல் படுத்திரம்மா. எல்லாம் காலையில் பார்க்கலாம்'' என்றேன்.

பிறகு எதுவும் பேசாது கண்களை மூடிப் படுத்திருந்தாள். கண்களை மூடிக்கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் அவளது கண்களும், வாயும் புன்னகையோடு கூடிய ஒருவித அசைவு உணர்வைக் காட்டின. கனவு காண்கின்ருள் என்று எண்ணிக்கொண்டேன்.

''பார் அக்கா! அங்கே, அங்கே, அதோ அண்ணனை. ஒரு கொலைகாரன்...!''

நான் பயந்து நடுங்கியபடி தலைமை ஆசிரியரைப் பார்த்தேன். அவருக்கும் ஒன்றும் புரியவில்லை என்பது அவரது முகத் தோற்றத்திலிருந்து தெரிந்தது.

''தலையை எடுத்து கீழே படுக்க வையுங்கள்'' என்ருர்.

எனக்கு ஓர் இடத்தில் இருப்புக் கொள்ளவில்லை. வெளியே வந்து யாராவது வருகின்ருர்களா என்று பார்த்தேன். அர்த்தமற்ற பார்வைதான். இவ்வளவுக்குள் சுந்தரமூர்த்தி சைக்கிளில் போய்ச் சேர்ந்திருக்கவே மாட்டார்.

''என்ன மாஸ்டர்?'' என்ருள் பத்மா தலைமை ஆசிரியரைப் பார்த்து.

''குழந்தையின் மனம் பயங்கரமான விதத்தில் தாக்கத்துக்குள்ளாகி விட்டது.''

''கடந்த கலவரத்தின்போது அவளது அண்ணனை இழந்துவிட்டார்கள்'' என்றேன் நான்.

''இந்தக் குழந்தையின் மனம் இவ்வளவு தூரத்துக்கு அதனுல் பாதிக்கப்பட்டிருக்குமா?'' என்ருள் கமலாஜனி.

ஒவ்வொருவருடைய கேள்விகளும், எண்ணங்களும் எழுந்து, எழுந்து அவிந்து மறைந்து நின்றன. யாருக்கும் எதுவும் கதைக்கத் தோன்றவில்லை. வாய் திறந்து ஏதாவது பேச முயல்வதென்ருல் அதற்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்யவேண்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுப்புறமெல்லாம் ஒரே பயங்கரமாகத் தோற்ற மளித்தன. ஒரே வனாந்தரக் காடு. பக்கத்தில்கூட, வைத்த குரலுக்கு ஓடிவர வேறு குடியில்லை. இருட்டோடு இருட்டாக மரங்கள் அசைவதும், இருந்து இருந்துவிட்டு, குரங்குகள் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்குத் தாவிக்கொள்வதும் சதா பீதியை ஊட்டக்கூடியன வாயிருந்தன. மரங்களில் தூங்கிக்கொண்டிருந்த குரங்கு களுக்கு, எங்கள் பேச்சுக்குரல் புதிதான, வித்தியாச மான சூழ்நிலையாயிருந்தது. இரவென்றும் இல்லாமல், அவை கத்துவதும், மரம்விட்டு மரம் தாவுவதும், சினமாவதும், அந்தச் சூழ்நிலைக்கு ஒவ்வாததாகவுமிருந்தது.

''மாஸ்டர் இவ்வளவுக்குப் போய்ச் சேர்ந்திருப் பாரோ?'' என்றாள் பத்மா.

''அவர் என்ன இயந்திரமா? நாம் நினைக்கிறபடி நினைத்த இடத்துக்குப் போய்ச் சேர. அவரும் சைக்கிளில் ஓடிப்போய்ச் சேரவேண்டுமே!'' என்றாள் கமலாஜனி.

பிறகும் அதே ஆழ்ந்த அமைதி.

உள்ளே சென்று சரஸ்வதிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந் தேன். அவள் கண்விழித்துக் கொண்டாள். நான் இருந்த விதம் அவளுக்குத் திருப்தி அளிக்காததுபோல் அவளது முகபாவம் காட்டியது. பழைய மாதிரியே இருந்தது. அவ ளது தலையைத் தூக்கி எனது மடிமீது வைத்துக்கொண் டிருந்தேன்.

''எங்கே அக்கா போனீர்கள்?''

''ஓரிடமும் இல்லையம்மா. வெளியிலே நின்றேன்.''

''என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையாக்கா?''

''அப்படியொன்றும் இல்லையம்மா. உன்னை எனக்கு நன்றாகப் பிடித்திருக்கு. பேசாமல் படுத்திரம்மா.''

''ஏன் அக்கா?''

''நாளைக்குக் கனக்கக் கதைக்கலாம் அம்மா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பவும் அண்ணனைக் கண்டனான் அக்கா."

என் கண்களில் இருந்து கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதபடி கண்ணீர் பொல பொல என்று வழிந்துகொண்டிருந்தது.

"ஏன் அக்கா அழுகிறீர்கள்?"

என் இதயம் வெடித்துச் சிதறிவிடும்போலிருந்தது.

சரஸ்வதிக்குத் தெரியாதபடி முகத்தைத் திருப்பி வைத்துக்கொண்டு சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டேன்.

"நான் செத்துவிடுவேன் என்று அக்கா அழுகிறீர்கள்?"

"இல்லேம்மா. நான் அழல்லேம்மா. நீ சாகமாட்டாயம்மா. நீ ஒன்றுக்கும் பயப்படாதேம்மா. நாளைக்கு உனக்கு எல்லாம் சுகமாகி, நீ பள்ளிக்கூடத்துக்கு வருவாய். அப்போது கனக்கக் கதைப்பம். இப்போது பேசாமல் படுத்திரம்மா."

எவ்வளவு முயன்றும் என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதபடி அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. கமலாஜனி எனக்கருகில் வந்து சைகை காட்டி என்னை எழும்புமாறு சொன்னாள். சரஸ்வதியின் தாயும் வற்புறுத்தவே, தாயிடம் சரஸ்வதியைக் கொடுத்துவிட்டு நான் எழும்பி வெளியே வந்தேன்.

எங்காவது கண் காணாத இடத்திற்குப் போய், என்னை ஒருவரும் பார்க்காதவாறு வாய்விட்டுக் கதறி அழவேண்டும்போலிருந்தது. ஒருவரோடும் சேர்ந்துநிற்க எனக்குப் பிடிக்கவில்லை. தனியான ஓர் இடத்தில் அமைதியாக இருக்கவேண்டும்போலிருந்தது.

மற்றவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து சிறிது தூரம் தள்ளிப்போய் ஒரு மரக் குத்தியில் இருந்தேன்.

என் மனத் துயரம் தீரும்வரை, மனதுக்குள்ளாகவே அழுது கண்ணீரை வடித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலாஜனி என்னருகில் வந்து நின்ருள்.

''கனகம்! யார்மீதும் அளவு கடந்த அன்பு வைத்திருப்பது எப்போதும் ஆபத்துத்தான்.''

நான் எதுவும் பேசாது அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அன்பு ஆபத்தானதா? ஆமாம். இல்லாவிட்டால் எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்த, யாரோ ஒரு சிறுமிக்காக நான் ஏன் இவ்வளவு தூரம் சஞ்சலப்பட வேண்டும்?

சரஸ்வதி என்னைக் கூப்பிடுவதாகத் தலைமை ஆசிரியர் வந்து சொன்ஞர். நான் எழுந்து சென்றேன். கமலாஜனியும் என்னைத் தொடர்ந்து வந்தாள்.

''என்னை விட்டிட்டு ஏனக்கா போகிறீர்கள்?''

''நான் பக்கத்திலே தானேம்மா நின்றுகொண்டிருந்தேன்.''

''இல்லேக்கா. நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்.''

''... ... ... ... ...''

''அண்ணன் வருவாஞ அக்கா?''

''ஆமாம்மா. கட்டாயம் வருவான். நீ எதுவும் பேசாமல் படுத்துத் தூங்கம்மா. அப்படித் தூங்கிஞல்தான் அவன் உன்கிட்டே வருவான்.''

''எப்ப அக்கா வருவான்?''

''நாளைக்கு வந்திடுவானம்மா.''

''நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் அக்கா. அவன் வரமாட்டான் அக்கா. அவனைக் கொன்றுவிட்டார்கள் அக்கா''.

''இல்லேம்மா, அவன் சாகவில்லை. கட்டாயமாக அவன் வருவான். நீ இருந்து பாரேன்.''

சிறிது நேரம்வரை எதுவும் பேசாமல் படுத்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அண்ணேய்! அண்ணுச்சோய்! அக்கா, அக்கா கூப் பிடக்கா. அதோ போருன் அக்கா.''

எனக்குக் கை,கால் ஒன்றுமே ஓடவில்லை. பயந்துபோய் நடுங்கினேன். அவள் திமிறிக்கொண்டு எழுந்திருக்க முயன் ருள். தலைமை ஆசிரியரும் பக்கத்தில் வந்திருந்து பிடித்துக் கொண்டிருந்தார். அவரது முகமும் பீதியடைந்துபோய் பயங்கரமாய் வெளுத்திருந்தது.

''ம்க்கூம்... அண்ணேய்! அண்ணேய்!! நான் போறன். என்னை விடுங்கோ.''

சரஸ்வதியின் தாயின் ஓலம், சரஸ்வதியின் இந்தச் சத் தத்தையும் பணியவைத்து ஓங்கியது. இராமையா மௌன மாகக் கண்ணீர் வடித்தபடி மூலையில் நின்றுகொண்டிருந் தான்.

சரஸ்வதி திணறியபடி முனக்கி முனகிப் படாத பாடு பட்டாள்.

என் உணர்வுகளெல்லாம் ஒடுங்கி அடங்க, செயலற்று விடப்பட்டுப் போய்ச் சூனிய நிலையிலிருந்தேன்.

குழந்தையின் திமிறல் அடங்கியது.

தலைமை ஆசிரியர் மெதுவாக எழுந்து நின்ருர். ஒன் றும் புரிபடாத பயக் கலக்கத்தோடு நான் அவரைப் பார்த்தேன்.

''நீங்கள் சற்று வேண்டிக்கொள்ளுங்கள்'' என்ருர் சரஸ்வதியின் தாயிடம்.

குழந்தை தாயின் கைக்கு மாறியதும், தலைமை ஆசிரி யர் மௌனமாக வெளியே சென்ருர். அவரைத் தொடர்ந்து நானும் வெளியே வந்தேன்.

''சுந்தரமூர்த்தியை இன்னும் காணவில்லையே மாஸ் டர்'' என்ருள் பத்மா, தலைமை ஆசிரியரைப் பார்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பதில் எதுவும் பேசாமல் அமைதியாக உலாவிக் கொண்டிருந்தார்.

காட்டு மரங்களில் குரங்குகள் கொப்புவிட்டுக் கொப்புத் தாவுவதும், உறுமி உறுமிச் சத்தம் போடுவதும் இன்னும் ஓயவில்லை. அவைக்கும் இன்று உறக்கமில்லைப் போலும்.

''ஐயோ! என்ரை ராசாத்தி!'' சரஸ்வதியினுடைய தாயின் குரல், காட்டு மரங்களோடு மோதிப் பேரிரைச்சலோடு எதிரொலித்துக் கொண்டிருந்தது.

உலகம் தோன்றிய நாள் தொடக்கம் தன் கடமையை நடத்துபவன் நடத்திக்கொண்டிருந்தான்.

காலத்தோடு ஒட்டிய அந்தக் கடமை முடிந்தது. அதன் முடிவான முடிவில் சிக்கிச் சுழன்றடிக்கின்ற மனிதத்துவ விசாரங்கள் பற்றிக் கவலையோ, இன்பமோ, துன்பமோ எதுவுமற்ற நிலையில், சதா தன் இயக்கச் சக்தியில் கவனத்தைச் செலுத்தும், கண்ணுக்கோ, புலனுக்கோ புலப்படாத அது, அதைச் சுற்றி ஓலமிட்டு, எரிந்து புகைந்து, திருப்தியற்று, எல்லாவற்றையும் தமதாக்கிக் கொள்ள நினைக்கும், இந்த இயக்கச் சக்திக்கு உட்பட்ட உணர்வின் சேர்க்கை!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

ஒரு கிழமைக்குள் சிவபாதம் மட்டக்களப்பில் இருந்து திரும்பிவிட்டார். பிரயாணத்தால் ஏற்பட்ட சிறு களைப்பைத் தவிர, வேறு எந்த மாற்றமும் அவரிடம் தென்படவில்லை.

என்னுடைய ஒவ்வொரு நாளும், சரஸ்வதியின் நீக்கமற்ற நினைவுகளுடனேயே கழிந்துகொண்டிருந்தது. எங்கு திரும்பினாலும், சொல்லாய், வடிவமாய், அபிநயமாய் அவள் நின்றுகொண்டிருந்தாள். "அக்கா! அக்கா!" என்று அவள் அடிக்கடி அழைப்பது போன்ற பிரமை.

"எங்க அண்ணனைக் காணவில்லை என்ருக்கா அழுகிறீர்கள்?"

"நான் செத்துவிடுவேன் என்ருக்கா அழுகிறீர்கள்?"

என்னை ஈட்டியால் குடைந்து குடைந்து சித்திரவதை செய்வதுபோல், அவளது ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு சொல்லும் சதா எதிரொலித்துக்கொண்டே இருந்தன.

தினம் தினம் இராமையாவின் வீட்டுக்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல்கூற முயல்வேன். அவர்களுக்கு ஆறுதல் கூறுவதாக என்னையே நான் ஏமாற்றிக் கொள்வதேயன்றி வேறில்லை. சம்பிரதாயபூர்வமான ஒன்று. அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித குலத்தின் கதை இந்த ஒன்றுடனேயே ஒட்டிக் கொண்டிருப்பதில்லை. பலவீனமான மனத்துள், இந்த ஒன்று புகுந்து. முழு இடைவெளியை நிரப்பிக்கொண்டு விசுவரூப மெடுத்துப் பேயாட்டம் ஆட்டுகின்றது. இந்தப் பேயாட்டங்களுக்கு அடி பணிந்து பலியாகிக்கொண்டிருக் கும் நான்— இதற்கு எதிரான திசையில் திட சித்தத் துடன் நடந்து கொண்டிருக்கும் சிவபாதம்— எம் இரு வருக்கிடையேயும்தான் எவ்வளவு வேறுபாடு?

வாழத் துடிக்கின்ற மக்கள் நாளும் பொழுதும் அதற் காக முயன்று கொண்டிருந்தார்கள். காடுகளில் மரங்களை வெட்டுகின்ற சத்தமும், தறிக்கின்ற சத்தமும், பேரிரைச்ச லோடு மரங்கள் முறிந்து விழுகின்ற சத்தமும் மக்களின் முயற்சியையும் ஆரவாரத்தையும் சாத்திக் கொண்டிருந் தன.

இப்போதெல்லாம் சிவபாதம் முன்னர்போல் என் னுடனும் அதிகமாக எதுவும் பேசுவதில்லை. பள்ளிக்கூட மும், அது முடிந்ததும், மக்களோடு மக்களாய்க் காட்டில் வேலை செய்வதுமாக அவர் பொழுது கழிந்துகொண் டிருந்தது.

வாழ்க்கையின் வேகத்தோடு போட்டிபோட முடி யாதபடி, ஒவ்வொரு நினைவும் துன்பமும் மாறி மாறித் தேய்ந்து, தேய்ந்து புதிய வடிவங்களை அளித்து, மறைந்து கொண்டிருந்தன.

எந்த மாற்றத்துக்கும், வேகச் சுழலுக்கும் சிக்கிக் கொள்ளாதபடி சரஸ்வதியின் நினைவு மேலோங்கி, மறக்க முடியாதபடி அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. சில வேளைகளில் கனவுகளில் கூடத் தோன்றிப் பேயாட்டம் ஆட்டி உலுப்பி எடுப்பாள்.

பள்ளிக்கூடம் தொடங்கி, ஒரு தவணை முடிவதற்கு இன்னும் சில நாட்கள் மட்டும்தான் இருந்தன. பிள்ளை களுக்கு தவணைப் பரீட்சை நடந்துகொண்டிருந்தது. தவணைப் பரீட்சை முடிவடைந்ததும் விடுமுறை தொடங்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடுமுறையில் பத்மாவுக்கு கல்யாணப் பதிவு நடக்க இருக்கின்றதாம். அவளுக்கு எந்த நேரம் பார்த்தாலும் அதே பேச்சுத்தான். மாப்பிள்ளை ஒரு 'கிளறிக்கல் சேவன்'றும். கொழும்பில் வேலை செய்கின்றாராம்.

ஒருநாள், பள்ளிக்கூடம் தொடங்குவதற்குச் சிறிது நேரம் இருக்கத்தக்கதாக, சிவபாதம் என்னைப் பார்த்து, ''பத்மாவுக்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டதாமே'' என்றார்.

''ஆமாம். கொழும்பில் வேலை செய்கின்றாராம்'' என்றேன்.

''உங்களுக்கு எப்போது?''

சிவபாதத்திடமிருந்து, இத்தகைய கேள்வியை நான் எதிர்பார்த்திருக்கவேயில்லை. அதனால் பதில் சொல்லுவதற்குச் சிறிது கஷ்டமாக இருந்தது.

''அது எனக்கே தெரியவில்லை'' என்றேன்.

''ஏன்?''

''திருமணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றனவாம். எனக்கும் அங்கேதானே நிச்சயார்த்தம் நடைபெறவேண்டும்.''

அவர் சிரித்துக்கொண்டே, ''இவையெல்லாம் பழைய கதை. இப்போது எல்லாம் மாறிவிட்டது. சொர்க்கத்தில் உள்ளவர்களுக்கு ஏன் வீணாகத் தொல்லை கொடுக்க வேண்டுமென்றும், இங்குள்ளவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றும் அந்தச் சொர்க்கத்தின் அதிபதி இங்கு தரகர்கள் என்ற உத்தியோகத்தர்களை நியமித்துள்ளான்'' என்றார்.

நான் சிரித்துவிட்டேன்.

''அப்படி ஒன்றுமில்லை. சும்மா தமாசுக்குச் சொன்னேன். எனக்கு ஒரு சகோதரி இருக்கின்றாள். இங்கே வந்தபோது நீங்களே அவளைப் பார்த்திருக்கிறீர்கள். அவளுக்

கும் கல்யாண வயசு. அவளைவிட அம்மாதான். வேறு எந்த வித துணையோ ஆதாரமோ இல்லை. எங்கள் இருவருடைய வாழ்க்கையையும் நானேதான் நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றேன். சொத்தோ, பொருளோ எதுவுமே இல்லை. இந்த நிலையில் என்னுடைய கல்யாணத்தைப்பற்றி நான் என்னத்தை நினைப்பது?''

நான் சொன்னதைக் கேட்டு எதுவும் பேசாது, தன் வேலையைக் கவனித்துக் கொள்கின்ற பாவனையில் தனது வகுப்புக்குச் சென்றார். எனக்கோ நாள் முழுவதும் அவருடன் கதைத்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது.

''நீங்கள் விடுமுறைக்கு வீட்டுக்குப் போகப் போவதில்லை என்றுசொன்னார்கள்'' என்றேன் அவரைத் தொடர்ந்து கொண்டு.

''ஆமாம்.''

''ஏன்?''

''அங்கேதான் போய் என்ன செய்வது?''

''ஏன், அம்மா, சகோதரங்கள் இல்லையா?''

''எனக்கு வேறு சகோதரங்களில்லை. நான்தான் தனியே. அம்மா இருக்கின்றாள். ஊரில் இல்லை.''

''எங்கே அம்மா? ஏதாவது வேலையா?''

அவர் எதுவும் பேசாது, கேட்டதும் கேட்காததும் மாதிரித் தன் அலுவல்களில் ஈடுபட்டிருந்தார். நான் நின்றுகொண்டிருக்கின்ற ஒவ்வொரு விநாடியும் முள்ளிலேயே நிற்பதுபோன்ற உணர்வை ஊட்டியது. யாராவது வருகின்றார்களோ என்று அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டேன்.

நான் இன்னமும் நின்றுகொண்டிருப்பதை உணர்ந்து கொண்டவர்போல், ''ம், என்ன கேட்டீர்கள்?'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கேள்வியும், பாவனையும் எனக்குச் சிரிப்பாக இருந்தன. சிரித்துக்கொண்டே, ''அம்மாவுக்கு ஏதாவது வேலையோ?'' என்றேன்.

''ஆமாம், வேலை.''

பிள்ளைகள் கூடி ஆரவாரமாக இருந்தபடியால் மேற் கொண்டு எதுவும் கதைக்க முடியவில்லை.

பத்மாவை, அறிவிப்புக் கொடுப்பதற்காக வீட்டி லிருந்து வந்து கூட்டிச் சென்றார்கள்.

அவள் இங்கிருந்து போன நேரம் தொடக்கம், என் மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலை பாய்ந்துகொண் டிருந்தது.

குழந்தைப் பருவத்தில், பக்கத்துவீட்டு ரேணுகாவுக்குக் கிடைப்பதுபோல், பாவாடை சட்டை எனக்குக் கிடைக்க வில்லையே என்று ஏங்கினேன். இப்போது பத்மாவுக்குக் கல்யாணம்— என்னிலும் பார்க்க ஐந்து வயதுக்கு இளையவ ளான அவளுக்குக் கல்யாணம் நடக்கப்போகின்றது. எனக்கு...?

அறிவிப்புக் கொடுப்பதற்காக உறவினர்கள் வந்து அவளைக் கூட்டிச் செல்கின்றார்கள். என்னை...?

தனிமையிலிருந்து மணிக் கணக்காக என்பாட்டுக்கு யோசித்துக் கொண்டிருந்தேன். என்னுள் கொந்தளித்துக் கொண்டிருக்கும் உணர்ச்சிப் பெருக்கையும், அபிலாசை களையும் நான் யாருக்குச் சொல்லமுடியும்?

தவணைப் பரீட்சை முடிவடைந்து, அதையொட்டிய வேலைகள் நடந்துகொண்டிருந்தன. விடுமுறைக்கு இன்னும் மூன்று நாட்கள் மட்டுமே இருந்தன. குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான். சதா ஆடிக் கும்மாளம் அடித்தபடி இருந்தார்கள்.

தபால்கள் வந்ததும், பூரணம் அக்காவிடம் இருந்து ஏதாவது கடிதங்கள் வருமென்ற நப்பாசையுடன், தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் இடத்துக்கே சென்று பார்த்தேன். எதிர் பார்த்தபடி அவரிடமிருந்து எதுவுமே வரவில்லை.

வீட்டிலிருந்து பரமேஸ் கடிதம் எழுதியிருந்தாள். அதனைப் பிரித்துப் படித்தபோது, இனம் புரியாத நடுக்க மும், பயமுமாயிருந்தது. திரும்பத் திரும்பப் படித்தேன். இரண்டே வரிகள்தான்.

''உன்னை, அம்மா உடனடியாக வந்துவிட்டுப் போகட் டாம். இது கிடைத்ததும் புறப்படு''என்று மாத்திரம் இருந் தது. எதற்காக இப்படி எழுதினுள் என்று யோசித்து, யோசித்துக் குழம்பினேன். எனது கல்யாண விஷயமாக இருக்கலாம் என்ற முடிவே என் மனத்துள் பதிந்தது.

ஆனுலும் எதையும் திடமாக முடிவு செய்துகொள்ள முடியாதிருந்தது. பலவற்றை யோசித்து யோசித்துக் குழம்புவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

பரமேஸ் இப்படிக் கடிதம் எழுதியிருப்பதைச் சிவ பாதத்திடமும் சொன்னேன். அவர் சிரித்துக்கொண்டே, ''சொர்க்கத்தின் அதிபதி உங்கள்மீதும் தன் பார்வையைச் செலுத்திவிட்டான் போலும்'' என்ருர்.

அவர் சொன்னதைக் கேட்டு நானும் சிரித்தேன். ஆனுல் எனது அந்தச் சிரிப்பில் சந்தோஷமோ, களிப்போ இருந்ததாகச் சொல்லமுடியாது. அவரது தமாசுக்காகச் சிரித்தேனேயன்றி வேறில்லை.

•அவர் அப்படிச் சொல்லிவிட்டுப் பேசாதிருந்தார். சிறிது நேரம்வரை அவரையே உற்றுப் பார்த்தபடி நின் றிருந்தேன். அவர் முகத்தில் சிந்தனை ரேகைகள் படிந் திருந்தன. அந்த ரேகைகளில் ஏதோ மாறுபாடான உணர்ச்சிகள் கண்ணும்பூச்சி காட்டுவதுபோல் எனக்குப் பட்டது.

''நாம் என்ன நினைக்கின்ருேம், என்ன நடக்கின்றது என்று ஒன்றையுமே புரிந்துகொள்ள முடியாமல் இரு கின்றது''என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள்?'' என்றேன்.

''நீங்கள் இன்னும் நிற்கின்றீர்களா? நான் உங்களைக் கவனிக்கவேயில்லை. ஏதோ நினைவில் சொன்னேன்'' என்றார்.

நான் அவரைக் கூர்ந்து பார்த்தேன். அவர் முகத்தில் படிந்திருக்கும் துன்ப ரேகைகளை மறைப்பதற்காக அரும் பாடுபட்டுக்கொண்டிருந்தார். பின் சிரித்துக்கொண்டே என்னைப் பார்த்து, ''எனக்கு வேலை இருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டு எழுந்து நின்றார்.

பரந்தனில் பஸ் ஏறும் வரைக்கும், பரமேஸின் கடிதத்தைப் பற்றிய சிந்தனையாகவே இருந்தது. இடையில் அதிக நாட்களாகக் கடிதம் வராமல் இருந்தது. இத்தோடு சேர்ந்து அதையும் எண்ணிப் பார்க்கும்போது, ஏதோ புரிந்துகொள்ள முடியாத பயங்கர உணர்வுடன் இதயம் அடித்துக்கொண்டது.

எனக்குப் பின்னாலிருந்த ஆசனத்திலிருந்து பழக்கமான குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். பூரணம் அக்காவின் சிநேகிதி பார்வதியும், அவரது தங்கையின் அந்தக் குழந்தையும், பக்கத்தில் இன்னொரு மனிதரும் இருந்தனர். பக்கத்தில் இருந்தவர் பார்வதியின் கணவராக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டேன். நாங்கள் நல்லூருக்குப் போயிருந்த போது அவர் அங்கு இருக்கவில்லை.

நான் திரும்பித் திரும்பிப் பார்த்தேன். பார்வதிக்கு என்னைத் தெரிந்ததாகவே தெரியவில்லை. கணவனுக்கும் மனைவிக்குமிடையில் ஏதோ வயலைப் பற்றிய முக்கியமான பிரச்சினைகள் இருந்தன. அவர்களது அந்தப் பிரச்சினைகளுக்கிடையே குறுக்கிடாமல் சிறிதுநேரம்வரை பொறுத்திருந்தேன்.

பஸ், கிளிநொச்சியைத் தாண்டியதும், அவர்கள் பக்கம் திரும்பி, ''என்னைத் தெரிகின்றதா, அக்கா?''— என்றேன். அவர் சிறிது நேரம்வரை கண்களை விழித்து விழித்து ஞாபகப்படுத்திக்கொள்ள முயன்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தெரியவில்லையேம்மா'' என்றார்.

''பூரணம் அக்காவுடன் ஒருநாள் உங்கள் வீட்டுக்கு வந்திருந்தேன்.''

''ஆ... அடடா, மறந்துவிட்டேனம்மா. சரி—சரி—, சௌக்கியம்தானே?''

நான் சிரித்தேன்.

''இது உங்கள் தங்கையின் குழந்தை தானே?''

''ஆமாம்மா. நீ வந்தபோது கண்டிருப்பாய்.''

''உங்கள் தங்கையின் கணவருடைய விஷயம் என்ன மாதிரி அக்கா?''

''அதெல்லாம் முடிந்த கதைதானம்மா.''

அவர் முகத்தில் சோகம் திரையிட்டது. எதுவும் பேசத் தோன்றாமல் பேசாதிருந்தேன்.

''எல்லாம் அவங்க அவங்க விதிப்படிதானம்மா நடக்கும். அவளின் தலையெழுத்தும், இந்தக் குழந்தையின் தலையெழுத்தும் அப்படி. அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்?''

பேச்சை இந்தப் போக்கில் வளர்த்துக்கொள்ள மனமின்றி, ''இப்போது எங்கே அக்கா போகின்றீர்கள்?'' என்றேன்.

''மாங்குளத்தில் எங்களுக்குக் கொஞ்சம் வயல் இருக்கின்றதம்மா. இப்போது விதைப்புக் காலம். அங்கே ஆட்கள் நின்று வேலை செய்கின்றார்கள். போய்ப் பார்த்து வரலாம் என்று புறப்பட்டோம்'' என்றார்.

''பூரணம் அக்கா சிலாபத்துக்கு மாறிவிட்டார்.''

''தெரியும். சிலாபத்திலிருந்து கடிதம் எழுதியிருந்தார்.''

சிறிது பொறுத்து—

''அவருக்கு அவர் துன்பம். மிகவும் பலவீனமானவர்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணம் அக்காவா பலவீனமானவர் என்று எண்ணிக் கொண்டேன்.

"உங்களுக்கு என்ன எழுதியிருந்தார்?"

"அவர் எழுதுவது யாராவது புரிந்துகொள்ளக் கூடிய தாக இருக்கின்றதா? ஏதோ தன்பாட்டுக்கு மனத்தில் ஒன்றை நினைத்துக்கொண்டு, தனக்குமே புரிந்தும், புரியாததுமாய் ஏதோ எழுதியிருந்தார். திரும்ப நானும் எழுதியிருந்தேன். அதற்குப் பதில் இல்லை. ஒரு கடிதத்தோடு சரி."

பஸ் நின்று பிரயாணிகள் ஏறிக்கொண்டமையால், நெருக்கடி அதிகமாக இருந்தது. பெட்டி, கடகங்களோடு மேல் கம்பியில் பிடித்துக்கொண்டு, நெருக்கியடித்துக் கொண்டு நின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் மேற்கொண்டு எதுவும் பேசமுடியாதிருந்தது.

மாங்குளத்தில் பஸ் நின்றதும் பார்வதியும், அவர் கணவரும், குழந்தையும் இறங்கினர்கள்.

"செல்வம், அக்காவுக்கு டாட்டா சொல்லு."

"டாட்டா."

குழந்தை, தன் பிஞ்சுக் கையை உயர்த்தி அசைத்துக் காட்டியது. பதிலுக்கு நானும் கையை உயர்த்தி டாட்டா சொன்னேன்.

"வருகிறோம்மா."

பார்வதி, குழந்தையையும் தூக்கிக்கொண்டு நடந்தார்.

பஸ் முல்லைத்தீவு வந்துசேரும்வரை துயரமும், மகிழ்வு மற்ற அதீத நிலையில் என் மனம் இருந்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

வீட்டுக்கு வந்து சேர்ந்த போது, அம்மாவின் நடைமுறையில் இருந்த மாற்றத்தை என்னால் உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. முகத்தில் சந்தோஷமில்லை. அதற்கு மாறாக இனம் புரிந்துகொள்ள முடியாத வேதனை இருளையே அவள் முகத்தில் காணக் கூடியதாக இருந்தது. வெகு நேரமாகியும், நான் வந்தேனே என்ற எண்ணமே இல்லாது, என்னுடன் எதுவுமே பேசாதிருந்தாள்.

பரமேசும் என் கண்ணில் படவில்லை. ஒரு சிறு கண இடைவெளிக்குள், அர்த்தமில்லாமல் என்னவோ எல்லாம் எண்ணித் திகிலடைந்து போயிருந்தேன்.

''என்ன அம்மா, ஏன் பேசாமல் இருக்கின்றாய்? எங்கே பரமேஸ்? என்னை ஏன் இவ்வளவு அவசரமாக வரச் சொல்லி எழுதச் சொன்னாய்?''

எல்லாக் கேள்வியையும், பதிலுக்கு இடைவெளியே விடாமல் ஒரே மூச்சில் அடுக்கிக் கொண்டு போனேன்.

வீட்டில் நிலவிய இந்த மயான அமைதி, என் சிந்தனைக்கு இடம் கொடுக்காமல் நடுநடுங்கச் செய்தது?

''பரமேஸ் எங்கே?''

''வீட்டுக்குள்ளேதான் எங்கேயோ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னம்மா இது? எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே?''

''வந்ததும் வராததுமாய் ஏன் சும்மா கத்துகிருய்? அவள் வீட்டுக்குள்ளேதான் எங்காவது இருப்பாள்.'' சினந்து பதில் சொன்னுள். இந்தச் சினத்துக்கும் வெறுப்புக்கும் பொருள் என்ன?

பரமேசைக் குரல் கொடுத்துக் கூப்பிட்டேன். நான் வந்ததும் ஏன் இப்படி ஒளிந்துகொள்ள வேண்டும்? நான் குரல் கொடுத்தும் பதிலில்லாமலிருந்தது. இன்னும் என் னென்னவோ எல்லாம் எண்ணச் செய்தது.

எழுந்து வீட்டுக்குள் சென்றேன்.

''பரமேஸ்!''

''...........''

''பரமேஸ்!''

எதுவும் பேசாது வாய்விட்டு ஓவென்று அழுதாள்.

''என்ன பரமேஸ்? ஏன் அழுகின்ருய்?''

''...........''

''ஏதாவது சுகமில்லையா?''

''ஒன்றுமில்லை அக்கா.''

''பிறகேன் இங்கே ஒளிந்துகொண்டு அழுகின்ருய்?''

''... ... ... ... ...''

அவள் இன்னும் இன்னும் கேவிக் கேவி அழுதாள். வெளியிலிருந்து அம்மாவின் குரல் சன்னமாய் ஒலித்தது.

''நடக்கிறதெல்லாம் நடந்ததற்கப்புறம், உதொண்டு தான் மிச்சம். தன்பாட்டுக்கு இருந்து அழுது தொலைக் கட்டும். ஒன்றும் கரைஞ்சு போகாது. நீ ஏன் அவளோடை இருந்து மல்லுக்கட்டுகிருய்?''

''பிறகேன் என்னை வரச் சொல்லி எழுதுவித்தாய்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் புரிந்தும் புரியாமலுமாய் விஷயம் நிழலோடிக் கொண்டிருந்தது. அம்மாவின் இரக்கமற்ற தன்மையும் பேச்சும் வேதனையாக இருந்தன. இது என்ன விரக்தி?

''பரமேஸ்! என்னம்மா நடந்தது? இரண்டு பேரும் ஒன்றுமே பேசாது ஒருத்தருக்கொருத்தர் இப்படி இருந்தால் நான் என்னம்மா செய்கிறது?''

''நீ ஒன்றும் செய்ய வேண்டாம் அக்கா. இங்கிருந்து திரும்பிப் போய்விடு. நான் எங்காவது கிணற்றிலோ குளத்திலோ விழுந்து என் பாவச் சுமையை இறக்கிக் கொள்ளுகின்றேன்.''

''பரமேஸ்!''

பாவச் சுமை? பாவச் சுமை?

''எனக்கு எங்காவது போய்ச் சாகவேணுமென்று தான் அக்கா விருப்பமாயிருக்கு!''

''பரமேஸ்!''

என் இரத்த அலைகளின் கொந்தளிப்பு கரைமீறுகின்றது. அவளது கன்னம் முதுகு எல்லாவற்றிலும் என் கைகள் அசுர வேகத்தோடுபட்டு மீள்கின்றன- ஏதோ ஒரு வெறித் தன்மை. வெறி உணர்ச்சியின் உச்ச கட்டம். உடலில் - இரத்தக் கலப்பில்—அதன் பரந்த பிடிப்பில் உக்கிரக் கொதிப்போடு கூடிய மிருகவெறி.

கைகள் சூடேறி ஓய்ந்து விட்டன.

''ஏன் அக்கா நிறுத்திவிட்டாய்? நல்லாய் அடி அக்கா. ஒரு கொட்டனையோ தடியையோ எடுத்து, ஒரே அடியாய் அடித்துக் கொன்றுவிடு. எனக்கும் நிம்மதியாய் இருக்கும். அடிக்கிறதற்கு உனக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கு? நீ தானே உழைக்கின்றாய்? உன்னுடைய உழைப்பைக் கொண்டுதானே உயிர் வாழ்கின்றேன். அந்த உயிர் உன்னுடையது தானே?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பரமேஸ்!"

"ஏன் அக்கா நீ அழுகின்றாய்? என்னுடையது என்னுடனேயே போகட்டும். எனக்காக இனியும் யாரும் கஷ்டப்படவோ வேதனைப்படவோ வேண்டாம்."

"ஆண்டவனே! எனக்கேன் இந்தத் தண்டனைகள்! நான் என்ன பாவம் செய்தேன்?"

அம்மா, வெளியே கப்போடு சாய்ந்தபடி நிர்ச்சிந்தனையாக இருந்தாள்.

பகற்பொழுது மறைந்து, மறைந்து இருள் மூட்டம் கவ்வத் தொடங்கியது. முற்றத்து வேப்ப மரத்தில் பறவைகள் சேர்க்கைக்கு இடம் தேடிக் கலகலப்பாக ஆரவாரச் சத்தம் எழுப்பின.

பரமேஸ், விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள். அம்மாவும் துன்புறுத்தியிருப்பாள். சாகவேண்டுமென்ற மனப்போக்கை அம்மாவின் வெறுப்புத்தான் அவளுக்கு ஊட்டியிருக்கும். அந்தச் சொல்லின் கொடூரத் தன்மையை— அதில் பொதிந்துள்ள வாழ்வின் நியதியை அவள் உணர்ந்தா சொன்னாள்?

அவள் எந்த எண்ணத்தோடு சொன்னாளோ? ஆனால் எனக்கு அது பிரளயமாகத் தோன்றி, நிலை கலங்கச் செய்தது. எத்தனை சாவின் அடியால் என் மனம் கன்றிப்போய் இருக்கின்றது என்பதை அவளால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

இந்தக் கொடுமையான வாழ்வின் முடிவு எங்கே? இதற்கு மீட்சியே இருக்கமுடியாதா?

"அம்மா! என்னம்மா நடந்தது?"

"என்னை என்னத்தைச் சொல்லச் சொல்லுகின்றாய்? அவளைத்தான் கேள்."

"உனக்குப் பின்னே என்ன தெரியும்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"... ... ..."

"என்னை ஏன் போட்டுக் கொடுமைப்படுத்துகின்றீர்கள்?"— வார்த்தைகள் ஒன்றுக்கொன்று மோதித் தடம் புரண்டன.

அம்மா ஒன்றும் பேசாது அமைதியாக இருந்தாள். எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்து மரத்துப்போய்விட்ட மனம் இன்னும் ஆடி அசைந்து ஈடுகொடுக்கின்றது.

"பரமேஸ்! அழாதேம்மா, அழாதே! நான் அடித்து விட்டேன் என்று வருத்தப்படுகின்ருயாம்மா? யார் அடித்தது? யாராவது பிறத்தியாரா? உன் அக்காதானே? அழாதே பரமேஸ். அழாதே."

அவள் முகத்தை என் முன்ருனையால் துடைத்து, முதுகைத் தடவிக் கொடுத்தேன். குழந்தை போல் கேவிக் கேவி அழுதபடி இருந்தாள்.

"நீ, சாகின்றேன் என்று சொன்னல் எனக்கு எப்படியிருக்கும்? என் மனசு தாங்கவில்லை. என்னை மன்னித்து விடு. நான் அடித்தது கூடாதுதான். அழாதே!"

"அக்கா! உண்மையாய்த்தான் அக்கா நான் சொல்லுகின்றேன். என் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கின்றது. இந்த வேதனையை என்னல் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. செத்தால்தான் இது தீரும்."

"சீச்சீ! மடைச்சி மாதிரி அதையே வாய்ச் சொல்லாக சொல்லிக் கொண்டிராதே. நான் இருக்கின்றபோது நீ ஏன் வேதனைப்பட வேண்டும்."

"நீ என்னக்கா செய்வாய்? என்னுள் எரிந்துகொண்டிருக்கின்ற தீயை உன்னல் அணைக்க முடியுமா? ஒருகாலமும் அது உன்னல் முடியாதக்கா."

"... ... ...?"

"என்னை இப்படி அவர் ஏமாற்றுவார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை அக்கா. அவரது ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையும் அப்போது எனக்கு உரமேற்றிக் கொண்டிருந்தது. இப்போதுதான் அவை என்னைப் பலிகொள்வதற்காகக் கொட்டித் தீர்த்த ஆசை வார்த்தைகள் என்று புரிந்து கொள்ள முடிகின்றது. "ராசவேலுவுடன் கதைக்காதே, தொடர்பு வைக்காதே" என்று அம்மாகூட அப்போது என்னைக் கண்டித்தாள். நான் அம்மாவுக்குப் பொய் சொல்லி அம்மாவை ஏமாற்றினேன். கடைசியில்?"

"அவனுக்கு இப்படி என்று சொன்னுயா?"

"சொன்னேன். கருப்பச் சிதைவுக்கு ஏதோ மருந்து கொண்டுவந்து தரட்டுமா?" என்று கேட்டார். "அது எனக்கு வேண்டாம். வேண்டுமானல் என்னைக் கொல்லக் கூடிய நச்சு மருந்து ஏதாவது கொண்டுவந்து தா" என்றேன். அவருடைய நடிப்பு, வேஷமெல்லாம் அத்தோடு எனக்கு விளங்கிவிட்டன. நான் முதலில் அம்மாவிடம் எதுவும் சொல்லவில்லை. என்னைக் கைவிட்டுவிடாதீர்கள் என்று அவரை நாளும் பொழுதும் வேண்டினேன்."

"நீ சொன்னதற்கு என்ன சொன்னுன்?"

"பிறகு சில நாட்களாக அவரை என்னல் காணமுடியவில்லை. ஊரிலே இல்லையோ என்று எண்ணினேன். இதற்கிடையில் அம்மாவுக்கு விஷயம் தெரிந்துவிட்டது. நான் பயந்து போய், ஒன்றையும் மறைக்காமல் முதலில் இருந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன். ஊர் முழுக்க கதைக்க ஆரம்பித்துவிட்டார்கள். அம்மா போய் அவரின் தகப்பனேடு கதைத்தாவாம்."

"தகப்பன் என்ன சொன்னுராம்?"

"அதை ஏன் என்னிடம் கேட்கின்ருய்? என்னவோ எல்லாம் சொல்லக் கூடாத வார்த்தைகளால் தாறுமாருகப் பேசித் துரத்திஞராம். முருகப்பிள்ளையரின் மகளுக்கும் அவருக்கும் நாளை மறுநாள் கல்யாணம்."

"உனக்கு அவை பெரிய குடும்பம், பெரிய மனிதர் என்பதெல்லாம் முன்னுல் தெரியாதா? அவன் உன்னைக் கல்யாணம் செய்வான் என்று நீ எப்படி நம்புவாய்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவராகவே வலிய வந்து என்னுடன் பழகினர். எத்தனேயோ இடங்களில் இப்படி நடந்திருக்கு. நீ ஒன்றுக்கும் பயப்படாதே என்று கையடித்துச் சத்தியம் செய்தார் அக்கா. அப்படி நாங்கள் கல்யாணம் செய்துகொள்ள அவரது தகப்பன் சம்மதிக்காவிட்டால், ஊரை விட்டு வேறு எங்காவது ஓடிப் போவோம் என்றெல்லாம் சொன்னரக்கா. நானும் நம்பி விட்டேன்."

பொழுது நன்ருக இருட்டி விட்டது. விளக்கு ஏற்ற வேண்டும் என்ற எண்ணம்கூட யாருக்கும் ஏற்படவில்லே. அம்மா அதே கப்போடு கப்பாய் ஒட்டுக் கொடுத்தாற் போல் இருந்தாள்.

எத்தனே துன்பங்கள், எத்தனே குழப்பங்கள். வாழ்க்கை முழுவதும் இந்தப் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தால் இதன் முடிவுதான் எங்கே?

"பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்" என்னும் மூதுரை எவ்வளவு உண்மையானது?

பக்கத்து வீட்டுக் குழந்தை அழுது அடம்பிடித்துக் கொண்டிருந்தது. தாய் அதைப் போட்டு அடிக்கின்ருள். குழந்தை இன்னும் வீறிட்டு அழுகின்றது.

"சனியனே! நாயே! பிரம சத்திபோல என்னே ஏன் போட்டு வதைக்கின்ருய். துலேஞ்சு ஒழிஞ்சு போனலும் மனிதர் நிம்மதியாய் இருக்கலாம்." ஏதும் அறியாத அந்தச் சின்னஞ்சிறு குழந்தைக்குத் தாயின் அர்ச்சனே.

குழந்தையின் அழுகை ஓயவேயில்லே. அதையொட்டிப் புருஷனுக்கும் மனேவிக்குமிடையே வாய் வார்த்தைகள் பரிமாறப்படுகின்றன.

"ஐயோ! நான் செத்தொழிஞ்சு போகக் காலம் வராதாமே. என்னேக் கட்டையிலே வைச்சால்தான் உனக்குச் சந்தோஷம்" – அந்தத் தாயின் புலம்பல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது இந்த ஆரவாரத்தில் குழந்தை அழு வதையே நிறுத்திக்கொண்டது. அதன் அழுகுரல் கேட்க வில்லை.

எனது குழந்தைப் பருவமும் தோன்றி மறைகின்றது. எண்ணிலடங்காத துன்பமும் ஏக்கமும்—

"பரமேஸ்! எழுந்து போய் முகத்தைக் கழுவிக்கொள் ளம்மா. வீணுக்குக் கவலைப்பட்டு என்னம்மா பிரயோச னம்? எளியவர்களென்றால் இப்படித்தான். நாம் உயி ரோடு இருந்து இந்த சமூகத்தில் வாழவேண்டுமானல் இவை எல்லாவற்றையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மற்றும்படி கேள்வி-நியாயமென எதுவுமே நமக்கு இல்லை."

"எழும்பம்மா, எழும்பு கவலைப்பட்டு இனி என்னடி செய்கிறது?"

பரமேஸ் எழுந்து முகம் கழுவச் சென்றாள். நல்ல வேளை, வீட்டில் கிணறு இல்லாதது. உணர்ச்சிவசமாகிய இந்த நிலைக்கு அது எவ்வளவு உதவி?

பாவம், அவள்தான் என்ன செய்வாள்? ஏழையாய்ப் பிறந்தது குற்றம். அதிலும் பார்க்கப் பெண்ணுகப் பிறந் தது இன்னும் குற்றம். கூலிக்காரி, அவர்களைப் பொறுத்த வரையில் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வெறும் சடப் பொம்மை, அவளுக்கு உணர்ச்சியோ உள் ளமோ இருக்கக் கூடாது.

ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. காலாகாலத்தில் முறைப்படி கல்யாணம் நடந்தால் ஏன் இந்த நிலை ஏற்படு கின்றது? கல்யாணம் நடக்காதது யார் குற்றம்?

நான்தான் மரக்கட்டையாக என் உணர்ச்சிகளை— தாபங்களைக் கொலை செய்து கொண்டிருக்கின்றேன் என்றால், அவளும்—

மன அடக்கம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை நிகழ்ச்சிக்கு ஒப்பான ஒன்றுதான். இயற்கைக்கு விரோதமான செயல். இயற்கையோடு ஒட்டியே வயசும், அதற்குரிய பருவமும், அந்தப் பருவங்களுக்கு ஏற்ப எழுச்சிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அவற்றை மீறுவது?

அறநெறி— ஒழுக்கம்— வாழ்க்கை— எல்லாம் பிரச்சினை தான்.

மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி, நேரான வழியில் அமைப்பதற்குத்தான் இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம்.

அதற்காக ஒரு மனித உள்ளத்தையோ, உணர்ச்சியையோ கொலைசெய்ய வேண்டுமென்பதில்லையே!

இந்தக் கட்டுப்பாடுகளையும், அறநெறிகளையும் போற்றிக் காப்பாற்றுகின்ற சமூகம் இந்த ஒழுக்கக் கேட்டுக்குக் காரணமாயிருப்பவர்களுக்கு என்னதான் தண்டனையை ஏற்படுத்தியுள்ளது?

வாழ்நாள் முழுவதும், சீவிய பரியந்தம் வரை ஒரு பெண்ணுக்கு மட்டும் இயற்கை வழியான தண்டனையை, அவளது வாழ்க்கையைச் சிதைத்துச் சித்திரவதை செய்கின்றது. அவளோடு சம்பந்தப்பட்ட அந்த ஆண்? பரந்த கண்ணோட்டத்தில், அவனுக்கு எந்தத் தாக்கமுமில்லாத ஒரு முழு நிறைவு— அறுசுவை உண்டியை உண்டு, ஏப்பம் விடுகின்ற அந்த நிறைவு, உணர்விலும் பார்க்கக் கூடுதலான நிறைவு. தவறு செய்தவர்கள் இருவரும்.

காலம் காலமாக நிலைத்துவிட்ட நியதி. யாருக்குமே புரியாதது.

நாளை மறுநாள் அவனுக்குக் கல்யாணம்.

யாரும் ஏன் என்று கேட்க முடியாது. அது அவளது மனம். அவனைப் பொறுத்தது. அதிலும் நாம் கேட்கின்ற அளவுக்குக் கூடத் தகுதியற்ற அடிமைக் கூலிகள். அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்று நாம் ஏதாவது கேட்கப் போனால், அது அவர்களுக்கு வேடிக்கையாகவும், அதிசயமாகவும் இருக்கும்.

இப்படி எத்தனையோ நடக்கலாம். அது அவர்களுக்குச் சர்வ சாதாரணம். நாம் அதைப் பற்றி எதுவும் பேசக் கூடாது. அதுதான் நியதியும் அறநெறியும். அதை மீறுவதுதான் பெரிய விஷயம், ஒழுக்கவீனம்.

எல்லாமே பிரச்சினையாக இருந்தது. இந்தச் சமூகத்தைப் பொறுத்த வரையில் நாமே பிரச்சினைக்குரியவர்கள் தான்.

பூரணம் அக்கா இருந்திருந்தால்?

மனம் தன் ஆற்றாமையால், ஆதாரம் தேடி பலதையும் எண்ணிப் பார்க்கின்றது. பூரணம் அக்காவால்தான் இந்த நிலையில் என்ன செய்ய முடியும்? ஆனாலும் மனதுக்கு ஒரு வித திருப்தி. சொல்லி ஆறுதல் பெறுவதற்கு ஒரு சுமை தாங்கி.

பரமேஸ் சாப்பிடவேயில்லை. வலிந்து வற்புறுத்தியதன் பேரில், வெறுமனே சாப்பிடுவது போல் பாவனை செய்து விட்டு எழும்பி விட்டாள். இப்படி எத்தனை நாட்களோ?

என் இரத்த அணுக்களோடு சேர்ந்ததுதானே அவளது இரத்த அணுக்களும். அவளது துடிப்பு, அவளது வேதனை எல்லாம் சேர்ந்து என் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தன.

''இனி என்னம்மா செய்கிறது?''

''என்னை என்ன கேட்கிறாய்? நான் என்னத்தைச் சொல்ல?''

உண்மையில் அம்மா என்னத்தைச் சொல்வது? மன உளைச்சலின் வேகம் எதையும் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

''வேறு யாரையாவது கேட்டுக் கல்யாணம் செய்து வைத்தால்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரைக் கேட்கப் போகின்றாய்? யார் ஓமென்று வரப் போகின்றார்கள். ஊரில் எங்கும் பரவிவிட்டது. வெளியே தலைகாட்ட முடியவில்லை. இந்த நிலையில், எமது தகுதிக்குப் பொருத்தமான அன்றாடம் கூலிவேலை செய்து சீவிக்கின்ற ஒரு முடமோ, குருடோ தன்னிலும் ஓம் என்று வராது. அப்படித்தான் ஒரு முடம், குருடு அகப்பட்டாலும், அதுக்கு நாம் கண்ணை மூடிக்கொண்டு தள்ளிவிட்டால்? அழுது அழுது கண்ணீர் வடிக்கின்றபோதும் நாம் தானே கவலைப் பட வேணும்."

அம்மா இவ்வளவு தூரம் யோசித்துப் பேசுகின்றாளே என்று எண்ணி வியந்தேன். எப்படியும் தாய், தாய்தான். தாய்க்குப் பிள்ளை,பிள்ளைதான். என்னதான் நடக்கக் கூடாதது நடந்துவிட்டாலும் தாய்ப்பாசம் விட்டுப் போகாது.

இதயத்து நாடிகள் ஒவ்வொன்றும் துடித்துத் துடித்து வதை புரிந்தன. பயமும் கவலையும் சேர்ந்த வேகமான துடிப்பு. படுக்கவும் முடியவில்லை. எழுந்து உட்காரவும் முடியவில்லை. சுமையின் அழுக்கமான அழுத்தம், கண்களை மூடி மூடிப் பார்த்தேன். மூடிவிட்டால் இந்தச் சுமையில் இருந்து — அதன் அழுத்தமான தாக்கத்திலிருந்து தப்பி விடலாமென்ற எண்ணம்.

பரமேசும் தூங்க முடியாமல் அந்தரப்படுவது இருட்டிலும் நன்றாகத் தெரிந்தது. அவள் விடுகின்ற பெருமூச்சுக்கள் ஒவ்வொன்றும், பயங்கரமான அவல ஓசையாய் ஒலித்தன. அவளது அங்க அசைவுகள் ஒவ்வொன்றும் இருட்டிலும் நன்றாகத் தெரிந்தன.

ஏன் இத்தகைய தண்டனை...?

யாரைக் கேட்பது?

இளமைத் துடிப்பில் எத்தனை இன்பக் கனவுகளோடு அவனுடன் நடமாடி இருப்பாள். அந்த வேகத்தில் அவனைப் பற்றியோ அவனது போலி வேஷத்தைப் பற்றியோ எப் படித்தான்எண்ணிப் பார்த்திருக்க முடியும்? எதிர்ப்பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க முடியாத, புதிதான ஒரு வாழ்வு— எட்டாத ஒரு இன்பம் தனக்குக் கிடைக்கப் போகின்றதே என எண்ணி, எண்ணி இறுமாந்திருப்பாள். அந்த மயக்கத்தில் தன்னையே மறந்து, அறிவிழந்து—

''பரமேஸ்!''

''அக்கா!''

''வீணுக யோசித்து மனதை அலட்டிக் கொள்ளாமல் பேசாமல் படுத்துத் தூங்கு.''

''எப்படி அக்கா தூக்கம் வரும்?''

''நடந்தது நடந்துவிட்டது. இனி யோசித்துத்தான் என்னம்மா செய்கிறது?''

''தூக்கம் வரமாட்டேன் என்குது அக்கா.''

''கண்ணை மூடிக் கொண்டு ஒன்றையும் யோசிக்காமல் படுத்திருந்தால் தூக்கம் தானுகவே வந்துவிடும்.''

அவளது தூக்கத்திற்கு வழி சொல்லிக் கொடுக்கும் என்னுல் மட்டும், ஏன் அப்படித் தூங்க முடியவில்லை? என்னை அவள் கேட்கவில்லை. அவளுக்குத் தெரியும் இது போலி வார்த்தை என்று.

அவள் பேசாது படுத்திருந்தாள். தூங்கவில்லை என்று நன்ருகத் தெரிந்தது. இந்த வேதனை இன்னும் எத்தனை நாளுக்கோ? இந்தச் சுமை இறங்கும் வரை இந்த வேதனையையும் அனுபவிக்க வேண்டியதுதானே?

திருமண வீட்டிலிருந்து ஒலிபெருக்கியின் அலறல் அலை பாய்ந்து கொண்டிருந்தது. பெரிய இடம். கோலாகலமான திருமண வைபவம்.

ஒரு பெண்ணைக் கெடுத்து, அவளது வாழ்வைச் சூறையாடிவிட்டு, இன்னெரு பெண்ணைக் கைப்பிடித்து, அம்மி மிதித்து, அருந்ததி காட்டி— ஊரறிய, உலகறியக் கல்யாணம் என்ற பெயரில் செய்யப்படுகின்ற துரோக, நாச வேலைக்குப் பெரிய கோலாகல வைபவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிகள் பூமி அதிரும்படியாக முழங்கின. இப்போது ஒலிபெருக்கியின் 'டப்பாச்' சினிமாப் பாட்டுக்கள் நின்று போய், மேள வாத்திய ஓசை ஒலித்தது. மாப்பிள்ளை அழைப்பாக இருக்கவேண்டும்.

பரமேஸ் ஒரே அழுகையாக அழுதுகொண்டிருந்தாள். அவள் விடுகின்ற இந்தக் கண்ணீரைத் தாரையாக்கி, அங்கே இன்னொரு வாழ்வு உதயமாகிக் கொண்டிருந்தது. உதயமாகின்ற அந்தப் புதிய வாழ்வுக்குப் பெரியதொரு வரவேற்பு.

பரமேசுக்கு நான் சொல்லுகின்ற எந்த ஆறுதல் வார்த்தைகளும் பயன்படவில்லை. யாராலும் ஆறுதல் சொல்லி அணைக்க முடியாத துன்பம் அது. உயிருள்ள ஒவ்வொரு ஜீவனுக்கும் இருக்கின்ற துடிப்பு அது. சுதியற்றவர்களானாலும் அதுவும் விதிவிலக்கா?

''கண்ணன் தீராத விளையாட்டுப்பிள்ளை'' ஒலிபெருக்கியிலிருந்து திரும்பவும் இந்தப் பாடல் ஒலிக்கின்றது. ஒலிபெருக்கிக்காரன் என்ன நினைத்து இந்தப் பாடலை வைத்தானோ?

''பரமேஸ்! நீ இப்படி ஒரே அழுகையாக அழுது கொண்டிருந்தால் இதன் அர்த்தம் என்ன?''

''ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்?''

''நாங்கள் உன்னைத் தொந்தரவு செய்கின்றோமா?''

''அழுவதற்குங்கூட சுதந்திரம் இல்லையா?''

''உனக்கு எந்தச் சுதந்திரம் மறுக்கப்பட்டது பரமேஸ்? ஏன் இப்படியெல்லாம் பேசுகின்றாய்? உன் அளவு கடந்த சுதந்திரப் போக்கினால் ஏற்பட்ட பலாபலனை அனுபவித்துக் கொண்டுமா நீ இப்படிச் சொல்லுகின்றாய்?'' சொற்கள் தடம்புரண்டு, துன்ப வேகத்தில் ஆத்திரமும் விரக்தியுமாக மாறின.

அவள் எதுவும் பேசாதிருந்தாள். தன் போக்கின் சிந்தனை அலைகள் தோன்றித் தன் தவறை உணர்ந்து கொள்கின்றாளோ என்று எண்ணினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா கடைத்தெருவுக்குப் போயிருந்தாள். அடி மேல் அடி விழுகின்றபோதிலும் தன் கருமத்தைச் செய்து கொண்டிருக்கின்ற பக்குவம் அவளுக்கு.

''இப்படிச் செய்ய, எப்படித்தான் அக்கா, அவருக்கு மனம் துணிந்ததோ?''

''அதை இனி எண்ணி என்னம்மா பயன்?''

''யோசிக்காமலும் இருக்க முடியவில்லையே அக்கா.''

''இதை நாம் பாரதூரமாக எண்ணிக்கொள்ளாமல் எம்போன்றவர்களுக்கு இப்படி நேருவது சகஜம் என்று எண்ணிக்கொண்டால், வாழ்க்கை சுலபமாகவும், அமைதியாகவும், துன்பப்படுவதற்கு இடமின்றியும் கழிந்துகொண்டிருக்குமம்மா.''

''நான் சொன்னதற்காக நீ இப்படிச் சொல்லுகின்ருயா அக்கா? உன்னைத் தவிர, நானும் வேறு யாரிடம் அக்கா இவற்றைச் சொல்லி அழமுடியும்? நீயும் இப்படி வேண்டா வெறுப்பாகக் கதைத்துக் கொண்டால் நான் என்னக்கா செய்வது?''

''அடி அசடே! நான் இப்போது என்ன சொல்லி விட்டேன் என்று நீ அழுகின்ருய்? உன் சந்தோஷத்தில்; உன் துன்பத்தில் எனக்குப் பங்கு இல்லையா? உன் சந்தோஷம்தான் என் சந்தோஷம். உன் துன்பம்தான் எனக்கும் துன்பம். உனக்கில்லாத ஒன்றை, நான் அனுபவித்துச் சுய நலத்தோடு நடந்துகொண்டிருக்கின்றேனு? எங்கள் வாழ்க்கை இப்படியாகப் போய்விட்டது. நம்ம சக்திக்கு மேல் நாம் நினைக்கக்கூடாது; நம்ம சக்திக்கு மேல் நாம் ஆசைப்படக்கூடாது. அப்படி நினைப்பதோ, ஆசைப்படுவதோ தவறு. அந்தத் தவறுக்கு நாம் ஆளாகி விட்டுப் பிறகு துன்பப்படுவதால் என்ன பயன்? இது நமக்குச் சகஜமானது என்று எண்ணி, மனதை ஆற்றிக் கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை. நாம் அமைதியாக வாழவேண்டுமாயின் அப்படித்தான் எண்ணவேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் எதுவும் பேசாதிருந்தாள்.

''பரமேஸ்! நான் உன்னை ஒன்று கேட்கிறேன். சொல்லுகிறாயா?''

''என்னக்கா?''

''எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தத் தீராத துன்ப நிலையிலும், நீ உன் உயிருக்கோ அல்லது உன் வயிற்றில் வளர்ந்து கொண்டிருக்கின்ற சிசுவுக்கோ எந்தவிதமான ஆபத்தும் விளைவிக்கக்கூடிய முறையில் எண்ணவும் மாட்டேன், செய்யவும் மாட்டேன் என்று எனக்குச் சத்தியம் செய்து தரவேண்டும்?''

''அக்கா!''

''உண்மையாகத்தானம்மா. நீ எனக்குச் சத்தியம் செய்து தரவேண்டும். உன்னில் வளர்ந்து கொண்டிருக்கின்ற சிசுவைப்பற்றி நீ எதுவும் யோசிக்காதே. அது என்னுடையது. என் உயிரின் கடைசி அணு இருக்கின்ற வரைக்கும் நீ எதற்குமே கண்கலங்க வேண்டாம். நீ கண் கலங்கினால் என்னால் பொறுக்க முடியாது. உன் நிலை குறித்து நான் படும் துன்பம் உனக்குத் தெரியுமா? என்னம்மா செய்வது? எங்கள் நிலை இது. எங்களுக்கு நேருகின்ற ஒவ்வொன்றையும், நாம் முகம் சுளிக்காமல் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். அதுதான் நியதி. நாம் கண்ணீர் விட்டுக் கதறி அழுவதோ, வேதனைப்பட்டுக்கொண்டு வாழ் நாளைக் கழிப்பதோ எமது துன்பத்தையும், வேதனையையும் இன்னும் இன்னும் பெருக்கிக்கொள்வதைத் தவிர வேறில்லை.''

''அக்கா!''

''நீ முதலில் சத்தியம் செய்து தாம்மா. அப்போது தான் என்னால் அமைதியாக இருக்கமுடியும்.''

''நான் அப்படி ஏதும் செய்வேன் என்று நீ நம்புகின்றாயா அக்கா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதில் நான் நம்புவதிலோ, நம்பாமல் இருப்பதிலோ ஒன்றுமில்லையம்மா. நானும் பெண்தான். பலவீனம் உனக்கோ எனக்கோ விதிவிலக்கல்ல.''

''நீ நினைப்பதுபோல் நான் அப்படியொன்றும் செய்ய மாட்டேன் அக்கா. சத்தியமாகச் சொல்லுகின்றேன்.''

என் மனத்தில் பூரணத்துவம் பெற்ற ஓர் அமைதி பிறந்தது. அவள் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு விலகிச்சென்றாள். இந்த வாய்ச்சொல்லுக்கு இத்தனை மதிப்பா? இதை அவள் மீறக்கூடாது என்று கட்டுப்பாடு இல்லை. ஆனாலும் ஏதோ ஒரு நம்பிக்கை. இந்த நம்பிக்கை என்ற ஒன்று இல்லாவிட்டால் வாழ்க்கைக்கு அர்த்தமே இருக்கமுடியாது.

அம்மா கடையிலிருந்து திரும்பி வந்தாள்.

''ஊருக்குள்ளே வெளிக்கிட முடியவில்லை'' — நான் அம்மாவைப் பார்த்தேன். பரமேசும் நிமிர்ந்து பார்த்தாள்.

''எல்லாம் நம்ம தலைவிதிதானே''—தனக்கு ஆறுதலும் பெற்றுக்கொண்டாள்.

★

நாட்கள் தம்பாட்டில் ஓடிக்கொண்டிருந்தன. ஒரே போக்கில் சலிப்பும், வெறுப்பும், சோம்பலும், விரக்தியும் நிரம்பியதாக, கால ஓட்டத்துக்கு ஈடு கொடுத்துக் கொண்டே நாட்களைக் கழிக்கவேண்டியிருந்தது.

கமலாஜனி கடிதம் எழுதியிருந்தாள். பள்ளிக்கூடம் லீவுவிட்டு, வீட்டிலிருந்தே எழுதியிருந்தாள். ''என்ன விசேஷம்? ஏன் அப்படி அவசரமாக வரச்சொல்லி எழுதி யிருந்தார்கள்?'' என்று கேட்டு எழுதியிருந்தாள். ஒருவேளை? என்று பெரியதொரு கேள்விக்குறியோடு, அதை மையால் நன்றாக விளக்கித் தன் சந்தோஷத்தையும் அதன்மூலம் குறிப்பிட்டிருந்தாள். அவளுக்கு நான் என்ன பதிலை எழுதுவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ் சிறிது சிறிதாக மன உற்சாகம் பெற்றுக் கொண்டிருப்பதுபோல் எனக்குத் தோன்றியது. வெளிப் படைக்குத்தான் அப்படி என்று எண்ணினேன். உள்ளே வேதனை வேதனைதான். என்னதான் இருந்தாலும், ஒரு பெண்ணுல் அதற்குரிய அந்தச் சின்னத்தையும் சுமந்து கொண்டு, சுலபமாக மறந்துவிடக்கூடிய ஒன்ரு? அந்த வேதனை வாழ்நாள் முழுவதுமே இருந்தே தீரும். அது தவிர்க்க முடியாதது.

இந்த அளவுக்கு வெளிப்படைக்காவது உற்சாகமாக இருக்கின்ருளே என்று எண்ணிச் சந்தோஷப்பட்டேன். எமது சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றுக்கு நாம் வேறு எப்படித்தான் பரிகாரம் தேடிக்கொள்ள முடியும்?—

இதுதான் நிலைமை!

இதுதான் வாழ்க்கை! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

மூன்று வார விடுமுறைக்குப் பின்னர் பள்ளிக்கூடம் தொடங்கியது. பள்ளிக்கூடம் தொடங்கியபோது பத்மா வரவில்லை. ஒருவார லீவு போட்டதாகத் தெரிந்தது. அவளுக்குக் கல்யாணப் பதிவுமுடிந்துவிட்டதாகக் கமலாஜனி சொன்னாள்.

விடுமுறைக் காலத்தில், சிவபாதம் ஊருக்குப் போகாமல் வெளியிலே எங்கேயோ சாப்பிட்டுக்கொண்டு, பள்ளிக் கூடத்திலேயே நின்றிருந்தார்.

இந்த மூன்று வார விடுமுறைக்குள் தருமபுரத்தில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. எல்லாம் பார்த்து வியக்கத்தக்க மாற்றங்கள்தான். முகாம்களில் ஒருசில குடும்பங்களைத் தவிர, ஏனையோர் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த காணிகளில், சிறுசிறு இடத்தை நன்ருக வெட்டித் துப்புரவாக்கி, வீடுகள் என்ற பெயரில் சிறு சிறு குடிசைகளை அமைத்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு சிறிய கடைகளும் புதிதாகத் தோன்றியிருந்தன.

சிவபாதம் சனங்களிடையே மிகவும் பிரபல்யமாக இருந்தார். பள்ளிக்கூடம் நடந்துகொண்டிருக்கின்ற நேரங் களிலும் சிலர் அவரிடம் வந்து போய்க்கொண்டிருந்தனர்.

பள்ளிக்கூடம் தொடங்கிய அடுத்தநாள், ஆற்றங் கரைக் கோவிலில் ஒரு திருவிழா நடந்தது. செலவு என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும்படியாக அதிகமில்லாமல், மிக மிக எளிமையான முறையில் மனதைக் கவரக்கூடியதாக இருந்தது.

சிலம்படி, மல்யுத்தம் என்று அவர்கள் செய்து காட்டிய விளையாட்டுக்கள் பார்ப்பதற்கு அற்புதமாகவும் இரம்மியமாகவும் இருந்தன. சில சில விநோத வேடங்களிலும் தோன்றிச் சனங்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தார்கள்.

எல்லாவற்றிலும் மேலாகச் சரஸ்வதியின் தகப்பன் இராமையாவும் அவற்றில் கலந்துகொண்டு, உற்சாகமாகக் காணப்பட்டதுதான், எனக்கு ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருந்தது.

கமலாஜனியும் இராமையாவைப் பார்த்து வியப்படைந்தாள். உண்மையில், அவனது அதிர்ச்சியிலிருந்து மீட்சி பெற்றுவிட்டானோ, அல்லது அவற்றிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்வதற்காகத்தான் இப்படிக் கலந்து கொள்கிறானோ என்று எண்ணினேன்.

சிவபாதம் இவற்றை நடத்துவதில் முழு மூச்சாக நின்றார். பார்க்கப்போனால் அவரது ஏற்பாட்டின் பேரில் தான் எல்லாம் நடைபெறுகின்றதுபோல் தோன்றியது.

என்றால், முன்னர்போல் பள்ளிக்கூடத்திலோ அல்லது பள்ளிக்கூடம் விட்ட பிற்பாடோ உற்சாகமாக இருக்க முடியவில்லை.

எப்படித்தான் உற்சாகம் ஏற்படுவது? நானே ஒரு தனி உலகமாக, எனது உலகமே துன்பம் நிறைந்த வெறும் பாலையாக இருக்கின்றபோது, அதிலிருந்து மீட்சிபெற்று மற்றவர்களுடன்— பொது உலகத்துடன் கலக்க முடிந்தால் தானே உற்சாகத்திற்கு வழிபிறக்கும். எனது எண்ணம், சிந்தனைகள் யாவும் வீட்டிலும், பரமேசிடமுமே இருந்தன.

இந்தச் சின்ன வயசில், மலர் மலராகமுன், வண்டுக்குப் பலியாகி, வாழ்க்கையை வெறுமையாக்கிக்கொண்டு ஏக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் அவள் இருக்க, எனக்குமட்டும் சந்தோஷம் எங்கிருந்துதான் வருவது?

அவளுக்கு நேர்ந்த இந்த நிலை, உலகத்தில் எந்தவொரு பெண்ணுக்குமே நேர வேண்டாம். நேரவும் கூடாதென்று அடிக்கடி எண்ணிக்கொள்வேன்.

சிவபாதத்தைப் பற்றிய அக்கறையோ, அவரோடு கதைக்க வேண்டுமென்ற ஆவலோ இப்போது எனக்கில்லை. அவருடன் பேசுவதில், அவரைப்பற்றி எண்ணி அக்கறை கொள்வதில் கிடைக்கின்ற மகிழ்ச்சி, இன்பம் எல்லாம் செத்து மடிந்துவிட்டன என்றே சொல்லவேண்டும்.

எனது இந்தத் தனி உலகத்தில் எனது அபிலாஷைகளுக்கோ, உணர்வுப் பெருக்கங்களுக்கோ இனிமேல் இடமிருக்க முடியாது.

நான் சோர்ந்து போயிருக்கின்ற போதெல்லாம் கமலாஜனி, என்னைக் குடைந்து, குடைந்து "என்ன கனகம்? என்ன உனக்கு நேர்ந்தது? ஏன் இப்படி இருக்கின்றாய்" என்று கேட்பாள். அவள் என்னை ஏதாவது கேட்பதே எனக்குத் தொல்லையாக இருக்கும். அவளது கேள்விகளுக்கு நான் என்ன பதிலைச் சொல்வது?

சிவபாதத்திற்கும் என் போக்கு வித்தியாசமாகத் தோன்றியிருக்க வேண்டும். நேரடியாக என்னை அவர் எதுவும் கேட்காதபோதிலும், அவர், என்னைக் குறிப்பாகப் பார்க்கும் பார்வையிலிருந்து நான் அதை உணரக்கூடியதாக இருந்தது.

வகுப்பில், பிள்ளைகளுடன் ஒன்றி, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தக்கபடி பதில் சொல்லவோ, முறையாகப் பாடம் சொல்லிக் கொடுக்கவோ முடியாமல், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்பாட்டுக்கு என் உணர்ச்சி வேகத்துடன் போராடிக் கொண்டிருப்பேன். குழந்தைகளுக்கு நான் செய்கின்ற இந்தத் துரோகத்தை, நன்றாக உணர்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்கூட என்னுல் என் போக்கை மாற்றிக்கொள்ள முடியா திருந்தது.

இருந்தும்? நான் பலவீனமானவள். பலவீனமான எனது மனித உருவத்தை வெல்ல முடியாதவள்.

என்னைத் துரத்திவரும் இந்தத் துன்பங்களுக்கு எதிர் அடி கொடுக்கும் வலிமை அற்றுப்போய், இவ்வளவு கோர மாய், என்னைப் படைத்தவன் ஏன் தண்டித்துக் கொண் டிருக்கின்றுன் என்று, அர்த்தமற்ற ஒருவகையில் அர்த்த மிருப்பதுபோல், இல்லாத சிந்தனைகளில் என்னையே மறந்து மணிக்கணக்காய் மூழ்கியிருப்பேன். அப்படிச் சிந் தித்துக்கொண்டிருப்பதிலேயே ஒருவித சுகம் இருப்பது போல் எனக்குத் தோன்றியது.

என் மனம் அடிக்கடி இருளையே நாடிக்கொண்டிருந் தது. அந்த இருளில் தனிமையாக இருந்து சிந்திப்பதில், அளவிட முடியாத சுகம் இருப்பதுபோன்ற ஒருவித உணர்வு. விபரீதமான மனப்போக்குத்தான்.

எப்படியோ, என் ஒவ்வொருநாளும் கழிந்து கொண் டிருக்கின்றது என்பதைத் தவிர, என்னுள் நான் வேறு எதையுமே காணமுடியாது. காணவும் முயல்வதில்லை. வெறுப்பாய்— விரக்தியாய் — ஏனோ தானோ என்ற பாவத் தில், என்னை நான் அழித்துக்கொண்டிருக்கின்றேன் என்பது தான் உண்மை.

பூரணம் அக்கா இருந்திருந்தால் எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்திருக்கும். அவருக்கு மனம்விட்டு எல்லா வற்றையும் சொல்லி ஆறுதல் பெற முயன்றிருப்பேன். இப்போதுநான் யாருக்குச் சொல்வது?

பத்மாவின் லீவு முடிந்து அவளும் வந்து சேர்ந்தாள். வந்ததும் வராததுமாய், தான் கல்யாணம் கட்டிக்கொள் ளப் போகிறவனைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. கன விலும் நனவிலும் அவளுக்கு அவனைப் பற்றிய எண்ணம் தான். பதிவு நடந்தபோது, அவன் தன்னைப் பார்த்த பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையில் இருந்து பின் நடந்த, நடந்துகொண்டிருக்கின்ற ஒவ்வொன்றைப் பற்றியும் மணிக்கணக்காகக் கதைத்துக் கொண்டிருப்பாள். சுந்தரமூர்த்திக்கும் கூட அவற்றைச் சொல்லிச் சொல்லிப் பெருமிதமடைவாள்.

அவளது அந்தப் பேச்சுக்களில் நானும் ஈடுபட்டு, அவள் என்ன சொல்லப் போகிறுள் என்று, அவளது வாயையே பார்த்துக் கொண்டிருப்பேன். அவற்றைக் கேட்பதில் ஏதோ ஓர் இன்பம்.

★

பகல் சாப்பாடானதும், அந்தக் களைப்போடு களைப்பாக பத்மாவும், கமலாஜனியும் படுத்துத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். எவ்வளவுதான் உடம்பு களைத்துப்போய் இருந்தபோதிலும், என்னுல் படுத்து உறங்க முடியாதிருந்தது. பேசாமல் சிறிது நேரம்வரை படுத்திருந்து பார்த்தேன். வெறுப்பாகவும் வேதனையாகவும் இருந்தது. பத்மாவும், கமலாஜனியும் உறங்கிவிட்டமையால் பொழுது போவதற்கு வழியில்லாமல், வெளி விறுந்தையில் வந்து நின்றேன்.

இப்போது முகாம்களில் முன்பிருந்த கலகலப்பு அற்றுப்போயிருந்தது. அநேகமாக எல்லோரும் முகாம்களை விட்டு வெளியேறிவிட்டார்கள். தத்தம் காணிகளைத் துப்புரவாக்கியும், அவற்றில் சிறு தானியங்களையும், பயிர் கொடி வகைகளையும் உண்டாக்கியும், முன்பிருந்த பிரேதக் களை அற்றுப்போய் ஜீவகளையோடு மக்கள் காணப்பட்டார்கள். ஓ! அவர்களுக்கு இது ஒரு புதுயுகம்தான். வீதிகளில் எப்போதும் மக்களின் ஆரவாரமும் சிரிப்பொலியும் கலந்து அவர்களது புதுவாழ்வைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

இடைக்கிடை பக்கத்துக் காடுகளிலிருந்து மரங்களை வெட்டுகின்ற ஓசையும், அவை பேரிரைச்சலோடு சரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுகின்ற ஓசைகளும் கேட்டுக்கொண்டிருந்தன. அவை விழுகின்றதால் ஏற்படுகின்ற அந்தக் காட்டு மணம், மனத்துக்கு இதமாகவும், இரம்மியமாகவும் இருந்தது.

நின்று கால்கள் உளைச்சலெடுத்தமையால் பள்ளிக் கூடத்துக்குள் சென்று எனது வகுப்பில் உட்கார்ந்திருந்தேன்.

எனக்குப் பின்னால் காலரவம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். சிவபாதம் வந்துகொண்டிருந்தார். அவர் போக்கில் அக்கறையற்றவள் மாதிரி என்பாட்டுக்குப் பேசாதிருந்தேன். அவர் வந்து எனக்கு முன்னால் மேசையோடு இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

நிமிர்ந்து அவரைப் பார்த்தேன். அவரும் என்னைக் கூர்ந்து கவனித்தார். இருவரும் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. அவரது பார்வை என் கண்களுக்கு ஊடாக ஊடுருவிச் சென்று, என்னுள் எதையோ ஆராய்வது போலிருந்தது. அந்தப் பார்வையைத் தாங்கிக் கொள்ளச் சக்தியற்று எனது பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டேன். அப்படியும் அவர், தனது அந்தப் பார்வையை மீட்டுக்கொள்ளவேயில்லை. எனக்கு ஏனோ திகிலாக இருந்தது. மற்றவர்களைக் குறித்து இலேசான ஒரு பயமும் மனதில் தோன்றிக்கொண்டிருந்தது. சிவபாதத்தின் இன்றைய இந்தப் போக்கை என்னால் புரிந்துகொள்ள முடியாதபடி விசித்திரமாக இருந்தது.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்றேன்.

''ஒன்றுமில்லை''—அவர் குரல் நடுங்கியது.

என்னிலிருந்து தன் பார்வையை மீட்டுச் சிறிதுநேரம் வரை ஏதோ யோசித்துக்கொண்டிருந்தார்.

என் மனச்சாட்சி என்னைக் குத்திக்கொண்டிருந்தது. கடந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் முள்ளின் மேலே இருப்பதுபோன்ற ஒருவித உணர்வு என்னை ஆட்டிக்கொண்டிருந்தது. சிவபாதத்தைப் பற்றிய அக்கறையோ என்னவோ எனக்குப் பெரிதாகப் படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இடத்தைவிட்டுப் போவதற்காகப் பேசாது எழுந்துநின்றேன்.

''போகப்போகிறீர்களா?''

''ஆமாம். போய் படுத்துக்கொள்ளப் போகின்றேன். அலுப்பாக இருக்கின்றது.'' மனம் அறியப் பெரியதொரு பொய்யைக் கவர்ச்சியான பூச்சுப் பூசிச் சொன்னேன்.

''இல்லை, நீங்கள் இருங்கள். வேண்டுமானால் நான் போகின்றேன்.''—அவரது குரல் இளகிச் சோர்ந்துபோய் இருந்தது.

''அப்படி ஒன்றுமில்லை.''

''உட்காருங்கள். உங்களுடன் சிறிது கதைக்க வேண்டியிருக்கின்றது.''

கேள்விக்குறியுடன் அவரைப் பார்த்தேன். என்னையோ என் முகக் குறிப்பையோ அவர் கவனிக்காது, எங்கோ பார்த்தபடி இருந்தார். பூரணம் அக்காவைப்பற்றி ஏதாவது கேட்கப் போகின்றாரோ என்று எண்ணிக்கொண்டு பேசாதிருந்தேன்.

''மனத்துக்குள் வைத்துக்கொண்டு, தன்பாட்டுக்கு வீணே யோசித்துக்கொண்டிருப்பதில் எதுவித பிரயோசனமும் இல்லை. எனக்குச் சுற்றி வளைத்து எதையும் பேசத் தெரியாது. நான் நினைப்பதை நேரடியாகவே கேட்கின்றேன். தவறாக இருந்தால், மன்னித்து மறந்துவிடுங்கள்,''

''சொல்லுங்கள்.''

எனக்கு இப்போது ஒரு பெண் துணை வேண்டும்போல் தோன்றுகின்றது. நான் உங்களை மனதார நேசிக்கின்றேன். உங்களைவிட, என் மனத்துக்குப் பிடித்தமான ஒரு பெண் எனக்குக் கிடைப்பாள் என்று நான் நம்பவில்லை. நான் உங்களை முறைப்படி கல்யாணம் செய்துகொள்ளலாமென்று மனதார விரும்புகின்றேன்.''

இப்படி அவர் கேட்பார் என்று, நான் ஒருபோதுமே அவரிடமிருந்து எதிர்பார்த்ததில்லை. நெஞ்சம் குமிறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு சாய்வு மேசையில் தலையை வைத்துத் தாக்குப் பிடித்துக்கொண்டிருந்தேன். உலகமே கன வேகத்தில் விசையாகச் சுழல்வது போலிருந்தது. நிமிர்ந்து அவரைப் பார்த்தேன். அவர், என்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி இருந்தார்.

நெஞ்சத்தின் குமுறல்கள் ஒருங்கு சேர்ந்து வெடித்துச் சிதறின. எவ்வளவோ வலிமையோடு முயன்றும் அடக்கிக் கொள்ள முடியவில்லை. அடக்குமுறையையும் மீறிப் பீறிட்டுக்கொண்டு, உரத்த சத்தத்தோடு வெளியாகிய விம்மலை அடக்கியும், அடக்க முடியாமலுமாய், அந்த இடத்தை விட்டு எழுந்தபோது, தடுமாற்றத்தில் தடுக்குப்பட்டு, வாங்கோடு அடிபட்டுக்கொண்டு அறைக்குள் ஓடினேன்.

அடக்கி அடக்கி வைத்திருந்த மனப் பாரமெல்லாம் வெடித்து வெடித்துச் சிதறிக் கண்ணீர் வெள்ளமாக ஓடிக் கொண்டிருந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, கண்ணீர் விட்டபடி குப்புறப் படுத்திருந்தேன். வாய்விட்டு அழுது மனப்பாரத்தைத் தீர்த்துக்கொள்வதற்கும் வழியில்லை—சுதந்திரமில்லை?

''கனகம்;''

படுத்திருந்தபடியே முகத்தைத் திருப்பி நிமிர்ந்து பார்த்தேன். அறை வாசலில் சிவபாதம் நின்றுகொண்டிருந்தார். அவர் முகத்தை நேருக்குநேர் பார்க்கின்ற தைரியமற்று, அந்த முகத்தில் கோடுகட்டியிருக்கும் ஏக்கத்தைக் கண்கொண்டு பார்க்கமுடியாமல் திரும்பவும் தலையணையோடு முகத்தைப் புதைத்துக்கொண்டு உரத்த சத்தத்தில் விம்மி விம்மி அழுதேன்.

கமலாஜனி திடுக்கிட்டு எழும்பித் தூக்கக் கலக்கத்தோடு, கண்களைத் துடைத்தபடி அவரையும் என்னையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அவர், வாசலைவிட்டு எப்போது போனார் என்பதையே நான் உணர்ந்துகொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் படுத்திருக்கவும் முடியவில்லை. எழுந்திருக்கவும் முடியவில்லை. முள்ளில் படுத்திருப்பது போன்ற உணர்வு. நெஞ்சைச் கூரிய கல்லால் குத்திக் கிழிக்கவேண்டும் போன்ற அமுக்கம்.

''என்ன கனகம், என்ன நடந்தது?'' கமலாஜனி கேட்டாள்.

என்ன நடந்தது? என்னத்தை நான் அவளுக்குச் சொல்ல? என் கண்ணீர் அவளுக்குப் பதில் சொல்லியிருக்குமோ, என்னவோ? அவள் மேற்கொண்டு என்னை எதுவும் கேட்கவில்லை.

மாலையில் தேநீர் வேளையின் போது சிவபாதத்தைப் பார்த்தேன். அவரைக் காணவில்லை. இனம் புரியாத பயம், கலவரம், வேதனை எல்லாமாகச் சேர்ந்து என்னை ஆட்டிக் கொண்டிருந்தன.

''உலாவப் போகின்றோம், வருகின்றாயா?'' என்றாள் கமலாஜனி.

நான் வரவில்லை என்றதும் அவளும் பத்மாவும் மாத்திரம் வெளிக் கிளம்பினார்கள். நான் திரும்பவும் படுத்திருந்தேன். அதைத் தவிர வேறு வழியில்லை.

என்னைப் பொறுத்த வரையில், நான் அதிர்ஷ்டமற்றவள்தான். எவ்வளவுதான் முயன்றாலும் இந்த வாழ்க்கையை நான் அனுபவிக்க முடியாது. அதற்கும் எனக்கும் மிகமிக நீண்டதூரம். மனித இனத்திலிருந்து வேறுபட்ட ஒரு பிரகிருதி நான்.

மற்றும் மனிதர்களில் உள்ளது மாதிரித்தான், எனது உள்ளமும், எனது ஆவலும், உணர்ச்சியும். இருந்தும் நான் எதையும் அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவளாக— தகுதியற்றவளாக ஆக்கப்பட்டுள்ளேன்.

என்னுள் மோதிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இந்த அலை, எப்போது ஓயும்? இப்படியே காலம் முழுவதும் ஒரே கொந்தளிப்பாகத்தான் இருக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்தேன். பின் உடம்பை— முழு உருவத்தையுமே பார்த்தேன். இந்த உடை, இந்த அலங்காரம் எல்லாம் வெறும் ஏமாற்று வித்தை.

எல்லாவற்றிலுமே வெறுப்பாக இருந்தது. எல்லாம் வெறும் முள். பரமேஸ்? அவளில் உற்பவித்துக் கொண்டிருக்கும் அந்தச் சிசு?

நான் இந்தப் பந்தங்களிலிருந்து விடுபட்டு எங்கும் ஓடிவிட முடியாது. பிணைப்பற்ற பிணைப்பாய், பாசமில்லாத பாசமாய் இவை என்னோடு பிணைக்கப்பட்டு விட்டன.

''நீ நம்புகின்றாயா அக்கா, நான் அப்படியேதும் செய்வேன் என்று?''

''பரமேஸ்!''

இந்த உலகத்தில் இதன் நியதியான இன்ப துன்பங்களின் மத்தியில் நாங்களும் வாழத்தான் வேண்டும். எங்கள் வாழ்வும் ஒரு நியதி. காலமும் விதியும் எங்கள் வாழ்க்கையை எப்படியாவது அமைக்கட்டும். அல்லது ஒரேயடியாக சிதறடித்துச் சின்னபின்னமாக்கட்டும்.

நாம் பலமற்றவர்கள்.

✶

நன்றாக இருட்டிய பிற்பாடுதான் சிவபாதம் வந்தார்.

பத்மாவும், கமலாஜனியும் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தனர். என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை.

''என்ன கனகத்துக்கு?''— பத்மா, கமலாஜனியைக் கேட்பது எனக்குக் கேட்டது.

''தெரியவில்லை. ஏதாவது சுகவீனமாக இருக்கும்'' கமலாஜனியின் இந்தப் பதிலினால் அவள் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன கனகம், ஏதாவது சுகமில்லையா?'' என்ருள்.

''ம்''

''காப்பி வைத்துத் தரட்டுமா?''

''வேண்டாம்.''

அவள் போய்விட்டாள். எனது போக்கு அவளுக்கு எரிச்சலாக இருந்திருக்கும். அவள் உலகமும் என் உலகமும் தனித்தனியானவை. வெவ்வேறு துருவங்கள்.

நான் எழுந்து வெளியே வந்தேன். தனது வகுப்பில் குப்பி விளக்குக்கு முன்ஞல் ஏதோ ஒரு புத்தகத்தையும் கையில் வைத்துக் கொண்டு சிவபாதம் உட்கார்ந்திருந்தார்.

விடுதியை அடுத்திருந்த விருந்தையில் தலைமை ஆசிரியரும் சுந்தரமூர்த்தியும் ஏதோ சமயவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அதையிட்டு இருவருக்கிடையேயும் தர்க்கம் நடந்து கொண்டிருந்தது. அது அவர்களது தனி உலகம். ஆத்மீக விசாரத்தில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆன்மா, பரமாத்மா, முக்திநிலை— இப்படிப் பல சொற்கள் அவர்களது வாதங்களின் போது தாராளமாக உபயோகிக்கப்பட்டன.

சிறிது நேரம் வரை வெளி விருந்தையில் நின்றுகொண்டிருந்தேன். என் கண்கள் சிவபாதத்தின் மேலேயே குத்திட்டுப்போய் நின்றன. அவர் ஒரே பார்வைதான். எங்கோ வெறித்து நிலைத்துப் போன அந்தப் பார்வை வேறு பக்கம் திரும்பவேயில்லை. அவரது அந்தப் பார்வைக்கு ஊடாகத் தென்படும் அந்த உலகம்— அங்கே ஒரே ஒரு பொருள்— எல்லாம் எனக்கு முன்ஞல் நிழலுருவாய்த் தோன்றின.

சிவபாதம் என்னைக் காதலிக்கின்ருர். அதஞல் துன்பப்படுகின்ருர்.

அவரது பார்வை திரும்பியது. என்னைப் பார்த்தார். ஏக்கம் நிறைந்த அந்தப் பார்வை நெடுநேரம் வரை நிலைக்கவில்லை. நெற்றியைக் கைகளால் அழுத்தியபடி, மேசையில் தலையை முண்டுகொடுத்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் துன்பப்படுவதைப் பார்க்கப் பார்க்க என்னால் பொறுக்க முடியாதிருந்தது. வேதனை நெஞ்சைப் பிளந்து, நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது.

இந்த நிலையில், சிறிதளவாவது என்னால் அவருக்கு ஆறுதலளிக்க முடிந்தால்?

நான் அவர் அருகே சென்றேன். என் கால் அரவம் கேட்டுத் தலையை உயர்த்தி என்னைப் பார்த்தார், நேருக்கு நேராக அவர் பார்வையைச் சந்தித்தபோது, என்னால் பொங்கிவந்த துயரத்தை அடக்கிக் கொள்ள முடியாதிருந்தது. குழந்தைபோல் பொருமிப் பொருமி அழுதேன். சிறுபிள்ளைத்தனமானதுதான். இருந்தும் உணர்ச்சி யாருக்காவது சரி உணர்ச்சிதானே.

''கனகம், நீங்கள் ஏன் அழவேண்டும். தயவுசெய்து அழாதீர்கள். நான் கேட்டேன். உங்களுக்கு விருப்பமில்லை. அவ்வளவுதானே. நாம் நினைப்பது போல் எல்லாம் நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது நமது பலவீனம். நாம் மனிதர்கள் என்ற முறையில் அந்த பலவீனத்தால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்.

''நீங்கள் நினைத்தால் என்னை மறந்துவிட முடியாதா?''

அவர் என்னைக் கூர்ந்து பார்த்தார்.

''என்ன செய்வது மறந்துவிடவேண்டியிருந்தால், மறந்துவிடத்தானே வேண்டும். சில நாட்களுக்குக் கஷ்டமும் துன்பமுமாயிருக்கலாம். அதற்காக நாள் முழுவதும் அதையே நினைத்துத் துன்பப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? ஆனால் ஒன்று. நீ ஏன் எதுவும் பேசாமல் எழும்பி ஓடினாய்? ஏன் அழுகிறாய்? என்பதுதான் எனக்குப்புரியவில்லை. அதுதான் எனக்கு மிகுந்த துன்பமாக இருக்கின்றது.''

''ம்— நான் என்ன செய்ய முடியும்? நான் பிறக்கும் போதே என்னோடு கூட துரதிர்ஷ்டமும் சேர்ந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒரு துர்க்கிரி. எனக்கு வேண்டியவை எல்லாம் என்னை அணுகி விட்டுத் தூரப்போய்விடுகின்றன. அவை எனக்குக் கிடைப்பதில்லை. நான் உங்களைக் காதலித்தேன். இது உங்களுக்குச் சிலவேளை குழப்பமாக இருக்கலாம். உண்மையில் நான் உங்களை என் மனதார விரும்பினேன். நீங்கள் என்னோடு பேசுகின்ற ஒவ்வொரு சொல்லுக்காகவும், அந்த ஒவ்வொரு விநாடிக்காகவும் நான் ஏங்கி ஏங்கித் துடித்தேன். அந்த எனது ஏக்கத்திற்கும், அபிலாஷைகளுக்கும் எதுவித அர்த்தமுமில்லாதபடி என் ஒரே ஒரு அருமைத் தங்கை, ஒருத்தனை நம்பி மோசம் போய்விட்டாள். அவன் அவளை ஏமாற்றிக் கெடுத்து விட்டு இன்னொருத்தியை மணந்து கொண்டான். அவளுக்கு நான்தான் ஆதாரம். எனக்கு அவள். எங்கள் குடும்பமே சீர்கெட்டு அழிந்துவிட்டது. நாம் துன்பத்திலேதான் பிறந்தோம். துன்பத்திலேதான் வளர்ந்தோம். சாகும் வரை துன்பத்திலேதான் வாழ்வைக் கழிக்கவேண்டுமென்றிருக்கின்றது. ஒரே ஒரு ஆண் சகோதரனாயிருந்த என் அண்ணன், அதன் பின் என் அப்பா எல்லாம், முடிந்து, நானும், பரமேசும், அம்மாவும்தான் எஞ்சியிருப்பது. என்னைச் சூழ்ந்துகொள்கின்ற இன்பங்கள் யாவும் எனக்கு முன்னால் கண்ணாம்பூச்சி விளையாடிவிட்டுத் தூர ஓடுகின்றன. என்னைப் பற்றி உங்களுக்குச் சொல்ல என்று ஆரம்பித்தால், முடிவில்லாமலே சொல்லிக்கொண்டிருக்கலாம். எல்லாமாகச் சேர்த்து இப்போதைய எனது நிலையில் எனது அபிலாஷைகளை, எனது இன்பங்களை, எனது உணர்ச்சிகளைக் கருக்கிக் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. தயவுசெய்து என்னை மன்னித்து, மறந்துவிடுங்கள். என்றாலும் உங்களை மறந்துவிடுவது அவ்வளவு சுலபமானது அல்ல. ஆனாலும் எனது இந்த நிலையில் அதைவிட வேறு வழியில்லை. அப்படிச் செய்வதுதான் நம் இருவருக்கும் நன்மை பயப்பதாக இருக்கும். நாம் இதுவரை நடந்து கொண்டதை, பழகிய முறையை ஒரு தீய கனவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து மறந்துவிடுவதுதான் நல்லது. அதுதான் நமக்கு ஒரே வழி.''

''பரமேசை எனக்குத் தெரிந்திருந்தும், அதைப் பற்றி நீங்கள் எனக்கு எதுவும் சொல்லவில்லையே.''

''என்னத்தைச் சொல்லுவது? இது மற்றவர்களுக்கும் சொல்லிப் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு விஷயமா? எனக்குச் சொல்ல வேண்டும் போல் தோன்றவில்லை. ஆகையால்தான் சொல்லாது விட்டேன்.''

''ம்''

''நீங்கள் எதையும் மனத்தில் வைத்து அலட்டிக்கொள்ளாமல், வழக்கமான உங்கள் உற்சாகத்தோடு நடந்து கொண்டால்தான் நானும் உற்சாகமாக இருக்க முடியும். நாம் மற்றவர்களுக்கு நம்மைக் காட்டிக்கொள்ளாமல் இருப்பது மிகமிக முக்கியம் என்பதை மறந்துவிடாதீர்கள்.''

''ம்''

அவர் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார்.

''நீங்கள் இன்னமும் அதையே யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். தயவுசெய்து எதுவும் யோசிக்காதீர்கள். நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். உங்களுடைய இந்த நிலைமை நீடிக்குமாயின், என்னால் அமைதியாக இருக்க முடியாது. தயவுசெய்து என்னை நினைத்துப் பாருங்கள். ஒரு திக்கற்ற குடும்பத்தை வழி நடத்த வேண்டிய நிலையில் நான் இருக்கின்றேன். தயவுசெய்து அந்த நிலையை சின்னாபின்னமாக்கிவிடாதீர்கள். உங்கள் நிலைமையை எண்ணும்போது நான் அத்தகைய ஒரு நிலைக்கு ஆளாக்கப்படுவது போன்ற அச்சம் எனக்குஏற்படுகின்றது.''

நான் அவரைப் பார்த்தேன். என்னையே வைத்த கண் வாங்காமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்கள் கலங்கிப் போயிருந்தன. இந்த நிலையில் நான் அவரை ஒரு போதுமே பார்த்ததில்லை. என் கண்களும் கலங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் எப்படியாவது மாறித்தான் ஆகவேண்டும். அதைவிட வேறுவழியில்லை. எத்தனையோ இழப்புக்கள்—எத்தனையோ துயரங்கள், இருந்தும் இந்த இழப்பும் துயரமும் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் எனக்குத் தோன்றின.

நான் விடுதிக்குப் போகும் போதும் ஏதோ ஒரு மனச் சலனத்தால் திரும்பிப் பார்த்தேன். அவர் என்னையே பார்த்தபடி இருந்தார்.

உண்மைக் காரணத்தை அவருக்கு வெளியாகச் சொன்னதினால், ஓரளவுக்கு மனம் இலேசாக இருந்தது. தற்காலிகமான ஒரு சுகம். அவ்வளவுதான். எல்லாவற்றிற்கும் மூலாதாரமானதில் எந்தவித மாற்றமுமேயில்லை. நினைக்க நினைக்க நெஞ்சு வெடித்துவிடும் போன்ற துன்பம்.

உலகத் துன்பங்கள் எல்லாவற்றிலும் தலையாய துன்பம் இதுதான் என்று எனக்குப் பட்டது. அதே மாதிரி காதலால் ஏற்படக் கூடிய இன்பமும் தலையானதாகத்தான் இருக்க முடியும்.

இரவுச் சாப்பாட்டுக்கு அழைத்த போதும் அவர் வர வில்லை. கமலாஜனி போய்க் கேட்டுப்பார்த்தாள். தலைமை ஆசிரியரும் கூப்பிட்டார். பசிக்கவில்லை என்ற காரணத்தைச் சொல்லிவிட்டுச் சாப்பிட மறுத்துவிட்டார். ஓரளவுக்கு தலைமை ஆசிரியருக்கும் மற்றவர்களுக்கும் விஷயம் தெரியும் போல், அவர்களது நடைமுறையிலிருந்து எனக்குத் தோன்றியது. அவரை வலுக்கட்டாயப்படுத்துவதற்குத் தலைமை ஆசிரியருக்கோ அல்லது கமலாஜனிக்கோ எந்த வித அக்கறையுமில்லை. எனக்கு மட்டும் துன்பம்தான். ஆனாலும் நான் என்ன செய்ய முடியும்? நான் அவரைப் போய்க் கேட்பதில் எதுவித அர்த்தமுமேயில்லை. மற்றவர்க்கு வலிந்து என்னைக் காட்டிக் கொள்வதாகத் தான் அது முடியும். உண்மையில் எனக்குப் பசியில்லை. இவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உளைச்சல்களுக்கிடையே எங்கிருந்துதான் பசி உண்டாக முடியும்? ஆனால் பசியில்லை என்று இலேசாகச் சொல்லிவிட முடியாது. சிவபாதத்திற்கும் பசிக்கவில்லை, எனக்கும் பசிக்கவில்லையென்றால் யாரால்தான் அதை நிறுவையிட்டுப் பார்க்காமல் இருக்க முடியும்?

எவ்வளவுதான் நாம் சுதந்திரமுள்ளவர்களாக இருந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் நாம் சுதந்திரமற்றவர்கள் தாம்.

வாழ்க்கையோடு பிணைக்கப்பட்டுள்ள ஏதோ ஒரு சம்பிரதாயத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் வாழ வேண்டி இருக்கின்றது. அந்த சம்பிரதாயங்களை மீற முடியாது. அப்படி ஏற்படின் அவை எம்மைபழிவாங்கத் தவறமாட்டா.

இரவு முழுவதும் என்னால் தூங்க முடியாதிருந்தது.

கமலாஜனியும், பத்மாவும் நன்றாகத் தூங்கிவிட்டார்கள். பத்மாவின் குறட்டை ஒலி இடைக்கிடை விட்டுவிட்டுச் சுருதி பேதத்துடன் ஒலித்துக் கொண்டிருந்தது.

ஒருதரம் எழுந்து வெளியே எட்டிப் பார்த்தேன். சிவபாதம் அதே வகுப்பில் அதே மேசையில் முகத்தை மூண்டு கொடுத்துக் கொண்டிருந்தார். காற்றின் அலைச்சலுக்குக் குப்பி விளக்கு ஈடுகொடுக்க முடியாமல் செத்து உயிர்த்துக் கொண்டிருந்தது. தான் பலமான ஒரு மனிதர் என்று இதுவரை எண்ணிக் கொண்டிருந்த அவர் இன்று என் முன்னிலையில் ஒரு கோழையாகக் குறுகிப் போய்த் தோன்றினார்.

அன்றொரு நாள் பத்மாவுக்கு, தான் எந்தக் கப்பலையும் கவிழவிடமாட்டேன் என்றும் தன் பலம் தனக்குத் தெரியுமென்றும் வீரப்புக் கூறிய சிவபாதம்தானா இவர் என்று எண்ணும்படியாக இன்று எனக்கு அவர் தோற்றினார்.

அவரிடம் போய்க் கதைக்க வேண்டுமென்று மனம் உந்திய போதிலும், அதற்குப் பூரண பலமும் துணிவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமலிருந்தன. தற்செயலாக யாராவது விழித்துக் கொண்டுவிட்டால்?

பேசாது படுக்கையில் அங்குமிங்குமாகப் புரண்டு கொண்டிருந்தேன்.

எனது இந்த விழிப்பு நிலைக்கிடையே பல விபரீதமான எண்ணங்களும் சிந்தனைகளும் தோற்றித் தோன்றிக்கொண்டிருந்தன. ஒருபுறத்தில் பரமேஸ் கைக் குழந்தையையும் கொண்டு எங்கோ கண் காணாத இடத்திற்கு ஓடுவது போலவும் அவளது வாரிமுடித்துக் கட்டிக் கொள்ளாத கூந்தல் காட்டுப் பற்றைகளிலும், முட்களிலும் சிக்குப்பட்டுச் சிக்குப்பட்டு அறுபடுவது போலவும் தோன்றியது. இன்னொரு புறத்தில் ''அக்கா! நான் செத்துவிடுவேன் என்று அழுகிறீங்களா அக்கா?''- சரஸ்வதியின் அந்தக் கபடமற்ற பிஞ்சு முகம் தோன்றி உலுக்கியது. இதற்கிடையே வெறிச் சோடிய— பிரேத களை பொருந்திய முகம் ஒன்று. அது சிவபாதம்தான்.

என்னால் எதையுமே நினைத்துப் பார்க்க முடியாதிருந்தது. ஆனால் அதே நேரத்தில் எதையும் நினைத்துப் பார்க்காமல் தூங்கவும் முடியாதிருந்தது,

விடுதிக்கு அருகாமையில் சில நாய்கள் குரைத்துக் கொண்டு ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு ஓடின. அதைத் தொடர்ந்து சிறிது தூரத்திற்கு அப்பால் சில நாய்கள் ஊளையிட்டு அவலக் குரலை எழுப்பின. எனக்குப் பயமாக இருந்தது. தூங்க வேண்டுமென்று முயன்றேன். எவ்வளவுதான் முயன்றும் தூக்கம் வருவதாயில்லை.

பரமேஸ் என்னைப் பார்த்து ''நான் அப்படி ஏதும் செய்துவிடுவேன் என்று நீ நம்புகிறயா அக்கா?'' என்று கேட்ட அந்த நிலை என் மனதில் அப்படியே படம் பிடித்தாற் போல் தோன்றிக் கொண்டிருந்தது, அதைத் தொடர்ந்து சிறிது நேரத்திற்கு முன்னால் அவள் காடு மேடுகள் எல்லாவற்றிலும் விழுந்தடித்துக் கொண்டு ஓடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற அந்தக் கற்பனை நினைவு தோன்றி என்னை வருத்தி யது. இந்த எண்ணம் எப்படி எனக்குத் தோன்றியதென்றே எனக்குத் தெரியவில்லை.

உண்மையில் பரமேஸ் அப்படி ஏதும் செய்துவிடுவாளா? துக்கம் தொண்டையை அடைத்தது. வாய்விட்டுக் கதறி அழவேண்டும் போன்ற உணர்வு.

''அவள்எனக்குச் சத்தியம்செய்துதந்துவிட்டாள்.அதன் பிறகு நிச்சயமாக அப்படி ஏதும் அவள் செய்யமாட்டாள். நிச்சயமாக அவள் செய்யமாட்டாள்.'' என் இதயம் ஓல மிட்டது. என் மனச் சாந்திக்காக அப்படி என்னை நான் ஏமாற்றிக் கொள்வதாயிருந்தாலும், அதைவிட வேறு நான் என்னசெய்ய முடியும்?

நான் பலமற்றவள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

பள்ளிக்கூடம் முடிந்து, சாப்பாட்டுக்கு ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தபோது, பார்வதி காரில் வந்து இறங்கினர்.

தன் கமத்திற்கு இங்கிருந்து ஒரு குடும்பத்தைக் கொண்டு போவதற்காகவே அவர் வந்திருந்தார். அது சுலப மாக முடிந்தது. நான் முந்தி, நீ முந்தி என்று அவருடன் போகப் பலர் போட்டி போட்டுக்கொண்டு வந்தார்கள். எதுவித தடங்கலுமில்லாத மாதச் சம்பளம். சீவியப் பாட்டுக்கு அதிக அளவில் திண்டாடவேண்டியிராது.

அவர் வந்த காரியம் முடிந்து, சிறிது நேரம் அவ காசமாகக் கதைப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அவரின் தங்கையைப் பற்றி விசாரித்தேன். அந்தப் பேச்சை நான் தொடங்கியதுமே அவரது முகம் ஒடிக் கறுத்துப்போயிருந்த்து.

''ஏன் அக்கா ஒருமாதிரியாயிருக்கிறீர்கள், என்ன நடந்தது?'' என்றேன்.

''ஒன்றுமில்லையம்மா. ஏதோ ஆட்டுபவன் ஆட்ட, நாமெல்லாம் ஆட வேண்டியவர்கள்தானே. அதை நாம் தவிர்க்க முடியாது'' என்ருர்.

''என்னக்கா நடந்தது?'' என்னிடம் பிரதிபலித்த பரபரப்பையும் தடுமாற்றத்தையும் அவர் உணர்ந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்முடைய காலம் வேறம்மா. நம்முடைய வாழ்க்கை முறைகளும் வேறு. நமது காலத்துக் கட்டுப்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் எப்போதுமே நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்று நினைப்பதில் அர்த்தமில்லை. கால ஓட்டத்தோடு கூடிச் சாதாரண வாழ்க்கையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. நாம் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன, அந்த மாற்றங்களுக்கு நாமும் கட்டுப்பட்டு ஒத்துப்போக வேண்டியது தவிர்க்க முடியாதது."

அவர் சிறிது நேரம் பேசாதிருந்தார். எதையோ ஆழ்ந்து யோசிப்பவர்போல் எனக்குப் பட்டது.

"புரியும் படியாகச் சொல்லுங்கள் அக்கா" என்றேன்.

"இலட்சுமிக்கு ஒருத்தனை கல்யாணம் செய்து வைக்க வேண்டி இருக்கின்றது" என்றார். அவரது தொண்டை அடைத்துப்போய்க் கம்மியது.

"உங்களுடைய ஏற்பாடுதானா?"

"இல்லையம்மா, அவளாகவே வெளிப்படையாக இன்றித் தன்னுள்ளேயே வகுத்துக்கொண்டது. நாமும் எதுவும் சொல்ல முடியாது. அப்படி ஏதும் சொல்வதற்கு அவள் என்ன குழந்தையா? அவளது சில நடவடிக்கைகளிலிருந்து என்னால் அவளைப் புரிந்துகொள்ள முடிந்தது. என் கணவருக்கும் சொன்னேன். அவரும் நான் நினைத்தது மாதிரியே நினைத்திருந்ததாகச் சொன்னார். இனிமேல் நாம் வைத்திருந்து, ஊரில் பலபேர், பலமாதிரியாகச் சொல்லும்படி ஆகாமல், முன்னேற்றப்பாடாக நடந்துகொள்ள வேண்டுமென்று எண்ணினேன். அவரும் சம்மதித்தார். அடுத்த மாசம் அல்லது அதற்கடுத்த மாசம் நடைபெறலாம்."

சிறிதுநேர இடைவெளிவிட்டு மௌனமாக இருந்தார். நான் குறிப்பாக எதையும் நினைக்கவில்லை. கண்ணம்மா—பரமேஸ்—இலட்சுமி—ரேணுகா—பூரணம் அக்கா என்று ஒவ்வொன்றாக என் சிந்தனைகள் தாவிக்கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று கண்ணம்மாவின் திருமணத்தைப்பற்றிக் கமலாஜனி தெரிவித்த அபிப்பிராயத்தை எண்ணிப் பார்த்தேன், கண்ணம்மா—இலட்சுமி, இந்த இருவரில் இலட்சுமியில் பார்க்க, கண்ணம்மா என் மனதில் உயர்ந்து நின்றாள்.

சிறிதுநேரம் பொறுத்து அவரே பேச்சைத் தொடர்ந் தார்.

''கனகம், நீ என்னம்மா நினைக்கிறாய் இதைப்பற்றி?'' என்றார்.

''நான் என்னத்தை அக்கா நினைக்க இருக்கின்றது? இந்த நிலைமையில், உங்கள் ஏற்பாடுதான் சிறந்ததுபோல் எனக்குத் தோன்றுகின்றது'' என்றேன்.

''ஆமாம் கனகம், மற்றவர்கள் என்ன சொன்னாலும் சரி, அப்படிச் செய்வதுதான் சரியானது என்று எனக்கும் திடமாகப்படுகின்றது. அவள் குழந்தை. வாழ்ந்து அலுத் துப்போகவில்லை. கொடூரமான முறையில் அவளது வாழ்க்கை தட்டிப் பறிக்கப்பட்டது. அதற்கு, நாம் எங்கள் சம்பிரதாயங்களைக் காட்டி, அவளைக் குற்றப்படுத்துவது நியாயமாகாது. ஒரு விதவை தன் மனம் ஒப்பி எந்தவித வாழ்க்கையை நாடுகின்றாளோ, அந்தவித வாழ்க்கையை அவளுக்குக் கொடுப்பதற்கு நாம் தடையாக இருக்கக் கூடாது. அப்படித் தடை விதிப்பது, அவளைத் தவறான வேறு வழிகளில் ஈடுபடுத்துவதாகவும் அமைந்துவிடும்.''

நான் பரமேசைப்பற்றி எண்ணிப் பார்த்தேன். அவள் பழிவாங்கப்பட்டுவிட்டாள். அவளது வாழ்க்கை பாழாக் கப்பட்டுவிட்டது. அதற்கு உடந்தையாக இருந்தவனை ஏன் என்று கேட்க யாருமில்லை. ஆனால் அவளைப்பற்றி அவதூறு பேசிச் சித்திரவதை செய்வதில் மட்டும் யாரும் பின்நிற்கவு மில்லை.

இலட்சுமிக்குத் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தித் தன்னை வழிநடத்திக்கொள்ளக் கஷ்டமாக இருந்தால், பரமேஸ்? அவள் தனக்கு வரப்போகும் புதிய வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் குறித்துக் கனவு கண்டுகொண்டிருந்தவள். அந்தக் கனவு மயக்கத்தில் தன் நிலை இழந்தாள். இது சர்வ சாதாரணமான ஒன்று. இலட்சுமியோடு அவளை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது எனக்குப் பரமேசைக் குறித்து ஒருவித ஆறுதலே ஏற்பட்டது.

''பூரணம் கடிதம் எழுதவில்லையா?'' என்று பேச்சை வேறு திசைக்கு மாற்றினர்.

''இல்லை அக்கா. அவர் போய்ச் சேர்ந்து சில நாட்களில் எழுதிய கடிதத்துக்குப் பிறகு ஒரு கடிதமேனும் எழுதவில்லை. அவரைப்பற்றி ஒன்றுமே தெரிந்துகொள்ளவும் முடியவில்லை.''

''பாவம், மிஞ்சிய துன்பங்கள். சமீபத்தில் அவரது புருஷனும் மோசம் போய்விட்டார். இன்னும் ஒரேயொரு பற்றுக்கோடுதான் அவருக்கு. அதுவும் மனத்தோடு ஒட்டிய பற்றுக்கோடுதான். மற்றும்படி நெடுந்தொலைவு.''

''என்னக்கா சொல்லுகிறீர்கள்? எனக்கொன்றும் தெரியாதே. அவரது புருஷன் எப்போதோ மோசம் போய்விட்டார் என்றல்லவா நான் நினைத்துக்கொண்டிருக்கின்றேன். ஆச்சரியமாக இருக்கின்றதே! அதைப் பற்றி ஒருநாளும் எனக்கு அவர் சொல்லவில்லையே.''

''அநேகமாக அவரைப்பற்றி யாருக்குமே தெரியாது. தெரிந்து கொள்ளும்படியாக நடக்கவும் மாட்டார். அவ்வளவுக்கு மர்மம் நிறைந்த வாழ்க்கை அவருடையது.''

''விவரமாகச் சொல்லுங்கள் அக்கா.''

''என்னத்தை அம்மா நான் சொல்வது? அவர் வாழ்க்கையோடு விளையாடினர். பதிலுக்கு வாழ்க்கை அவரோடு விளையாடியது. வாழ்க்கையில் நன்முக அடிபட்டுச் சளைத்துப் போனவர். வாழ்க்கையை ஒரு கேளிக்கைக் களமாக்கிச் சூதாட முயன்முர். அது அவரையே பழிவாங்கிவிட்டது. பின் களைத்து ஓய்ந்துபோன நிலையில் விழிப்படைந்தார், இருந்தும்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம்வரை எதுவும் பேசாது எதையோ யோசித்துக்கொண்டிருந்தார்.

''கனகம், இந்த வாழ்க்கை பொல்லாதது. அதுவும் பெண்களைப் பொறுத்தவரையில் ஒரு பக்தன் தீ மிதிப் பதைப் போன்றது. அந்தப் பக்தனுக்கு எவ்வளவுதான் தெய்வ பக்தி இருந்தாலும், தீ மிதிக்கின்ற சமயத்தில் சிறிது அஜாக்கிரதையாக இருந்துவிட்டால், தீ அவனைச் சும்மாவிடாது. அவனது கால்களைச் சுட்டுப் பொசுக்கிப் பதம் பார்த்துவிடும்.''

''அப்படிச் சுட்டுப் பொசுக்கப்பட்ட ஒருத்திதான் பூரணமும். வாழ்க்கை இருக்கின்றவரையில் அவர் அதை மதிக்கவில்லை. தன் இஷ்டம்போல் வாழ்க்கையைத் திருப்பி, மடக்கி, நீட்டி விளையாட முயன்றார். இப்போது அந்த ஒரேஒரு பற்றுக்கோட்டைத் தவிர எல்லாம் முடிந்து விட்டது.''

''என்னக்கா அது?''

''அவரது குழந்தையம்மா. ஒரு வயதுக்கு அப்புறம் அந்தக் குழந்தையை அவர் காணவேயில்லை. இப்போது அது குழந்தையல்ல. இருபத்தேழு வயதுக்கு மேலாகி விட்ட ஓர் ஆண்பிள்ளை. உயிருடன் இருக்கின்றானோ இல்லையோ என்றும் தெரியாது. பூரணத்தைக் கேட்டால், ''உயிருடன் இருக்கின்றான்'' என்ற ஏதோ ஒரு நம்பிக்கை தனக்கு இருப்பதாகச் சொல்லிக்கொள்வார். அப்படி இருப்பானானால் சிலவேளை மணமாகிக் குழந்தை குட்டி களுடன் இருக்கக்கூடும். அந்தக் குழந்தையை எண்ணி, எண்ணி அவர் படும் வேதனை, இந்த உலகத்தையே அதற்கு ஈடாக்கினாலும் அது நிவர்த்தியாகுமா?''

இந்த அளவில் பேச்சுத் தடைப்பட்டது. அவருடன் வந்த மற்றவர்கள், கமத்துக்குக் கொண்டுபோகின்ற அந் தக் குடும்பத்தையும் கூட்டிக்கொண்டு போவதற்கு ஆயத்த மாக வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கனகம், பிறகு ஒருநாளுக்கு எல்லாம் சாவகாசமாகக் கதைத்துக்கொள்ளலாம். நீ செய்த உதவிக்கு மிக்க நன்றி. நாங்கள் இனிக் கமத்துக்குப் போய்ப் பிறகு யாழ்ப்பாணம் போக வேண்டும்."

"சரி அக்கா."

★

பார்வதி போய்விட்டார். நான் சுமக்கின்ற இந்தச் சுமைகளோடு எதிர்பாராத இன்னொரு சுமையையும் ஏற்றிவிட்டு அவர் சென்றுவிட்டார்.

பூரணம் அக்காவின் வாழ்க்கையில் சூழ்ந்திருக்கின்ற மர்மத்தை மறைத்துக்கொண்டிருக்கின்ற அந்தத் திரையை விலக்கிப் பார்க்க என் மனம் துடித்துக்கொண்டிருந்தது.

இதற்கு முன்னர் என்னோடு சேர்ந்த அவரது நடத்தைகள் சிறிது சிறிதாகப் புரிந்தும் புரியாமலுமாய் என் மனத்தில் திரையோடிக்கொண்டிருந்தன. ஏதோ ஒருவித ஊகங்கள்தான். அவையும் சின்னஞ்சிறு துண்டங்களாக அங்குமிங்கும் சிதறிப்போய்க் கிடந்தன. அவற்றைப் பொருந்தும்படியாகச் சேர்த்து ஒட்டுப்போட்டு முழு உருவமாகப் பார்ப்பதற்கு முடியாதிருந்தது. எவ்வளவுதான் முயன்ற போதிலும் அது முடிவு பெருத ஒன்ருகவே இருந்தது.

"துன்பங்கள் ஒருபோதும் அழிவதில்லை. அவை வெவ்வேறு விதத்தில் உருமாறிக் கொண்டிருக்கின்றன." இதைத்தான் இப்போதும் என்னுல் நினைத்துப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

இந்த உருமாற்றங்களை எண்ணி, எண்ணி எனக்குள்ளேயே சிரித்துக்கொண்டேன்.

சிவபாதம் பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டுவிட்டுச் சில நாட்களாக எங்கோ சென்றிருந்தார். எங்கே போனுர் என்று யாருக்குமே தெரியாது. யாருக்கும் அவர் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் இல்லை. அவர் போய்விட்ட பிற்பாடுதான் எனக்கும் தெரிய வந்தது.

அவர் லீவு போட்டது, போனதெல்லாம் சர்வ சாதாரணமான ஒன்றுதான். பாரதூரமாக எடுப்பதற்கு எதுவுமில்லை. ஆனாலும் என் மனம் அவரைக் குறித்து, எதுவித காரணமுமின்றி விபரீதமான கற்பனைகளை உருப் போட்டுக்கொண்டிருந்தது.

அவர் என்ன செய்கின்றார்? எங்கே போகின்றார் என்பதெல்லாம் எனக்குத் தெரியும்படியாக இருக்க வேண்டுமென்ற ஒருவித மனப்போக்கு. விசித்திரமானதுதான்.

அவர் திரும்பி வரும் வரை எனது உள்ளம் சதா அமைதியற்றுத் தவித்துக்கொண்டிருந்தது. அவர் வந்த அன்று ஏதோவெல்லாம் அவரைக் கேட்டு ஏசவேண்டும் என்ற துடிப்புடன், நானாக அவரை அணுகினேன். அவர் முன் போய் நின்றதும் அந்தத் துடிப்பின் வேகமெல்லாம் அற்றுப் போய்த் தேகம் நடுங்கத் தொடங்கியது. அவர் முன், நான் ஒரு குற்றவாளி என்ற உணர்வுடன் கூனிக் குறுகி நின்ற அதே மனப்பான்மைதான் தலைதூக்கியது. எவ்வளவோ எல்லாம் எண்ணமிட்டுக்கொண்டு அவரிடம் சென்றேன். செல்லும்வரை எனக்கிருந்த துணிச்சல்! என் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளிவர முடியவில்லை. என் தொண்டை அடைத்துக் கரகரத்துப் போயிருந்தது. வெறுமனே அடிக்கடி செருமிக்கொண்டேன். ஏன்?

கடைசியில் அவராகவே பேச்சைத் தொடங்கினார்.

"என்ன கனகம்?"

"ஒன்றுமில்லை."

"ஏன் ஒருமாதிரியாய் இருக்கின்றீர்கள்? என்ன நடந்தது?"

"ஒன்றும் நடக்கவில்லையே. ஏன், எப்படி இருக்கின்றேன்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் இத்தனை நாட்களாக எங்கே போயிருந்தீர்கள்?''

''ஏன்?''

''நான் கேட்டது தவறு என்றால் மன்னித்து விடுங்கள்.''

''நீங்கள் கேட்டது தவறு என்று சொன்னேனா?''

''நீங்கள் இங்கே இல்லாமல் எங்காவது போயிருக்கின்ற நேரங்களில் என் மனம் அமைதியாக இருக்க முடிவதில்லை.''

அவர் பதில் எதுவும் சொல்லாமல் வெறுமனே சிரித்தார். நான் அவரையே பார்த்தபடி அமைதியாக இருந்தேன். அவர் வேறு எங்கோ பார்த்துக்கொண்டிருந்தார். அவர் குறிப்பாகப் பார்க்கின்ற அந்த இடத்தில் வெறும் சூனியத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

சிறிது நேரம் பொறுத்து ஒரு நீண்ட பெருமூச்சு அவரிடமிருந்து வந்தது. அதன் பின்னர், அதே சூனியத்தில் தான் அவர் பார்வை நிலைத்திருந்தது.

சிறிது பொறுத்து—

''கனகம், நீங்கள் என்ன பதிலை என்னிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்களோ எனக்குத் தெரியாது. நான் உங்களுக்கு என்ன பதிலைச் சொல்வதென்றுமே எனக்குப் புரியவில்லை. ஒன்றே ஒன்றைத்தான் நான் சொல்லமுடியும். அது, உங்களை மறந்துவிடுவதற்காக நான் முயன்று கொண்டிருக்கின்றேன். இதைவிட, வேறு ஏதாவது நீங்கள் என்னிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்களா?''

''ஆமாம். என்னை நீங்கள் மறந்துவிடுவதற்கு, முதலில், நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான வேறு ஒருத்தியை கூடிய விரைவில் மணம் செய்துகொள்ள வேண்டும். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பாடு, நீங்கள் இவ்வளவு தூரம் சிரமப்படவேண்டியிருக்காது. கால ஓட்டம் எல்லாவற்றையும் மாற்றிச் சரிசெய்து விடும்.''

அவர் ஒன்றுமே பேசாது இருந்தார். அவர் என்ன பதிலைச் சொல்லப் போகின்ருரோ என்ற துடிப்புடன் அவருடைய பதிலுக்காக எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

சிறிது நேரம்வரை அப்படியே இருந்துவிட்டு, ஒன்றுமே பேசாது எழுந்து நடந்தார். அவர் நடந்து செல்வதையே பார்த்தபடி இருந்தேன். தெருவழியே ஆற்றுப் பக்கமாக நடந்துகொண்டிருந்தார்.

இனி என் கடமை முடிந்தது. இதைத் தவிர மேற்கொண்டு என்ஞல் எதுவுமே செய்வதற்கில்லை. இந்த எண்ணத்தோடு சேர்ந்த ஏதோ ஒருவித நிம்மதி. அந்தச் சிறிய அளவு நிம்மதியே எனக்குப் பெரிதாகத் தோன்றியது.

பத்மாவுக்கு அடுத்த மாதம் கல்யாணம். கல்யாணத்துக்கு யார் யாருக்கு அழைப்பு அனுப்புவது என்ற பட்டியல் தயாரிப்பதில் அவள் பொழுது கழிந்துகொண்டிருந்தது.

கமலாஜனிக்கு அதே படிப்புத்தான். எந்தநேரம் பார்த்தாலும் புத்தகமும் கையுமாகவே அவள் இருந்தாள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

வெள்ளிக்கிழமை வந்தது. கமலாஜனியும் பத்மாவும் வீட்டுக்குப் போவதற்கு ஆயத்தப்படுத்தினர்கள். அவர்களோடு சேர்ந்து நானும் போய்வரலாமென்று தோன்றியது. அவர்கள் இல்லாமல் தனியாக இங்கு இருந்தாலும் பொழுது போவது கஷ்டமாக இருக்கும். அத்தோடு கூடப் பார்வதியிடம் போக வேண்டியது முக்கியமாக இருந்தது.

நான் பார்வதியின் வீட்டை அடைந்த போது, சிறிது இருட்டிவிட்டது. பார்வதி யாரோ உறவினருடைய கல்யாண வீட்டுக்குப் போயிருந்தார். இலட்சுமியும் அவளது குழந்தையுமே வீட்டில் இருந்தார்கள். இலட்சுமிக்கு என்னை சுலபமாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஒரு தடவை பார்த்ததுதானே. அதுவும் தனது புருஷனை இழந்து புலம்பிக் கொண்டிருந்த நிலையில், என்னைக் குறிப்பு வைத்திருக்க அவளால் முடிந்திருக்காது.

சிறிது நேரம் பொறுத்து பார்வதியும் அவரது கணவரும் கல்யாண வீட்டிலிருந்து வந்து சேர்ந்தார்கள்.

''என்ன கனகம், வந்து அதிக நேரமா?''

''இல்லை அக்கா, இப்போதுதான் வந்தேன்.''

''காப்பி குடித்தாயா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இலட்சுமி கொண்டுவந்து தந்து இப்போதுதான் குடித்தேன்.''

அவர் உள்ளே போய் வேறு உடை மாற்றிக்கொண்டு வந்து, எனக்குப் பக்கத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்.

அவரது கணவனும் வேறு உடை மாற்றிக் கொண்டு எங்கோ வெளிக்கிளம்பினுர்.

பார்வதி சிறிது நேரம் வரை ஒன்றுமே பேசவில்லை. எனக்கும் எப்படி என்ன பேசுவதென்றே புரியவில்லை. இருவரிடையேயும் சிறிது நேரம் அமைதி நிலவியது.

சிறிது பொறுத்து தான் போய்வந்த கல்யாண வீட்டைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். அவற்றை எனக்குச் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை. ஏதோ தன்பாட்டுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். நானும் அதை இரசிக்க முடியாமல் வெறுமனே ஊம் கூட்டிக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

''என்ன கனகம், உனக்கு இன்னும் ஓர் இடமும் பேசசுக்கால் தொடங்கவில்லையா?'' என்ருர். எடுத்தாற் போல இப்படிக் கேட்டதால் எனக்குச் சிறிது சங்கடயாக இருந்தது. நான் சொல்லப் போகின்ற பதிலுக்காக என்னையே பார்த்தபடி இருந்தார். இதற்கு நான் என்ன பதிலைச் சொல்வது?

''இப்போது என்ன அவசரம் அக்கா'' என்று இழுத்தேன். அவர் என்னைக் கூர்ந்து பார்த்தார்,

''பிறகு எப்போது அவசரமாம்?''

பிறகு சொன்ஞர்—

''எந்த வயதில் எவை எவை நடக்கவேண்டுமோ, அந்தந்த வயதில் அவை கூடியவரையில் நடந்துவிட வேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஏதும் பேசாமல் தலைகுனிந்துகொண்டிருந்தேன். அவர் கடைசியாகச் சொன்னது என் காதில் விழுந்த தாகவே நான் காட்டிக்கொள்ளவில்லை.

அவர் என்ன நினைத்தாரோ தெரியாது. அத்துடன் அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, ''பூர ணத்தின் கடிதம் ஒன்று இன்று வந்தது'' என்றார்.

''என்னக்கா எழுதியிருந்தார்?'' இந்த எனது கேள்வி யில் வெளியான ஆர்வத்தை உணர்ந்து கொண்டவர் போல், உள்ளே சென்று அந்தக் கடிதத்தை எடுத்து வந் தார்.

அது ஒரு நீண்ட கடிதம்.

''இதை உனக்கு எப்படிக் காட்டுவது? எப்படிச் சொல்வது? என்றுதான் இவ்வளவு நேரமும் யோசித்துக் கொண்டிருந்தேன். உனக்கும் தெரிவது நல்லது. நீயே படித்துப் பார்.''

★

அன்பார்ந்த பார்வதிக்கு...

உனக்கு இந்தக் கடிதம் எனது கடைசிக் கடிதமாக இருக்கும் என்றுதான் நம்புகின்றேன். சிலவேளை அப்படி யில்லாமல் இன்னும் எழுதவும் கூடும்.

உனக்குக் கடிதம் கிடைக்கின்ற இன்று— அதாவது வெள்ளிக் கிழமை அதிகாலையில் நான் கொழும்பிலிருந்து விமானத்தில் அமெரிக்காவுக்குப் புறப்படுகின்றேன், முன் கூட்டியே உனக்கு இதனைத் தெரிவிக்காமைக்கு என்னை மன்னிக்கவும்.

இது உனக்குத் திகைப்பாகவும் இருக்கலாம்.

என்ன செய்வது? இப்படி நான் போவதற்கு எனக்கு எவ்வளவு விறைப்பான மனம் இருத்தல் வேண்டும். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் எனது ஒரே குழந்தை பெரியவனுக வளர்ந்த நிலையில் நான் கண்டும்— ஒரே இடத்தில் சிறிது காலம் வாழ்ந்தும், அதன் பின்னர் என் கணவர் இறந்தும்— கணவன் என்று சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை. இருந்தாலும் மனம் என்று ஒன்று இருக்கின்றதே? அதற்கு இந்தச் சட்டப் பிரச்சினைகள் ஒருபோதும் தெரிவதில்லைப் போலும்!

எல்லாம் முடிந்தபின் அந்தக் குழந்தை...

பார்வதி நான் தருமபுரத்திலிருந்து சிலாபத்திற்குப் புறப்படுகின்ற கடைசி நேரத்தில், என் குழந்தை— என் மகன், தன் தாயைத் தெரிந்து கொண்ட ஒரு மகன் தன் தாயிடம் ஒரு வார்த்தை பேசுவதற்கு முயன்றும், அந்தக் குழந்தை உள்ளம் உடைந்து சின்னுபின்னப் படும்படியாக நான் என்ன சொன்னேன் தெரியுமா? ''மன்னித்துவிடுங்கள், எனக்கு இப்போது அவகாசமில்லை.'' இதை நான் யாரிடம் சொன்னேன் தெரியுமா? நான் பெற்ற எனது மகனிடம். இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான தாயை நீ உன் வாழ்நாளில் ஒரு போதுமே கண்டிருக்கமாட்டாய்.

பார்வதி! எனக்குப் பைத்தியம் பிடிக்காத ஒரு குறை தான். மற்றும்படி நான் தருமபுரத்தைவிட்டு இங்கே வந்த நாள் தொடக்கம் ஒரு நடைப் பிணத்திற்குச் சமானமாய்த்தான் இருந்தேன்.

நல்ல வேளையாக மிஸ் கட்சன் என்ற அமெரிக்க மாதின் நட்பு எனக்குக் கிடைத்தது. அமெரிக்க திருச்சபையின் ஒரு தொண்டர் அவர். என்னை உள்ளபடி நன்ருகப் புரிந்து கொண்டார் அவர். நான் எனது முழுக் கதையையும் ஆரம்பத்திலிருந்து எதையும் ஒளிக்காமல் அவரிடம் சொன்னேன். நான் சொல்லுவதிலுள்ள எனது மன உணர்வையும், நியாயங்களையும் அவர் நன்ருகப் புரிந்து கொண்டு, ''இனி எல்லாம் போய்விட்டது. உங்களுக்கு என்றுஇருப்பது உங்கள் ஒரே ஒரு மகன்தான். அந்த மகனுடன் இனிமேல் சேர்ந்து வாழ்வதற்குரிய சாத்தியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகளை ஆக்கிக்கொள்ள முடியுமா? என்று மட்டும் எண்ணிப் பாருங்கள்'' என்றார்.

நான் அதற்கு உடனேயே பதில் சொல்லவிருந்தேன். அவர் என்னைத் தடுத்து பின்னரும் சொன்னார். ''வாழ்க்கையை நாம் மிகவும் பாரதூரமாக நோக்கக் கூடாது. அறிவை மட்டும் வைத்துக் கொண்டு வாழ்க்கையை எடை போட முயன்றோமானால், அப்புறம் எதற்காக வாழ்கின்றோம் என்று தான் தோன்றும். வாழ்க்கையே இருக்க முடியாது. நீங்கள் வாழ்க்கையை வெறும் விளையாட்டாக எண்ணித்தான் இவ்வளவு தூரத்திற்கு அலங்கோலப்பட்டு விட்டேன் என்று கருதுகின்றீர்கள். உண்மைதான். நீங்கள் அப்படி வாழ்க்கையோடு விளையாடிக் கொண்டிருந்த போது, அறிவின் முனைப்புக்கு அப்பாற்பட்டு வெறும் உணர்ச்சி வழியிலேயே சென்றுகொண்டிருந்தீர்கள். இப்போதைய உங்கள் நிலை அப்படியல்ல. உணர்வுக்கும் அறிவுக்கும் உட்பட்டுச் சிந்திக்க முடியும். அவசரப்படாமல் ஒரு வாரம் வரை யோசித்துப் பாருங்கள். அதன் பின்னர் உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றதோ அப்படியே செய்து கொள்ளலாம்.''

மிஸ் கட்சன் இவ்வளவு சொல்லியும் கூட— அவர் சொன்ன ஒரு வார்த்தையேனும் என் மனப் போக்கை மாற்ற முடியவில்லை.

ஒரு வாரம் கழித்துத் திரும்பவும் அவரிடம் சென்றேன். என்னைக் கண்டதும் மலர்ந்த முகத்துடன் என்னை வரவேற்றார்.

''என்ன முடிவுடன் வந்தீர்கள்?''

''எனது மனப் போக்கில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. எனது மகன் இதுவரை எப்படி வளர்ந்தானோ அப்படியே இனியும் அவன் இருக்கட்டும். நான் ஓர் அவமானச் சின்னமாக அவன் பார்வைக்கு முன்னால் தோன்ற விரும்பவில்லை. என்னை இல்லை என்ற மட்டில் அவனது வாழ்க்கை அமையட்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதுதான் உங்கள் முடிவான தீர்மானமா?''

''ஆமாம். மேற்கொண்டு எந்தவித மாற்றமும் இதில் இருக்க முடியாது.'' இதைச் சொல்லும் போது என் கண்கள் குளமாகி நிறைந்திருந்தன.''

அதற்கு மேல் மிஸ் கட்சன் என்னுடன் இந்த விஷயத்தையிட்டு எதுவுமே பேசவில்லை.

சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் அவர் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். அவர் வந்த சமயத்தில் என்னுடைய கணவர் எனக்குக் கடைசியாக எழுதியிருந்த கடிதத்தைத் திரும்பவும் படித்துக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தேன். அவர் எழுதிய அந்தக் கடைசிக் கடிதம்...

பார்வதி! அவர் அந்தக் கடைசி நேரத்தில்— உயிர் உடலைவிட்டுப் பிரிகின்ற தருணத்தில், என்னைப் பற்றி என்னென்ன நினைத்திருப்பார்?

இதனை உனக்கு எழுதுகின்ற இப்போதும், அதனை எடுத்துப் படித்தேன். அந்தக் கடிதம் என்னை அணு அணுவாகச் சித்திரவதை செய்து கொல்லட்டும்.

''இன்றோ நாளையோ என்ற நிலையில், உயிரோடு போராடிக் கொண்டிருக்கின்ற இந்தக் கடைசி நேரத்தில் உன்னைப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகின்றது. வருவாயா? எங்கள் மகன் சிவத்திற்குச் சில நாட்களுக்கு முன் தருமபுரத்தில் ஆசிரியர் வேலை கிடைத்திருக்கின்றது.''

ஐயோ...

இந்தக் கடிதம் நான் தருமபுரத்திற்குப் போன அடுத்த வாரம், திரும்பவும் முல்லைத்தீவுக்குப் போன போது அந்த இடத்து விலாசத்திற்கு வந்திருந்தது.

நான் அவரை விட்டுப் பிரிந்த பிற்பாடு அவர் எனக்கு எழுதிய முதல் கடிதம் இது. அது கடைசிக் கடிதமுமாய் அமைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கடிதம் எழுதியது...

அவரது கடைசி நேரம்...

என் மகன்...

அவன் என்னுடனேயே படிப்பிப்பது...

எல்லாமாகச் சேர்ந்து அந்த சில நாட்களில் நான் பட்ட அவஸ்தை, என் வாழ்நாளிலேயே பெரிய சோதனைக் காலம் அது.பார்வதி! அந்த சமயத்தில் தற்கொலை செய்கின்ற அளவுக்கு என் மனம் கெட்டுப் போயிருந்தது.

மிஸ் கட்சன் வந்த அன்று மாத்திரம் நான் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு அழவில்லை. அதற்கு முன்னர் எத்தனையோ நாட்கள் எத்தனையோ இரவுகள் அதைப் படிப்பதும் கண்ணீர்விட்டு அழுவதுமாகக் கழிந்தன.

மிஸ் கட்சன் என்னை சமாதானப் படுத்தித் தேறுதல் கூறிவிட்டு, "நான் அமெரிக்காவுக்குப் போக வேண்டி இருக்கின்றது. இந்த நிலையில் நீங்களும் வந்தால் உங்கள் மனத்திற்கு ஆறுதலாயிருக்கும். வர முடியுமா?" என்றார்.

"நான் அவசியம் வருகின்றேன். பின் நான் எப்போதுமே இங்கு திரும்பி வராதபடி ஒழுங்கு செய்ய முடியுமா?" என்றேன்.

"பார்க்கலாம்" என்றார்.

பார்வதி! என்னை நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள். எனக்கோ இதைவிட வேறு வழியே தோன்றவில்லை.

என்னோடு சம்பந்தப்பட்ட எந்த விஷயமும் எவருக்கும் தெரியாமல் பார்த்துக் கொள்வது உன் கடமை.

நான் விடைபெறுகின்றேன்.

"பூரணம்."

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு, நிமிர்ந்து பார்வதியைப் பார்த்தேன். பார்வதி, இலட்சுமியின் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து என்னையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

''என்னக்கா இது?'' என்றேன்.

''என்னத்தையம்மா, என்ன என்று கேட்கிறாய்?''

அது எனக்குமே தெரியவில்லை.

''இப்படி அவர் செய்வாரென்று நான் எதிர்பார்க்கவேயில்லை'' என்றார் பார்வதி.

தொடர்ந்து அவரே சொன்னார் —

''அதுவும் தன் மகனைத் தெரிந்துகொண்ட பிற்பாடு அவர் இப்படிச் செய்திருக்கவே கூடாது.''

பூரணம் அக்கா தருமபுரத்தை விட்டுப் போகின்ற அன்று, சிவபாதம் வந்து அவருடன் கதைக்க முயன்றதை எண்ணிப் பார்த்தேன், பார்வதிக்கும் அதைச் சொன்னேன்.

அவர் நான் சொன்னதைக் கேட்டுவிட்டுச் சொன்னார். ''எப்படியோம்மா, நடந்தவை எல்லாம் நடந்து முடிந்துவிட்டன. அவற்றையே எண்ணிக்கொண்டிராமல் தன் மகனுடன் சேர்ந்து வாழ்ந்திருக்கலாம். அதற்கு அவரது குற்றம் புரிந்த நெஞ்சு இடம் கொடுக்கவில்லை.''

''என்னக்கா அது?''

பார்வதி கூறினாள்:

''பூரணம் இரண்டு கல்யாணம் செய்தார் அம்மா. அவரை எனக்குத் தெரியவந்தது, இங்கே அவரும் நானும் ஒன்றாகப் படிப்பித்த போதுதான். எங்கள் இருவருக்கிடையே நட்பு நன்றாக வேரூன்றிய பிற்பாடும்கூட அவர் என்னிடம் முழு விஷயங்களையும் சொல்லவில்லை. பூரணம் கொழும்பிலே பிறந்து, கொழும்பிலேயே வளர்ந்தவர். நாகரிகமான வாழ்க்கையோடு பழக்கப்பட்டவர்.

சர்வகலாசாலைப் படிப்பின்போது இவருக்கும், சிவமூர்த்திக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்தது. சிவமூர்த்தி அப்போது பைனல். பூரணத்துக்கு இன்னும் இரண்டு வருடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. அந்தக் காதல், சிவமூர்த்தி கலாசாலைப் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறியதும் கல்யாணத்தில் முடிந்தது. பூரணத்தின் படிப்பு இடையிலேயே நிற்கவேண்டியதாயிற்று. அவரின் பெற்றோர், இந்தக் கல்யாணத்தை விரும்பவில்லை. அவர்களுக்குத் தெரியாமலே இவர்களது கல்யாணம் நடந்து முடிந்தது.

சிவமூர்த்தியின் சொந்த ஊர் மட்டக்களப்பு. மட்டக்களப்பிலேயே கல்லூரியில் அவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. ஆகவே அவர்களது வாழ்க்கை மட்டக்களப்பிலேயே ஆரம்பமாகியது.

பூரணத்துக்கு மட்டக்களப்பு வாழ்க்கை அதிகமாகப் பிடிக்கவில்லை. மேல்நாட்டு நாகரிகத்தோடு ஒட்டிப் பழக்கப்பட்டவளுக்கு, இது கண்ணைக் கட்டி நடுக்கடலில் விட்ட மாதிரி இருந்தத்.

இந்த நிலையில் சிவமூர்த்தியோடு படிப்பித்துக்கொண்டிருந்த செந்தில்வேல் என்ற ஓவிய ஆசிரியருக்கும் பூரணத்துக்கும் பழக்கம் ஏற்படத் தொடங்கியது. செந்தில்வேல் சிவமூர்த்தியின் நண்பன். நல்ல அழகான தோற்றமுடையவன். செந்தில்வேல் அடிக்கடி சிவமூர்த்தியிடம் வீட்டுக்குப் போவார்.

பூரணத்துக்கு குழந்தை பிறந்தபிற்பாடு, செந்தில்வேலுக்கும், பூரணத்துக்கும் ஏற்பட்ட பழக்கம் வேறு விதமாக மாறிக்கொண்டு போகத் தொடங்கியது. அது முற்றி, சிவமூர்த்தியிடமிருந்து பூரணம் விவாகரத்துக் கோருகின்ற அளவுக்கு வந்தது.

கோர்ட்டில் வழக்கு நடந்தபோது அந்தக் குழந்தைக்கு ஒரு வயதுதானிருக்கும்.

சிவமூர்த்தி, குழந்தை தன்னிடமே இருக்க வேண்டுமென்று கோர்ட்டில் கேட்டுக்கொண்டார். பூரணம் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. சொல்லப்போனால் குழந்தையை சிவமூர்த்தியிடம் விடுவது, அந்த நிலையில் அவருக்குச் சந்தோஷமாகவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தில்வேலும், பூரணமும் யாழ்ப் பாணத்துக்கு வந்தார்கள். இதனை அறிந்த பூரணத் தின் பெற்றோர், அடியோடு பூரணத்தை வெறுத்து ஒதுக்கி விட்டனர். பூரணத்துக்கும் அதைப்பற்றிக் கவலையில்லை.

செந்தில்வேலுக்குக் குடிப் பழக்கம் அதிகமாக இருந் தது. நாட்கள் ஆக, ஆக அவர் குடித்துவிட்டுப் பூரணத்தை துன்புறுத்தத் தொடங்கினர்.

பூரணம் அப்போதுதான் விழிப்படைந்தார்.

நாலைந்து வருடங்கள் வரைதான் இவர்களது வாழ்க் கையும் நின்று பிடித்தது. மிதமிஞ்சிய குடி யினுல் செந்தில்வேல் பாதிக்கப்பட்டு நோயாளியாகக் கிடந்து இறந்து விட்டார்.

''அதன் பின்னர்தான் பூரணம் படிப்பிக்கத் தொடங் கியது'' என்று கூறிவிட்டு நிறுத்தினுர்.

நான் பார்வதியைப் பார்த்தபடி பேசாதிருந்தேன். அவர் பேச்சை நிறுத்திய பிற்பாடும் எவ்வளவு நேரம்தான் அப்படி இருந்தேனே?

''பூரணத்தை இப்போது பார்ப்பவர்கள் அவரின் பழைய வாழ்க்கை இப்படி அலங்கோலமானது என்று சொன்னுல் நம்பவே மாட்டார்கள். அவ்வளவு தூரத் துக்கு காலம் கடந்தபின் வாழ்க்கையை அவர் புரிந்து கொண்டுவிட்டார். இருந்தும் அமைதியற்ற வாழ்க்கை தான்'' என்ருர் பார்வதி.

எனக்கு எல்லாம் தெட்டத் தெளிவாகப் புரிந்தன.

பார்வதியின் முகத்தில் வேதனையின் கோடுகள் பதிந்து போயிருந்தன.

''பூரணம், குழந்தைப் பாசத்தால் அணு அணுவாகச் செத்துக்கொண்டிருந்தார். கடைசியில் தன் குழந்தையைத் தெரிந்துகொண்டும்.........''

பார்வதியின் கண்கள் கலங்கிப்போயிருந்தன. காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக அவர் எழுந்து உள்ளே சென்ருர்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

நான் அடுத்தநாளே நல்லூரிலிருந்து தருமபுரத்துக்குப் புறப்பட்டேன். உடனே புறப்பட்டது பார்வதிக்கு ஒருமாதிரியாக இருந்தது.

''நின்று நாளைக்குப் போகலாமே கனகம்.''

''வேண்டாம் அக்கா. நான் இன்றே போக வேண்டும். என் மனநிலை சரியாயில்லை'' என்றேன்.

''வீணாக எதையும் யோசித்து மனதை அலட்டிக் கொள்ளாதே'' என்றார்.

அந்தக் கடிதம், எங்கள் இருவரது மனநிலையையும் வெகு தூரத்துக்குப் பாதித்திருந்தது. பார்வதியின் முகத்தில் சாதாரணமாகத் தோன்றுகின்ற அந்தக் களையும், பொலிவும் அற்றுப்போயிருந்தன. இதைவிட அவருடைய பிரச்சினைகளும் இருக்கும். எதையும் அவரிடம் கேட்டு அறிந்து கொள்ளவோ அல்லது அவற்றுடன் மனம்விட்டுக் கலந்து கொள்ளவோ கூடிய நிலையில் எனது மனநிலை இருக்கவில்லை.

என் மனம் ஒரு தெளிவான நிலையற்று, குழம்பிப் போயிருந்தது.

தருமபுரத்துக்கு வந்து சேர்ந்ததும், அந்தச் சுறுசுறுப்பான உலகம்தான் என் கண்ணுக்குப் பட்டது. வயிற்றுப் பிரச்சினையோடு ஒட்டி, அத்தோடு போராடி முன்னேறிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுகின்ற அந்த மனிதக் கூட்டம், எமக்குப் புறம்பான ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொண்டு சதா போராடிக் கொண்டே இருந்தது.

அவர்களது உயிர் ஓயும்வரை அந்தப் போராட்டமும் ஓயப் போவதில்லை. அவர்கள் போராடிக்கொண்டே இருப் பார்கள். தங்களது அந்தப் போராட்டத்தினுல் தாங்களும் வாழ்ந்து உலகையும் வாழவைப்பார்கள்.

அந்த மனிதர்கள் மகான்கள். நாம்? அவர்களோடு ஒப்பிட்டால் துரும்பிலும் கேவலமானவர்கள். ஆசாபாசங்களுக்கு அடிமையாகி, அவற்றிலிருந்து மீட்சி பெறுவதே எமக்குப் பெரிய போராட்டமாக இருக்கின்றது.

அவர்களைப்போன்ற ஒரு சிறு பகுதி, உடல் உழைப் பின்றி வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்தால் வாழ்க்கைக்கு அஞ்சிப் பயந்து, அமெரிக்கா போன்ற இடங்களுக்கெல்லாம் ஓட முடிகின்றது. தங்கள் கண்கள் போன்ற இரண்டு செல்வங்களையும் இழந்த இராமசாமி, வள்ளியம்மை போன்றவர்களால் எங்கே ஓட முடியும்? இந்த மண்ணைத் தவிர, வேறு போக்கிடம் அவர் களுக்கு இருக்க முடியாது. வாழ்ந்தாலும், செத்தாலும், அழுதாலும் சிரித்தாலும் எல்லாம் இந்த மண்ணில்தான்.

திங்கட்கிழமை வந்து, பள்ளிக்கூடம் தொடங்கும்வரை சிவபாதம் இல்லை என்ற விஷயம் எனக்குத் தெரியாது. தலைமை ஆசிரியரைக் கேட்டபோது, அவரும் சிவபாதம் எங்கோ போய்விட்டதாகச் சொன்னுர்.

இப்போது அவரைப்பற்றி எண்ணிப் பார்க்கக்கூடிய ஒரு பெரிய விஷயமாக அது எனக்குத் தோன்றவில்லை.

காரணம்?

பூரணம் அக்காவின் அமெரிக்காப் பயணமா? அதுவுமா யிருக்கலாம். அத்தோடு கூடிய காரணம் புரியாத ஒருவித விரக்தியான வெறுப்பு. அது மனத்துக்கோ புலன்களுக்கோ எட்டாத ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடம் தொடங்கியதும் கமலாசனி மட்டுந்தான் வந்தாள்.

பத்மா கமலாஜனியிடம் லீவுக் கடிதம் கொடுத்திருந்தாள்.

பகல் உணவு முடிந்ததும் கமலாஜனி பிரயாண அலுப்போடு படுத்து உறங்கிவிட்டாள்.

கமலாஜனி கொண்டுவந்திருந்த புதினப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு எனது வகுப்பில் போயிருந்தேன்.

பத்திரிகையில் எனது கவனம் ஓடவில்லை. ஒப்பனேக்கு அதைக் கையில் வைத்துக்கொண்டு, குரங்கு மனத்தைத் தன்பாட்டுக்கு அலேயவிட்டுக்கொண்டிருந்தேன்.

கார் ஒன்று பள்ளிக்கூட வாசலில் வந்துநின்ற சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அதிலிருந்து முதலில் சிவபாதமும், அடுத்ததாக அம்மாவும், பரமேசும் இறங்கி வந்தார்கள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லே. ஒரே திகிலாக இருந்தது. ஆனுலும் இருந்த இடத்தைவிட்டு எழும்பவுமில்லே.

சிவபாதம் என்னே நோக்கி வந்துகொண்டிருந்தார். அவரைத்தொடர்ந்து பரமேசும், அம்மாவும் வந்தனர்.

பரமேசின் கையைப் பிடித்துக்கொண்டு, ''எங்களே ஆசீர்வதியுங்கள்'' என்ருர் சிவபாதம்.

''மனமார உங்களே வாழ்த்துகின்றேன்'' என்றேன்.

என் கண்கள் நிறைந்து குளமாயின. நிச்சயமாக அது துன்பக் கண்ணீரல்ல. ஆனந்தக் கண்ணீர்.

''நாங்கள், என் அன்னேயிடமும் ஆசி பெறப் போகின்ருேம்'' என்ருர் சிவபாதம்.

''நீங்கள் அவரிடம் போக முடியாது'' என்றேன்.

அவர் என்னேப் பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வெள்ளிக்கிழமை காலையில் விமான மூலம் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்'' என்ற சேதியைக் கூறினேன்.

''எப்போது திரும்புவார்'' எனக் கேட்டார்.

''அவரது மனத்தைப் பொறுத்தவரை திரும்புவதாக உத்தேசமில்லை''

சிவபாதம் சிறிதுதூரம் விலகிச் சென்ருர். அம்மா என் அருகில் வந்துநின்ருள். அவளுக்குக் கிடைக்கமுடியாத ஒரு மருமகன் கிடைத்துவிட்ட திருப்தி. அந்தத் திருப்தியின் ஊடே பொலிவான ஒரு தோற்றத்துடன் எனக்குத் தோன்றினுள்.

பரமேஸ், சிவபாதத்தின் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரைத் தனது கரங்களால் துடைத்துக் கொண்டு நின்ருள். அவளது அந்தக் கையைக் கெட்டியாகப் பிடித்தபடி குழந்தைபோல் கேவிக் கேவி அழுது கொண்டு நின்ருர் சிவபாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1:5/2

முல்லைத்தீவை பிறப்பிடமாகக் கொண்ட மணிவாணன், 1-12-1939 இல் பிறந்தவர். நான்கு தொடர் கதைகளையும், அறுபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். அரசாங்க லிகிதராகப் பணியாற்றும் இவரின் சொந்தப் பெயர் வி. க. இரத்தினசபாபதி.



இது மண்ணின் கதை!
மண்ணைப் பிரிந்து அகதி
களான மக்களின் கதை.

இது சமூகத்தின் கதை!
சமூகத்தின் பலவீனங்கள்
ஆசாபாச உணர்ச்சிகளின் கதை

இது உழைப்பின் கதை!
உழைப்பையே உயிர்த்-
துடிப்பாகக் கொண்ட
சந்ததியின் கதை.
இது ஒரு யுகத்தின் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org